இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று

# பூவரசு



POOVARASU ஆடி - ஆவணி 1992

உங்கள் அன்றாட தேவைகள் எதுவாயினும்
இன்றே வருகை தாருங்கள்!

**S.J.P.Traders.**

உங்கள் விருப்பத்திற்கேற்ப
பழைய, புதிய திரைப்படங்களின்
**VIDEO CASSETTE** வாடகைக்கும்
திரைப்படப் பாடல்கள் அடங்கிய
**AUDIO CASSETTE & CD** விற்பனைக்கும்
பெற்றுக்கொள்ள–
**S.J.P.Traders.**

உங்கள் இல்லத்தேவைக்கேற்ற
இலங்கை, இந்திய உப உணவுப்பொருட்கள்,
மரக்கறி,மீன் வகைகள், குடிவகைகள்

எவர்சில்வர் சாமான்கள், கவரிங் நகைகள்,
அலங்காரப்பொருட்கள் என்பனவற்றை மலிவுவிலையில்
நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

சிங்கப்பூர்,இந்தியா மற்றும் நாடுகளுக்கு
நீங்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிரும்பினால்
பயணச்சீட்டுக்கள் பெற்றுத்தரப்படும்.

உங்கள் தேவைகளுக்கு இன்றே வருகை தாருங்கள்!
உங்களை அன்புடன் அழைக்கிறது–

S.J.P.Traders,
Sielwall.7
2800 Bremen 1.
Tel:0421/71547

# பூவரசு

*POOVARASU.*

TAMILISCHE KULTUR MAGAZIN

இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று

ஆடி-ஆவணி 1992.

*இனிய தமிழ் ஏடு.*


"Poovarasu"
Sinniah Maheswaran,
Neuwieder Str-32,
2800 Bremen-41,
Germany.


உலகமே நம் இல்லம்;
உள்ளமெல்லாம் நம் சொந்தம்.


உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்


இதழ்: 10


உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்.

# வீரகேசரியின் பார்வையில்.....

## 'பூவரசு' ஆண்டுமலர்

புலம்பெயர்ந்து மேலைத்தேய நாடுகளில் வாழ்கின்ற நம்மவர்கள் தமது கலை இலக்கிய தாகத்தினைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டும், சொந்த வாழ்வின் விருப்பு வெறுப்புகளை கஷ்ட நஷ்டங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் பொருட்டும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வெளியிட்டு தம்மை இனங்காட்டிக் கொள்ளுகின்றனர்.

இந்த வகையிலே ஜெர்மனியில் இருந்த வெளிவருவது "பூவரசு" என்ற இரு திங்கள் ஏடு. எழுத்தாளர் இந்த மகேஷை ஆசிரியராகக் கொண்டு வெளியாகும் இந்த ஏட்டின் ஆண்டு மலர் (தை-மாசி 1992) எமக்குக் கிடைத்தது.

தைப்பொங்கலிடும் சிறுவர்களின் அழகிய வண்ணப் படத்துடன் வெளியாகியுள்ள பூவரசு "உலகமே நம் இல்லம் உள்ளமெல்லாம் நம் சொந்தம்" என்ற தாரகமந்திரத்தினைக் கொண்டுள்ளது.

மா. சுந்தரமூர்த்தி (கனடா) இ. சம்பந்தன் (ராட்டிங்கன்) செ. யோகநாதன் (பிறேமன்), உட்பட பலரின் வாழ்த்துச் செய்திகள் பூவரசினை அலங்கரிக்கின்றன.

"என் வாசகர்களைத்தேடி" என்ற இந்த மகேஷ் எழுதும் தமது எழுத்துலக சிந்தனைகள், அவரத "மனிதனைத் தேடுகிறேன்" தொடர் கதை, பார்வை (திவான்), பிரிவு (குப்பிளான் ஜெகன்) ஆகிய சிறுகதைகள், "தமிழ் நாட்டைச் சுற்றினோம்" என்னும் வி. ஆர். வரதராஜாவின் பிரயாணக் கட்டுரை. சித்திரா மணிவண்ணன் . இளந்திவகன், வி. ஆர். வரதராஜா ஆகியோரின் கவிதைகள், "எங்கள் இலந்தளிர்கள்" என்னும் தலைப்பில் சிறுவர் பகுதியில் அம்பியின் தைப்பொங்கல் கவிதை, ஆசிரியை சு. ஞானேஸ்வரியின் தைப்பொங்கல் கட்டுரை, "சமைத்துப் பார்க்கலாம்" பகுதி, மற்றும் உலக அரசியல் கட்டுரைகள், ஆகியனவும் "பூவரசு"வுக்கு களையூட்டுகின்றன.

"சந்திப்போம் சிந்திப்போம்" பகுதியில் பிரேமனைச் சேர்ந்த திரு. இராஜன் என்பவர் இவ் ஏட்டில் எழுதியுள்ள "நாங்கள்" என்னும் கட்டுரை "எங்கள் எதிர்காலச் சந்ததிக்கு எங்கள் மொழி மொழி என்ன என்று தெரியாத அளவுக்கு எங்கள் இன்றைய பாதை அதன்பாதாளம் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது" என்ற வரிகளும் சிந்திக்கத்தக்கவை.

—லக்ஷ்மி

நன்றி: வீரகேசரிக்கும் லக்ஷ்மி அவர்களுக்கும்.




அன்பு வாசக நெஞ்சங்களுக்கு! பூவரசு இனிய தமிழ் ஏடு, வாசகர்வட்டம் என்னும் ஒரு அணியின்கீழ், கலை,இலக்கிய ஆர்வலர்களை உள்ளடக்கிய தனது வாசகர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது தாங்கள் அறிந்ததே! பூவரசு தனது வாசகர்கள் அனைவரதும் கருத்துக்களைப் பெறுவதற்காக - வாசகர் கருத்துக்கோவை ஒன்றை இந்த இதழுடன் இணைத்துள்ளது. தரப்பட்டுள்ள கேள்விகளுக்கான பதில்களில் உங்கள் கருத்துக்கு ஒத்த கருத்துள்ள பதில்களில் (x) குறியிடுங்கள். பதில்தர விரும்பாத கேள்விகளைத் தவிர்க்கலாம். மேலதிகமாக இணைக்கப்பட்டுள்ள கேள்விக்கோவைகளை உங்களிடமிருந்து பூவரசைப் பெற்று வாசிக்கும் உங்கள் நண்பர்களுக்கோ, உறவினர்களுக்கோ தந்து அவர்களது கருத்துக்களையும் நாங்கள் அறிய உதவுங்கள். தரமான சஞ்சிகைகளை வளர்க்கும் பணியில் உங்கள் கருத்துக்களே முன்னிடம் வகிக்கின்றன என்பதை மறவாதீர்கள். உங்கள் பதில்கள் வந்து சேரவேண்டிய இறுதிநாள்: 30.07.1992.

இனிய தமிழ் ஏடு.

உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்.

# பூவரசு வாசகர் வட்டம்




விடியும் காலைகள்
விடிந்திடும் வாழ்வுகள்
மடியும் காரிருள்
மனமெல்லாம் பேரொளி

கோவிலில் நிதமும்
கொண்டாடும் பூசையும்
வாயினால் சொல்லிடும்
வாழ்த்துப் பண்களும்

எனக்கினி வேண்டாம்
எமபயம் எனக்கில்லை
தன்னை அறிந்தவன்
தடுமாற முடியுமா?

இதயக்கூட்டினுள்
இறைவன் வாழ்கிறான்
இதை அறியாதவர்
எங்கெங்கோ அலைகிறார்.

நாத்திகம் பேசிடவா
நம்மை அவன் படைத்தான்
ஆத்திகம்பேசினாலும்
அடைவது ஒன்றுமில்லை

அன்பின் ஜோதியாய்
அருளோடு ஆள்பவன்
ஆற்றாமை மனங்களையே
தேற்றிடவிரைபவன்

உள்ளக் கோயிலினிலே
உயிர்மூச்சய் உறைபவனை
கள்ளமனமே நீ
கரங்கூப்பி வணங்கிவாழ்!

*—சித்ரா மணிவண்ணன்.*

---

கனவு நிஜமானால்.....!

கும்மியடித்தார்கள்
கும்மியடித்தார்கள்
கொலுசுகள் குலுங்கிட
கும்மியடித்தார்கள்
கோவில்மணிகேட்டு
கும்மியடித்தார்கள்
குவலயம்கேட்டிட
கும்மியடித்தார்கள்!

எங்கள் தமிழினம்
மீண்டுமொருமுறை
ஆண்டிடவந்தது
ஆட்சியைப்பிடித்தது
ஆனந்தம் பொங்கிட
தமிழர்கள் கூடியே
ஆனந்தக் கும்மியடித்தனர்
அகிலம்பூராவும்
அதன் ஒலிகேட்டிடவே!


ஐக்கியநாடுகள்
சபையினர்கூடியே
அன்னைத்தமிழுக்கோர்
கொடிதனை ஏற்றினர்!
பட்டொளிவீசியே
பறந்திட தமிழ்க்கொடி
பாசம்கொள் தமிழரும்—கூடி
ஆடினர் கும்மியே!

# தொடரும் பயணம்...

பட்டதுயர்களை
பாட்டாகமாற்றியே
பாடியதமிழரை
பார்த்திட்டேன் ஈழத்தில்
அகதிகள் வாழ்க்கை
அகன்றது எனக்கோரி
அகிலத்து தமிழரும்
ஆடினர் பாடினர்
கூடியேநின்று
கும்மியும் அடித்தனர்!!

கண்ணினைமூடி
கண் அயர்ந்திட்டவேளையில்
கற்கண்டுசுவையோடு
கண்டிட்ட இக்காட்சியை
கனவென்று நினைக்காது
கண்களைவிழித்திட்டேன்
விழித்திட்டபின்தானே
நான் விளங்கிட்டேன் கனவென்று
ஆனால்—
கனவினில் கண்டவை
நிஜமாக மாறினால்..!

*வேலணையூர் பொன்னண்ணா*
(டென்மார்க்)



## பெண்ணின் பெருமை.

அன்று—
வீட்டுக்குள் ஓடி ஓடி
ஒளிந்திருக்கும் பெண்ணினமே

சமையல் அறையில்
அடுப்பு ஊதி உன்
கண்கள் கண்ணீரைத்தான் பார்க்கும்

இருளில் இருக்கும்
பெண்களைப்பார்க்க உன்
கைகள் அகப்பைபிடித்து
உரலில் இடித்ததுபோதும்
என நினைத்துவிட்டாய்போலும்.

ஆதலால்தான் இன்று
விடிவு இது என நினைத்து
நம் தாய்நாடாம் தமிழ்
நாட்டைக்காக்கத்துணிந்துவிட்டாய்

துப்பாக்கியை உன்
இரு கைகளிலும் ஏந்தி
துணிவாக சென்றுவிட்டாய்
பெண்ணினமே நீ ஒரு
புரட்சிபெண்ணாகவே
மாறிவிட்டாய்.

*—சி.சிவசங்கரி.*

# Theaterspektakel mit 120 Kindern

## „Mukona" fand begeistertes Publikum auf dem Sedanplatz

**Vegesack** (iek). Am Anfang war die Erde. Das Leben war einfach und friedlich. Mit diesem zugegeben etwas einfachen Einstieg in die Menschheitsgeschichte begann am Freitag nachmittag auf dem Sedanplatz ein Massentheaterspektakel mit rund 120 Kindern verschiedener bremischer Sozialeinrichtungen. Idee und Drehbuch stammen von dem tamilischen Schriftsteller Siniah Maheswaran, der heute in Osterholz-Tenever lebt und im dortigen Kulturbüro arbeitet. So entstand ein rund einstündiges Theaterprojekt, das in einem knappen halben Jahr einstudiert wurde.

Das Musik- und Körpersprachentheater, das Anfang Juni auf der „Breminale" Premiere feierte und den Titel „Mukona" trägt, knüpfte an die stadtteilübergreifenden Kinderkulturprojekte der vergangenen Jahre an und wurde in Kooperation mit Spielhäusern, Kindertagesheimen, Kinderhorten, Kulturläden und diversen Förderern realisiert. Als Freilufttheateraufführung machte das Riesenensemble nun auch Station in Vegesack, und wie gut der Ort der Veranstaltung gewählt war, zeigte das doch rege Interesse der Nordbremer Bevölkerung, die schon bei den Aufbauarbeiten ein Auge riskierte.

Zwischen dem Bürgerhaus und dem Finanzamt wurden die beiden Spielflächen – eine Bühne für die beiden Musiker Sabine Diepenbruck und Michael Carlberg sowie eine von einer riesengroßen „Stofferde" bedeckte Fläche – für die Akteure des Nachmittags freigehalten und für die Vegesacker Premiere hergerichtet. Pünktlich um 16 Uhr begann dann das Theaterspektakel, und zu diesem Zeitpunkt hatten sich rund 100 Schaulustige eingefunden.

Das Stück beschrieb die widersprüchlichen Gedanken und Empfindungen zur 500jährigen Wiederkehr der Entdeckung Amerikas durch Columbus, die Siniah Maheswaran in seinem Drehbuch festgehalten hatte und aus der nun die Geschichte des Stückes entwikkelt wurde. Dann ging es vor allem um Macht und Ohnmacht, Eroberung und Unterdrükkung, Freund und Feind sowie um die Auseinandersetzung mit der Fremdartigkeit des Anderen. Damit war zugleich der Bezug zur aktuellen politischen Realität mit Ausländerfeindlichkeit und Intoleranz hergestellt.

Für die Organisatoren des Theaters sollten diese beiden Schwerpunkte und die daraus resultierenden Probleme und Konflikte in das Schauspiel Eingang finden. Dazu hatten die Schauspieler einen riesengroßen weißen Schleier – symbolisch als Schleier der Zeit – aufgehängt, unter dem eine aus neun Meter Stoff gearbeitete Erdkugel die eigentliche Spiel- und Aktionsfläche für die 120 Darsteller im Alter von sechs bis 13 Jahren bildete. Die nun folgenden Szenen beschrieben in angerissenen Sequenzen die Menschheitsgeschichte, wobei die kleinen Darsteller die Elemente Luft, Wasser, Erde und Feuer in dazu farblich passenden Kostümen präsentierten.

Im zweiten Teil des Stückes – die Zeit war vergangen, und das nicht nur in der Menschheitsgeschichte – bevölkerten neue Menschen mit großen Nasen, Ohren, Augen und Füßen die Erde und zerstörten die einstige Idylle des friedlichen Zusammenlebens, so das Drehbuch. Durch überzogenen Egoismus, Eitelkeit und Machtlust brachen Kriege aus, weil jeder dieser neuen Erdenbürger die Erde für sich besitzen wollte. Diese Szenen gehörten zu den spielerisch stärksten des Ensembles, denn nun herrschte auf der Spielfläche ein fast anarchistisches Treiben – gerade so, wie in der Geschichte beschrieben, denn die Erde begann sich zu wehren und zerstörte mit ihren Naturgewalten das, was ohnehin durch Menschenhand geschaffen war.

Die große Stille trat daraufhin ein, und nach der Zeit der Besinnung erhoben sich einzelne Menschen von der zerstörten Erde und begannen ein neues Leben. Ob sie es schaffen werden? Diese Frage blieb offen, denn das Schicksal dieser Menschheit liegt in der Hand jedes Einzelnen. Dies wurde deutlich als Ergebnis des sehr gelungenen Kindertheaters.

Viel Beifall gab es für die mutigen Darsteller, die mit diesem überaus sehenswerten Spektakel nicht nur die Tür zu mehr Toleranz und Miteinander einen kleinen aber notwendigen Spalt weiter aufgestoßen hatten, sie hatten auch viel Spaß an der Sache gehabt, und das ist letztendlich für Kinder in diesem Alter noch etwas wichtiger als die große Politik.

120 சிறுவர் சிறுமியர் பங்குகொண்ட நாடக அரங்கம்.

சின்னையா மகேஸ்வரனின் சிந்தனையில் உருவான "MUKONA"

இம்மாதம் 5,6,12,19 ம் திகதிகளில் பிறேமன் நகரின் பலபாகங்களிலுள்ள அரங்குகளில் அரங்கேற்றப்பட்டு ஆயிரக்கணக்கான இரசிகர்களைக் கவர்ந்திருக்கிறது "MUKONA"

செனேவர்-கலாச்சாரநிலையத்தில் பணியாற்றிவரும் திரு: சின்னையா மகேஸ்வானின் சிந்தனையில் உருவான இந்நாடகம்,
KINDERTAGESHEIMEN,KINDERHORTEN,KULTURLÄDEN
ஆகிய இடங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 120 சிறுவர், சிறுமியர் பங்குகொள்ள,அருமையான இசையுடன் அரங்கேறிற்று.
மனிதவாழ்வின் ஆரம்பம்,இயற்கையோடு இணைந்த மனிதவாழ்வு, நாகரீகமுதிர்ச்சியின்பயனாக மனிதரிடையே தோன்றிய வர்க்க முரண்பாடுகள்,அவற்றின் விளைவான தன்னாதிக்க உணர்வு, ஒருசமூகம் மற்றைய சமூகத்தை அடிமைகொள்ளமுனைதல்,அதன்விளைவான போராட்டங்கள், மனிதரை மனிதரே அழிக்க இயற்கையின் வடிவங்களான நீர்,நிலம்,தீ,காற்று இவைகளும் மனித இனத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுதல்....
இவைகளை வெளிப்படுத்தும் விதமாக-
நிலம்,நீர்,காற்று,நெருப்பு என்பனவற்றைப்பிரதிபலிக்கும் வண்ணம் அவற்றின் நிறங்களில் உடுப்புக்களை அணிந்து,இயற்கையின் அமைதியையும், அவற்றின் கொந்தளிப்பையும் தமது அங்க அசைவுகளுடன் பிள்ளைகள் இசைக்கேற்ப வெளிப்படுத்தியவிதம் பார்வையாளர்களை பரவசப்படுத்திற்று.
மனிதர்களுக்கிடையே உருவான பிரிவுகளை வெளிப்படுத்த மனிதவரலாற்றின் முதல் மனிதர்களைச்சித்தரிக்க இலைகுழை உடைகளை ஒத்த நிறங்களிலான உடைகளில் சிறுவர்கள் தோன்றினார்கள்.
நாகரீகம் அடைந்த ,அதேசமயம் தன்னாதிக்க உணர்வுடைய புதிய மனிதர்களைச்சித்தரிக்க அவர்கள் பெரிய காது, பெரியமூக்கு,பெரிய கண்கள் என்பனவற்றைக் கொண்டவர்களாக பிரிக்கப்பட்டிருந்தார்கள்.
'மனிதநேயத்தோடு வாழமுயலும் மனிதர்களால்மட்டுமே இந்த உலகம் அமைதிபெறும்,இயற்கையும் மனிதனை நேசிக்கும்' என்கின்ற தத்துவத்தை அழகாக வெளிப்படுத்துகிறது இந்நாடகம்.
பலத்த ஆரவாரமான கைத்தட்டல்களை இந்நாடகத்தில் பங்குகொண்ட பிள்ளைகள் அனைவரும் பெற்றுக்கொண்டார்கள்.
இந்நாடகத்தின்மூலம் ஜெர்மன் ரசிகர்கள்மத்தியிலும் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ள சின்னையா மகேஸ்வான் அனைவரது பாராட்டையும் பெறுகிறார்.
அவரது எழுத்துப்பணி மேலும் பல வடிவங்களில் பரிணாமம்பெற நாமும் வாழ்த்துவோம்.
(கடந்த ஆண்டு இந்நாடக ஆசிரியரால் எழுதப்பட்டு,ஜெர்மனில் மொழிபெயர்க்கப்பட்ட'KONIG DER TIERE' என்ற நாடகம் 25 பலநாட்டுச் சிறுவர்களினால் நடிக்கப்பட்டது பூவரசு வாசகர்கள் அறிந்த பழைய செய்தி.பிறேமன் பாடசாலைகளுக்கிடையே தெரிவு செய்யப்பட்ட நாடகங்களில் இந்நாடகமும் பரிசுபெற்றிருப்பது புதிய செய்தி.)

-சித்ரா மணிவண்ணன்.

# என்ன நடக்கிறது?

✽

ஜேர்மனியின் கூட்டணி அரசில் விரிசல்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன. மீண்டும் இணைந்த ஜேர்மனியின் பொதுத்தேர்தலில் இலகுவாக வெற்றிபெற்று ஆட்சியமைத்த கெல்மத்கோலின் அரசின் 18 மாத காலங்களிலேயே தோன்றியுள்ள இப்பிளவுகள் பல்வேறு ஊகங்களையும் தோற்றுவித்துள்ளன. 1974ம் ஆண்டு மே மாதம் தேர்தலில் சிறப்பாக வெற்றிபெற்ற வில்லிபிராண்ட் தலைமையிலான அரசு 18 மாதங்களில் இராஜினாமாச் செய்ததையும் கூட்டணியில் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகளும் பொது ஊழியர்களின் வேலைநிறுத்தம்காரணமாக ஏற்பட்ட நிலைமைகளுமே மேற்படி இராஜினாமாவுக்கான மறைமுகக்காரணங்கள் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ள அரசியல் அவதானிகள் தற்போதும் அவ்வாறான நிலை தோன்றியுள்ளதாக கருத்துவெளியிட்டுள்ளார்கள்.வெளிநாட்டமைச்சராக நீண்டகாலம் கடமையாற்றிய கென்சர் சென்ற ஏப்ரல் இறுதியில் இராஜினாமாச் செய்வதாக அறிவித்ததைத்தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் கான்சிலர் கெல்மத்கோலின் அரசின் பலமற்ற நிலையை தெளிவாகவே காட்டின. 4.8 வீதத்துக்குமேல் சம்பள உயர்வை திடமாக ஏற்றுக்கொள்ளமுடியாது என அறிவித்த அரசு இறுதியில் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. 18 ஆண்டுகள் வெளிநாட்டமைச்சராக இருந்த கென்சர் தனது இராஜினாமாவுக்குத் தெரிவித்திருந்தகாரணங்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப் படவில்லையென்றே சொல்லவேண்டும்.செல்வாக்கிழந்துகொண்டிருக்கும் ஒரு அரசில் தொடர்ந்து இருந்து தனது மதிப்பைக்குறைத்துக்கொள்ள கென்சர் விரும்பவில்லையென்றே தோன்றுகிறது.தேர்தலை அடுத்து செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி வெளிநாட்டமைச்சர் பதவிFDP கட்சிக்கே ஒதுக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் நிதியமைச்சராக இருந்த கிளவுஸ்கிங்கெல் வெளிநாட்டமைச்சரானார்.தங்களைக்கலந்து ஆலோசிக்காமல் மேற்படி மாற்றத்தைச் செய்ததையிட்டு கூட்டணி அரசின் இன்னொரு கட்சியான CSU பெரும் அதிருப்தி கொண்டுள்ளது.

✽


நெல்சன் மண்டேலாவுக்கும் லிபியத்தலைவர் கடாபிக்குமிடையே நெருக்கமான உறவு இருப்பது ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயுள்ள உறவுகளில் கசப்புணர்வுகளை ஏற்படுத்திவருகிறது. நெல்சன் மண்டேலா விடுதலையானபின் கடந்த இருவருடங்களில் 4 முறை லிபியாவுக்கு விஜயம் செய்துள்ளார். கடந்த இருவருடங்களில் லிபியா ஆப்பிரிக்க தேசியகாங்கிரசிற்கு 10 மில்லியன் டொலருக்கும் அதிகமான தொகையைக்கொடுத்துள்ளது.சென்ற ஜனவரி நடுப்பகுதியில் லிபியா சென்று திரும்பிய நெல்சன் மண்டேலா அமெரிக்க ஜனாதிபதியை தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சித்து,முடியாமல் அமெரிக்க அதிகாரிகளிடம் லிபியாமீதான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.இச்சம்பவம் கசப்புணர்வுகளை மேலும் வளர்த்துள்ளது.

அமெரிக்காவின் குண்டுவீச்சுத் தாக்குதல்களில் இருந்து கியூபாவின் தலைநகரான ஹவானா மக்களைக் காக்குமுகமாக ஜனாதிபதி கஸ்ரோ பல ஏற்பாடுகளைச்செய்துவருகிறார்.கடந்த 11 ஆண்டுகளாக 10 ஆயிரம் கியூபாவின் படையினர் பல சுரங்கப்பாதைகளையும் நிலவறைகளையும் அமைத்துவருகின்றனர்.24 மணிநேரமும் வேலைசெய்துவரும் படையினர் அமைத்துள்ள சுரங்கப்பாதைகளில் டாங்கிகளையும் பாதுகாத்துவைக்கமுடியும்.

ஜூலைமாதம் 13ம்திகதி இந்திய ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் எனவும் ஜூன் 24 ம்திகதிவரை வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப் படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற மேமாத இறுதிமுதல் வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.குறிப்பாக யாழ்மாவட்டத்தின் கரையோரப்பகுதிகள் தொடர்ச்சியான குண்டு வீச்சுக்களுக்கு இலக்காகிவருவதுடன் யாழ்நகரை அண்டியுள்ள கிராமங்களிலும் பலமான குண்டுவீச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.இதையடுத்து வடமராட்சி கரையோரப்பகுதிமக்கள் இடம்பெயர்ந்துவருகின்றனர். வல்வெட்டித்துறை,பொலிகண்டி,உடுப்பிட்டி ஆகிய பகுதிகளைச்சேர்ந்த மக்கள் கரவெட்டி,வாணி ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். பலவீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் பல பொதுமக்களும் மேற்படி குண்டுவீச்சுக்களின்போது கொல்லப்பட்டுள்ளனர்.இதில் மூவர் யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களாவர்.கட்டுவன் தெல்லிப்பழைப் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களை அடுத்து தெல்லிப்பழைப்பகுதியை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகவும் அறியப்படுகிறது. துர்க்கை அம்மன் ஆலய மணிக்கூட்டுக்கோபுரமும் அதன் அருகேயுள்ள அனாதை இல்லமும் சேதமாக்கப்பட்டுள்ளது.மேலும் இணுவில் வைத்தியசாலையும் குண்டுவீச்சுக்கு இலக்காகியுள்ளது. பரவலாக யாழ்மாவட்டத்தில் பலவீடுகளும் பெரிய கட்டிடங்களும் குண்டுவீசிச் சேதமாக்கப்பட்டுள்ளன.தெல்லிப்பழை அச்சுவேலி ஆகிய பகுதிகளைச்சேர்ந்த 2800 குடும்பங்கள் வீடுவாசல்களை இழந்து அகதிகளாக யாழில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.இறுதியாகக்கிடைத்த செய்திகளின்படி யாழ்மாவட்டத்து மக்களை பாதுகாப்பு வலயங்களுக்குச் செல்லுமாறு இலங்கை அரசு வானொலிமூலம் கோரிவருவதுடன் வடமாகாணத்தில் உள்ள இராணுவ முகாம்களில் பெருந்தொகையான படையினரையும் ஆயுதங்களையும்குவித்துவருகின்றது. எந்த நிமிடமும் யாழ்மாவட்டம்மீது முழு அளவிலான தாக்குதல்கள் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

-எஸ்.கந்தசாமி.





மெல்லிசைக் கலைஞர்

# கலைஞர்கள்

ஐரோப்பியநாடுகளில் ஆங்காங்கே மறைந்திருக்கும் நல்லபல கலைஞர்களை பூவரசு தன்வாசகர்களுக்கு
அறிமுகப்படுத்தும் இந்தப்பகுதியில்,தற்போது
பிறேமன்நகரில் வாழ்ந்துவரும் வில்லிசைக்கலைஞர்
இராஜன் அவர்களை பூவரசு தன் வாசகர்களுக்காகச் சந்திக்கிறது.

இயல் இசை நாடகம் என்பது முத்தமிழ்.
இந்தவரிசையில் இசை எல்லோர்மனத்தையும் கவர்வது.
சுலபமாய் நல்லகருத்துக்களை மக்கள்மத்தியில் எடுத்துச் செல்ல உதவுவது.
பல்வேறுவகையான இசைவடிவங்கள் தமிழில் உண்டு.
வில்லிசை என்பது பாமரர்களையும் வசீகரிக்கும் சக்திபடைத்தது.
நம் தாயகத்திலும் தமிழ்நாட்டிலும் வில்லிசையை வளர்த்தவர்கள் பலர். இன்று மேலைநாடுகளிலும் வில்லிசையை அறிமுகப்படுத்துபவர்களில்
இராஜன் வில்லிசைக்குழுவினர் முன்னிற்கின்றனர் என்பது மறைக்கப்படமுடியாத உண்மை.

நாச்சிமார் கோவிலடி இராஜன்.

*விரல்களின் எண்ணிக்கைக்கும் அப்பாற்பட்ட வருடங்களுக்குமுன்பே வில்லிசைமூலம் அறிமுகமானவர் நீங்கள். முதன்முதலாக நீங்கள் வில்லிசை நிகழ்த்தியது எப்போது?*

1969ல் நயினாதீவில் எனது முதலாவதுநிகழ்ச்சியை நடாத்தினேன். அந்தநிகழ்ச்சியில் என்னோடு பங்குகொண்ட,என் பள்ளிக்கால நண்பர் பாலாவும், லோகேந்திரன் என்பவருமே நான் வில்லிசைக்க காரணகர்த்தாக்கள்.

*வில்லிசையில் உங்களுக்கு ஆர்வமேற்படக்காரணம்?*

மிக இளம்பிராயத்திலேயே எனக்கு ஏற்பட்ட நாடக அனுபவமே வில்லிசையில் எனக்கு ஆர்வத்தை உருவாக்கியது.

*வில்லிசையில் உங்கள் குருவாக நீங்கள் யாரை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள்? எதற்காக?*

யாழ்ப்பாணத்துக்கு வில்லுப்பாட்டை அறிமுகம் செய்தவர் திருப்பூங்குடி வி.க.ஆறுமுகம் அவர்கள்.அவர் குழுவில் பங்குகொண்டோர் வில்லிசைக் கலைஞானார்கள்.அவரின் வில்லுப்பாட்டைக்கேட்டுப்பார்த்தும் வில்லிசைக் கலைஞானார்கள்.நான் இரண்டாவதுவழியைச் சார்ந்தவன்.அவரையே குருவாகக் கொண்டேன்.தவிர ஆறுமுக மாஸ்ரர் எமது கல்லூரி ஆசிரியருங்கூட.

*அவரது குழுவில் இருந்து வந்த வில்லிசைக்கலைஞர்களை உங்களால் குறிப்பிடமுடியுமா?*

நிச்சயமாக! முதலாவதாக பதூன் வடிவேலு,அவரையடுத்து அமரர் வேணுமகாதேவன்,மூன்றாவதாக சின்னமணி அண்ணர். வேணுமகாதேவன் இடையிடையே சில நிகழ்ச்சிகளை நடத்தியபோதும் தொடர்ந்து இறுதிவரை மாஸ்ரருடனேயே இருந்தார்.

*வில்லிசை என்பது முன்னைய மரபுக்குட்பட்ட ஒரு நிகழ்ச்சியாக நீங்கள் கருதுகிறீர்களா அல்லது அதற்கென்று காலக்கணிப்புக்கள் ஏதேனும் உண்டா?*

வில்லிசையை மரபுக்குட்பட்ட ஒருநிகழ்ச்சியாகவே நான் கருதுகிறேன். எந்தக்கலையும் கால ஓட்டத்துக்கேற்ப சில புதிய அம்சங்களைச் சேர்த்துக் கொள்ளுதல் அவசியம்.ஆனால் அதற்குரிய தனித்துவத்தைப் பாதிக்காத வரையிலேதான் புதிய உத்திகள் கையாளப்படவேண்டும்.

*வில்லிசைமூலம் நீங்கள் தமிழுக்கு அல்லது தமிழர் சமுதாயத்துக்கு எப்படிப்பணியாற்றமுடியும் என்று கருதுகிறீர்கள்?*

எங்கள் நிகழ்ச்சிகள்மூலம் கலாச்சாரத்தைப்பற்றிச்சொல்கிறோம்–நகைச்சுவைமூலம்.தற்காலவாழ்வின் தேவையை–தேவையற்றதைப்பற்றி ரசிகர்களைச் சிந்திக்கச்செய்கிறோம்.நகைச்சுவையை வில்லிசையோடு இணைப்பது சமூகப்பிரச்சினையைச் சொல்வதற்காகத்தான்.எங்கள் நிகழ்ச்சிகளை ரசிப்பவர்களை சிந்திக்கத்தூண்டுவதே நமது சமுதாயத்துக்கும் தமிழுக்கும் நாம் செய்யும் சேவையல்லவா? இன்னும் நிறைந்த அளவில் சமுதாயத்துக்கு பணிசெய்யவேண்டிய சரியான காலக்கட்டம் இதுதான் என்றும் எண்ணுகிறேன்.

*கதாப்பிரசங்கம்,கதாகாலாட்சேபம்,வில்லிசைபோன்றவடிவங்களில் புராண,இதிகாச,இலக்கியவடிவங்களே பெரும்பாலும் இடம்பெற்றுவருகின்றன. புதிதாய்,புதுமையாய் நிகழ்கால சம்பவங்களுக்கேற்ப நீங்கள் ஏதேனும் நிகழ்ச்சித்தயாரிப்பில் ஈடுபட முடியாதா?*

புராணக்கதைகளை வில்லிசைத்தபோதும் நாம் சமூகவிடயங்களை –நகைச்சுவைமூலம் அவ்வப்போது சொல்லியே வந்தோம். 75ம் ஆண்டிலேயே மஹாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் ''கண்மணியாள் காதை''யை வில்லிசைத்தோம்.அந்தக்காலகட்டத்துக்கு மிக அவசியமான கருவைக் கொண்ட மிக நல்ல சமூகக்கதை அது.இன்று இந்தக்காலக்கட்டத்துக்கு ஏற்றதோர் சமூகக்கதையை''ஒரு ஈழ காவியம்'' என்ற தலைப்பில் சித்திரைவருடப்பிறப்பு விழாவில் முன்சன் நகரில் வில்லிசையாக்கி வழங்கியிருக்கிறோம்.இனிமேலும் புதிய சமூகக்கதைகளை வில்லில் பாட எண்ணியுமுள்ளோம்.

*இதுவரையில் நீங்கள் நிகழ்த்திய வில்லிசைநிகழ்ச்சிகள் எத்தனை?இவைகளில் உங்களுக்கு ஆத்ம திருப்தியைத்தந்த நிகழ்ச்சிகள் எவை?*

இதுவரையில் நானூற்றுக்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளேன். விரைவில் ஐநூறாவது நிகழ்ச்சியை நடாத்துவேன் என்ற நம்பிக்கையுண்டு. நானும் தம்பிமாரும் தனித்தனியே நிகழ்த்தியவற்றைச்சேர்த்தால் ஆயிரத்து ஐநூறைத் தாண்டியுள்ளோம்.
எந்தக்கலைஞனும் ஆத்மதிருப்தி அடைவது இயலாதென்று கருதுகிறேன்.அதுவும் வில்லிசை தனித்து என்னால்மட்டும் நிகழ்த்தப்படுவதல்ல.என்னோடு இணைந்து பங்குகொள்கிற கலைஞர்களில் ஒருவர்தானும் ஒருநிகழ்ச்சியில் பங்குகொள்ளாவிட்டால் அந்த நிகழ்ச்சியில் திருப்தியே இராது.பிறகெங்கே ஆத்மதிருப்தி?ஓரளவு திருப்திதந்த கதைகளென்று சிலம்புச்செல்வி,குமான்பெருமை,என்பனவற்றைச்சொல்லலாம். வானொலியில் எனது குழு நிகழ்த்திய குமானும் கிழவியும், கொழும்பில் நடாத்திய குமான் பெருமை,யாழ்ப்பாணத்தில் 75ம் ஆண்டு அரங்கேற்றிய கண்மணியாள் காதை இவைகளை என்னால் மறக்கமுடியாது. இன்றைய திருப்தி ஐரோப்பாவில் நானும் எனது தம்பிமாரும் நிகழ்ச்சிகளைச் செய்துவருவதே.

*தாங்கள் இங்கும் தொடர்ந்து வில்லிசை நிகழ்ச்சிகளைத் தயாரித்து வருகிறீர்கள்.நமது தாயகத்திலுள்ள இரசிகர்களுக்கும் இங்குள்ள இரசிகர்களுக்குமிடையில் வில்லிசைக்குரிய வரவேற்பு எத்தகையதாக இருக்கிறது?'*

தாயகத்தில் வில்லிசை பெரும்பாலும் தெய்வபக்தியை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது.தெய்வபக்திச்சூழலிலும் சமூகப்பிரச்சனையை நகைச்சுவையாக்கி நிகழ்ச்சியுடன் கலந்தோம்.அங்கே பல வில்லிசைக் கலைஞர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வோர் தனித்துவத்தை மக்கள் கண்டார்கள்.ஆனால் எல்லோரிடத்தும் நகைச்சுவையை முக்கியமாக எதிர்பார்த்தார்கள்.அதேவேளையில் கதையில் கவனக்குறைவிருந்தால் கலைஞர்கள் கண்டனத்திற்கும் உள்ளானார்கள்.
இங்கே கதைக்கு பெரும்பாலானவர்கள் முக்கியத்துவம் அளிக்காமல், நகைச்சுவைதான் வில்லுப்பாட்டு என்று கருதுவது கவலையைத் தருகிறது.அதிலும்,ஐரோப்பியநாடுகள் பச்சையாக,கொச்சைப்படுத்தும் நகைச்சுவையை சுவைக்க எம்மக்களைத்தயார்படுத்தியுள்ளது. (அதில் எம்மவருக்கும் பங்குண்டு.)அதனால் விரசமான நகைச்சுவையை வில்லிசையில் எதிர்பார்க்கிறார்கள்.என்னளவில் நான் அதை எப்போதும் வழங்க இசையமாட்டேன்.கதையோடு கலாச்சாரமுன்னெடுப்போடு-பண்போடு நகைச்சுவையை எங்கள் குழு என்றும் வழங்கும்..

*பிரான்சில் நாச்சிமார் கோயிலடி இராஜன் வில்லிசைக்குழு என்ற பெயரிலேயே தங்கள் சகோதரரும் நிகழ்ச்சிகளை நடாத்திவருகிறார். இதனால் இரசிகர்கள்மத்தியில் நிகழ்ச்சிகளை நடாத்துபவர் யார் என்பதில் குழப்பம் ஏற்படலாம் அல்லவா?'*

நாச்சிமார்கோயிலடி இராஜன் என்பது சிறியேன்தான்.எனது தம்பியார் தன் நிகழ்ச்சியின் ஆரம்பத்திலேயே இருந்து இன்றுவரை இராஜன் யார் என்று தெரிவித்துவருகிறார்.ஆக,நானாயிருந்தாலும், என் உடன்பிறப்புகளாயிருந்தாலும் நாங்கள் நாச்சிமார்கோயிலடி இராஜன் வில்லிசைக்குழுவினரே.

*வில்லிசையை இப்போதும் நமது தாயகம் மற்றும் தமிழகத்தில் தொடர்ந்து நடாத்திவருபவர்களைப்பற்றி என்னசொல்லவிரும்புகிறீர்கள்?'*

பீஷ்மர், துரோணர்களைப்பற்றி ஏகலைவன்போன்றோரிடம் கேட்பதுபோலுள்ளது இக்கேள்வி.தாயகத்தில் சின்னமணி அண்ணரையும் தமிழகத்தில் சுப்பு ஆறுமுகம் அவர்களையும் இன்றைய உன்னத வில்லிசைக்கலைஞர்களாக நான் மதிக்கின்றேன்.சின்னமணி அண்ணரின் கதாபாத்திர வெளிப்பாட்டையும் நகைச்சுவையையும் சுப்பு ஆறுமுகம் அவர்களின் கதை அமைப்புக்கள் கருத்துக்களையும் மிஞ்ச இன்று வில்லிசையில் யாருமில்லையென்று கூறிவிடலாம்.

*வில்லிசைக்கலைஞர் சின்னமணி அவர்களை அண்ணர் எனக்கூறுவது?*

என் ஒன்பதாம் வயதில் வண்ணை கலைவாணர் நாடகமன்றத்தில் நாடகம் நடிக்கச்சென்றேன்.என் முதல்மேடையேற்றம் அதுதான். நான் மேடையில் முதன்முதலில் நடித்தது சின்னமணி அண்ணரோடும் இலங்கை திரைப்படத்தயாரிப்பாளர் நிர்மலா ரகுநாதன் அவர்களோடும்தான். அதை நெறிப்படுத்தியவர் என் வணக்கத்திற்குரிய நாடகக்குழு எஸ்.ரி.அரசு அவர்கள்.என் கலையுலக வழிகாட்டிகள்– வண்ணை தியாகன்,இரா.பற்குணம், எஸ்.லோகநாதன்,ஏ.எஸ்.மணி ஆகியோர். என்றுமே அண்ணர் ஸ்தானத்தில்வைத்து நான்போற்றுகின்ற உயரியகலைஞர்களே இவர்களிடமிருந்து நான் கண்டறிந்த கலை உணர்வுகளே என்னை பல மேடைகளில் பரிணமிக்கச்செய்தது.

*வளர்கின்ற இளம்தலைமுறையினரிடத்தே வில்லிசைக்கு எத்தகைய வரவேற்பு இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்கள்?*

தாயகத்தைப்பொறுத்தவரை வில்லிசைக்கு அனைவரிடத்தும் வரவேற்பிருந்தது.இங்கே வில்லிசை என்றால் என்னவென்று தெரியாதவர்களும் இருக்கிறார்கள்.இங்கே வில்லிசை நிகழ்ச்சிகள் இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.அதனால் எத்தகைய வரவேற்பு இருக்குமென்று நிச்சயமாகக் குறிப்பிடமுடியவில்லை.

*புதிதாக வில்லிசை கற்கவிரும்புவோர்க்கு நீங்கள் சொல்லக்கூடிய அறிவுரை அல்லது ஆலோசனை என்ன?* ⟶

---

<u>படைப்பாளர்கள் கவனத்திற்கு!</u>

பூவரசுக்கு ஆக்கங்களை அனுப்பும்போது உங்கள் முழுப்பெயர்,முகவரி,இலக்கங்களைக்குறிப்பிட்டு அனுப்புங்கள்.பூவரசுக்கென அனுப்பும் ஆக்கங்களை உடனடியாகப் பிரதிசெய்து வேறு பத்திரிகைகளுக்கு அனுப்புவதைத்தவிருங்கள்.பூவரசு உங்கள் ஆக்கங்களுக்கு ஆதரவு தரும் அதேசமயத்தில்,பூவரசைத்தரமானதாக்கும் வகையில் உங்கள் தரமான ஆக்கங்கள் மூலம் ஒத்துழைப்புத்தாருங்கள்.

புதிதாக வில்லிசைகற்க யாரேனும் விரும்பினால் அது மகிழ்ச்சிக் குரியதுதான். தமக்கென்றோர் பாணியை ஏற்படுத்திக்கொண்டு கதை சொல்வதில் தெளிவும்,கதையில்வரும் கதாபாத்திரங்களை சித்தரிப்பதில் மிகக்கவனமும்,கதாபாத்திரங்கள் பேசும்போது அந்தந்த உணர்வுகளோடு அது வெளிப்படுத்தப்படவும்வேண்டும். நகைச்சுவையை கதையின்போக்கோடுகொண்டுசெல்லவேண்டும்.கதையைக் கைவிட்டு நகைச்சுவையில்மட்டுமே கவனத்தைவிடக்கூடாது. நகைச்சுவைமட்டுமே வில்லிசையென்ற கருத்து சிலரிடம் உண்டு.தாள ஞானமின்றி சுருதிசேராமலும் பாடினால் ரசிகர்களால் நிகழ்ச்சியை ரசிக்கமுடியாது.அதனால் இவைகளிலெல்லாம் கவனம் செலுத்தக் கூடியவர்கள் வில்லிசையால் புகழ்பெறலாம்.

*கடைசிக்கேள்வி பூவரசு பற்றியது. பூவரசுபற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?*

இலக்கியப்பணிக்காகப்புறப்பட்டது பூவரசு.ஐரோப்பாவில் வெளிவரும் சஞ்சிகைகள் பல,சார்பு இலக்கியப் பத்திரிகைகளாகவும், பிரச்சார இலக்கியப்பத்திரிகைகளாகவும் தம்மைமாற்றிக்கொண்டன. அல்லது மாற்றப்பட்டன என்றே கூறலாம்.அதனால் இலக்கியப்பணிக்கு தற்போது பத்திரிகைகள் குறைவு என்றுசொல்லலாம்.பூவரசு ஒருவருடத்தை இலக்கியப்பணிசெய்து ஆண்டுவிழாக்கண்டதுபோல்.தொடர்ந்து இலக்கியப்பணி செய்துவரவேண்டும்.புதிய படைப்பாளிகளை ஊக்குவித்ததுபோல் இன்னும் தொடரவேண்டும்.

அடுத்த இதழில்:
நாட்டுக்கூத்து அண்ணாவியார் *திரு: ஜேசுதாசன்* அவர்களை பூவரசு தன் வாசகர்களுக்காகச் சந்திக்கிறது.

அறிமுகம்:

தமிழ்நாதம்

தமிழ்மன்றம் வெளியீடு

தமிழ் மன்றம் — TAMIL MANTRAM e.V. FRANKFURT

(தமிழ்நாதத்தின் தலையங்கத்திலிருந்து.)

## ஆசிரியருடன் ஒரு நிமிடம்....

பிறநாடொன்றில் எமது மொழியையும், கலை கலாச்சாரத்தையும் பேணி வளர்ப்பது என்பது ஒன்றும் இலகுவான காரியமல்ல, மறுபுறம் எத்தேவையின் நிமித்தம் நாம் ஓர் பிற நாட்டில் அல்லது பல நாடுகளில் சிதறி வாழும் நிலை உருவாகியது என்பதும் இங்கு சிந்திக்கப்படவேண்டியது. நாம் தற்காலிகமாக வாழுகின்ற இந்நாடுகளில் எம் வாழ்க்கையின் நிரந்தரமின்மை நிதர்சனமாக இருப்பதாலும், நாம் மீண்டும் எம் தாய் மண்ணை நோக்கி போகக்கூடிய சூழ்நிலை ஒன்று உருவாகும் வேளையில் அங்கு போகவேண்டிய தேவை இருப்பதாலும் எமது மொழி, கலை, கலாச்சாரம் இவற்றைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டில் நாம் இன்று இருக்கின்றோம். இவ்வேளையில் வேதனைக்குரியது என்னவெனில் ஈழத்தில் எம்மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பிளவுகள், வேறு பாடுகள் இங்கும் எம்மக்களிடையே பாரிய பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அவர்களது கலை கலாச்சாரப் பாதைகளை குறிப்பிட்ட வரையறைகளுக்குள், அல்லது ஒரு குறிப்பிட்ட குழுமக்களின் கருத்துகளுக்குச் சார்பாக அமைய வழிவகுத்து விடுகின்றன. இத்தகைய போக்கு எத்தகைய விளைவுகளை, பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை இன்று நாம் பத்திரிகைத்துறையில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது


ஜேர்மனியிலும், ஐரோப்பாவிலும் பல தமிழ்பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. இவை ஆற்றி வருகின்ற பணியும், அவற்றின் வளர்ச்சியும், இலக்கிய கண்கொண்டு நோக்கப்படாது, மாறாக இவை யாரைச்சார்ந்து நிற்கின்றன, அல்லது யாரைச்சாடுகின்றன என்ற அடிப்படையிலேயே எடைபோடப்படுகின்றன. தாய் நாட்டின் நிலைப்பாடுகள், எம்இலக்கியத்தின் போக்கில் பாதிப்பை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாயினும், இப்பாதிப்புகளை விரிவுபடுத்துவதற்காக இலக்கியம் படைக்கப்படுவதும், அல்லது சார்பிலக்கியங்கள் பெருமளவில் பாராட்டப்படுவதும் மிகவும் கவலைக்குரியது. இதேவேளையில் நடுநிலை இலக்கியங்கள் பிற்போக்கானவை, அல்லது தரமற்றவை என்ற மனப்பான்மையைப் பத்திரிகைத்துறையினரே ஏற்படுத்துவதுதான் இங்கே மிகவும் வேதனைக்குரியது. இலக்கியங்கள், படைப்புகள் விமர்சிக்கப்படும்போது விமர்சனங்கள் நடுநிலைத் தன்மையை பேணும்போதுதான் அவ்விமர்சனம் தரம் வாய்ந்த ஒன்றாக கருதப்படும். இத்தகைய ஓர் ஆரோக்கியமான வளர்ச்சிதான் எமது கலை கலாச்சாரப் பணிகளைச் சரியான வழியில் முன்னெடுத்து செல்லும் என்பதை நாம் அனைவரும் மனதில் வைக்கவேண்டும்.

எமது ஆசிரியர் தலையங்கத்தில் தென்னாபிரிக்காவில் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையைக்குறிப்பிட வேண்டிய அவசியத்தை நாம் உணர்கின்றோம். தம் நாட்டிற்குள் வியாபாரநோக்கில் நுழைந்த காலனித்துவவாதிகளிடமே அடிமைகள் போல் வாழ்ந்துவந்த பெரும்பான்மைக் கறுப்பினமக்கள் தங்கள் நீண்ட உரிமைப்போராட்டத்தில் முதற்தடவையாகப் பொதுத்தேர்தல்களில் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டிருப்பது அவர்கள் போராட்டத்தில் ஏற்பட்டிருக்கும் ஓர் முக்கிய திருப்பமாகும், அதே வேளையில் அவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய உட்பிளவுகள், உலகம் முழுவதும் உள்ள பாதிக்கப்பட்ட மக்களின் மத்தியில் அவதானிக்கக்கூடிய ஓர் சாபக்கேடாயினும் இத்தகைய பிளவுகள் அவர்களின் போராட்டங்களை பின்தள்ளுவது மிகவும் கவலைக்குரியதாகும். மீண்டும் பத்திரிகைகள் இப்பிளவுகளை மேலும் விரிவுபடுத்தாது அவற்றினை நிவர்த்தி செய்யும் நற்பணிகளில் ஈடுபடுவது விரும்பத்தக்கது.

மலர்த்தொடர்புகளுக்கு..
**B.Balasubramaniam**
**Editor "Tamil Natham"**
**Altegasse 37**
**6000 Frankfurt 1**

சிறுகதை.

## அமுதநதி சுதர்சன்.



பிரமாண்டமான அந்த சர்வதேசமண்டபத்தில் ஒரு தனிமனிதனின் ஓவியக்கண்காட்சி நடைபெறுவது இதுவே முதற்தடவை.
இருபத்தைந்து ஆண்டுகளாக அந்தக்கலைஞனின் தூரிகை பல புதுமைகளைப்படைத்துள்ளது.விஸ்விட்டு என்னும் உலக ஓவியர்களுள் அந்தக்கலைஞனும் ஒருவர்.
''ஓவிய சித்தன்'' என்ற புனைபெயர் பலதரப்பட்ட கலைஞர்களாலும் ரசிகர்களாலும் விமர்சிக்கப்படும் ஒன்றாக போயிற்று.அந்தப்பெயரை அவர் சூட்டிக்கொண்ட நாளிலிருந்து ஓவிய உலகம் அவரை ஒரு சித்தனாகவே எண்ணுகிறது.
வர்ணங்களை அள்ளி இறைத்து,அவற்றுக்கு உணர்வும் உயிரும்கொடுக்கும் சித்தன் என்றே அவரை விமர்சிக்கிறது. அனாயாசமாக அவர் வரைந்த கோடுகள்,பக்கம் பக்கமாக விளக்கவேண்டிய உணர்வுகளை வெளிப்படுத்தும். வர்ணகுழம்புகளுக்குள் புதைந்து குளித்துவிட்டு வெள்ளைக்காகிதத்தில் தன்னை துவட்டிக்கொள்ளும் அவருடைய தூரிகை,அப்படி என்னதான் மாயத்தை கற்றுவைத்திருக்கிறதோ?'
வர்ணங்களைப் பேசவைக்கத்தெரிந்த கலைஞர் அவர்.
உருவங்களைமட்டுமே பலர் வரைந்து கொண்டிருந்த காலத்தில் உணர்வுகளை ஓவியமாக்கிய கலைஞர்தான் ஓவியசித்தன்.



காட்சி மண்டபத்தின் பிரமாண்டமான சுவர்களை ஓவியசித்தரின்
ஓவியங்கள் அலங்கரித்திருந்தன.ஒவ்வொரு ஓவியத்தின்கீழும்
தலைப்புக்களை ஆங்கிலத்தில் எழுதியிருந்தார்கள்.அழகு,வறுமை,
ஆத்மா,தியானம் போன்ற குறுகிய தலைப்புக்களில் பெரிய பெரிய
ஓவியங்கள் மாட்டப்பட்டிருந்தன. சில ஓவியங்களுக்கு இரட்டைத் தலைப்புக்கள்
கொடுக்கப்பட்டிருந்தன.


ஓவியசித்தரின் பார்வையே தனி.

அரசியலில் அவர் யாரையும் சார்ந்தவர் அல்ல.அவருடைய இதயத்தை
நெகிழவைக்கும் சம்பவங்கள்,மகிழவைக்கும் உணர்வுகள்,உறுத்தும் விஷயங்கள்,
முட்களாகி நெஞ்சை நெருடும் காரியங்கள் எல்லாமே—தூரிகைக்கு வேலை
கொடுத்துவிடும்.

பத்துவருடங்களுக்கு முன் ஆப்பிரிக்க வெள்ளை ஆதிக்கத்தை வெளிப்படுத்த
அவர் வரைந்த ஓவியம்,இரண்டு ஆப்பிரிக்கரின் விவாதத்துக்கு
உள்ளாகியிருந்தது.

''வெள்ளை மனிதர்கள்...ஆனால்...?'' என்று தலைப்பிட்டிருந்த அந்த ஓவியத்தை,
விகாரமான கறுப்பு இதயம் ஆக்கிரமித்திருந்தது.சிறைக்கம்பிகளுக்குள்
ஒரு ஆப்பிரிக்கர் பின்னணியில்.

''சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் தெரிவது நெல்சன் மண்டேலா'' என்றான்
ஒருவன்.





''இல்லை..இல்லை..மொத்த ஆப்பிரிக்க மக்களைத்தான் அவர் அப்படிக் காட்டியிருக்கிறார்'' என்றான் அடுத்தவன்.
அனாமுக்குக்கண்ணாடி வழியாக கண்களைச்சுருக்கியபடி அதனை ரசித்துக்கொண்டிருந்த வயதான பிரஞ்சுக்கலைஞர் சொன்னார்:
''மண்டேலாவை ஏன் தனிமனிதனாகப்பார்க்கிறீர்கள்?உங்கள் இருவர் கருத்தும் ஒன்றுதானே?''
கறுப்பு வர்ணத்தைமட்டுமே பயன்படுத்தி வெள்ளை ஆக்கிரமிப்பை வெளிப்படுத்த ஓவியசித்தன் கையாண்ட யுக்திகளை ஆராய்ந்திருந்த KUNST என்ற ஜெர்மன் சஞ்சிகை.அவருடைய கை இடுக்குகளுக்குள் தெரிந்தது.
நிறபேதம் வர்க்கபேதம் எதுவுமே உண்மைக்கலைஞர்களுக்குள் தலைதூக்குவதில்லை என்பதை விளக்குவதாக இருந்தது அந்த பிரஞ்சுக் கலைஞரின் சுபாவம்.
''விடுதலை-திலீபனின் பசி'' என்ற தலைப்பில் ஒரு ஓவியம்.அதன் அருகிலேயே திலீபனைப்பற்றிய ஒரு குறிப்பு.கொழுந்துவிட்டு எரியும் ஒரு தீப்பிழம்பு. அதனை ஊடுருவி விரல்களைப்பொத்தியபடி நரம்புகள் வெளித்தெரிய உயர்ந்துநின்றது ஒரு கை.சிவப்பு மஞ்சள் கறுப்பு வர்ணங்களின் கலவை.
''இங்கு வர்ணங்களையோ வரைவுகளையோ காணமுடியவில்லை.உணர்வையே காட்டியிருக்கிறார் ஓவியசித்தன்'' என்று தன்னையேமறந்து சொல்லிக் கொண்டிருந்தார், ஒருவாறாக சவரம்செய்யாதமுகத்துக்கு சொந்தக்காரரான ஒரு வெளிநாட்டு கலைஞர்.
இந்த இரண்டு ஓவியங்களும் வரைந்த காலக்கட்டங்களில் பத்திரிகை உலகம் ஓவியசித்தனை வம்புக்கிழுத்தது....
'' ஓவியசித்தன் அரசியலுக்குள் விழுந்துவிட்டார்'' என்றெல்லாம் செய்திகள் வெளியாயின.
இதுபற்றி கலைச் சஞ்சிகைகள் பேட்டிகண்டபோது மெதுவாக சிரித்தபடி ஓவியசித்தன் சொல்லியிருந்தார்:
''தேவையான வர்ணங்களை அந்த ஓவியங்களுக்கு நான் பயன்படுத்தியிருக்கிறேன்.இருந்தும் ஏன் அதற்கு அரசியல் வர்ணம் பூசுகிறீர்கள்?ஓவியன் என்று சொல்வதற்குமுன் நான் ஒரு மனிதன். மனித கண்ணோட்டத்தோடு நான் எதையும் பார்க்கக்கூடாதா?கடிவாளம் கட்டிக்கொண்ட குதிரையாக என்னால் ஒருபோதும் வாழமுடியாது.''
வானத்தில் மிதக்கும் கலைஞர்களில் இருந்து கொஞ்சம் மாறுபட்டவர்தான் ஓவியச்சித்தன்.

அந்தக் காட்சிமண்டபத்துள் எந்தவித டாம்பீகமும் அற்ற மனிதராக ஓவியசித்தன் நடமாடிக்கொண்டிருந்தார். மேல்நோக்கி வாரப்பட்ட கொஞ்சம் அதிகமாகவே வளர்ந்துவிட்ட தலைமுடி-அனேகமாக நரையாகவே இருந்தது.நெற்றியில் கீறிவிட்டாற்போன்ற சுருக்கங்கள்.அடர்த்தியான புருவங்களுக்குக்கீழே ஆழமான பார்வைக்குரிய கண்கள். கண்களின் கீழே தொங்கும் சதைகள் அவருடைய ஞானத்தையும் வயதையும் வெளிப்படுத்தின..அழகாக வாரி நறுக்கிவிடப்பட்ட தாடியில் நரைகளே அதிகமாக இருந்தபோதும் வயதுக்குமீறிய வாலிபம் அவருடைய மிடுக்கில் தெரிந்தது.கோட் சூட் சகிதம் கலகலப்பாக அவர் பழகும் சுபாவத்தில்

ஒரு ஐரோப்பிய தன்மை தலைகாட்டியது. ஆண்பெண் கலைஞர்கள் யாராக இருந்தாலும் கைகொடுப்பதும் கட்டி அணைத்துக்கொள்வதும்,இளம்பெண் ரசிகர்கள் ஓவியங்களைப் பாராட்டும்போது மகளே! சுட்டிப்பெண்ணே! என்றெல்லாம் சொல்லி கன்னத்தில் முத்தமிடுவதுமாக ஒரு சுறுசுறுப்பான மனிதராகவே ஓவியச்சித்தர் வலம் வந்தார்.

ஓவியச்சித்தரிடம் ஆசியப்பண்பை எதிர்பார்க்கமுடியாதுதான்.
ராஜேஷ்வான் என்ற இளைஞன் இருபத்தைந்து வருடங்களுக்குமுன் ஈழத்திலிருந்து வரைந்து அனுப்பிய ''எக்கம்''என்ற ஓவியத்துக்கு ஐரோப்பிய கலைக்குழுவின் மூன்றாவது பரிசு கிடைத்தபோது, பதினையாயிரம் பவுண் காசோலை அவனுடைய வீட்டுக்கதவைத்தட்டியது. நடுத்தரவாழ்வு வாழ்ந்துகொண்டிருந்த ராஜேஷ்வானின் தந்தை தன்னுடைய ஒரேயொரு மகனின் கலைவாழ்வு கருதி,அவனை ஐரோப்பாவுக்கு அனுப்பிவைத்தார்.
கலைஞர்களின் தொடர்பும் ஐரோப்பிய சஞ்சிகைகளுக்குப் படம்வரையும் சந்தர்ப்பமும் ராஜேஷ்வானை வந்தடைந்தது.மிகவிரைவில் அவனை பணமும் புகழும் வந்து சேர்ந்தது.அதேகாலத்தில், நாட்டில் அவன் தாயும் தந்தையும் இறந்துபோனார்கள். உறவுகள் எல்லாமே அற்றுவிட்டதுபோன்ற ஒரு வெறுமையில் ஐரோப்பிய கலைக்குழாமோடு தன்னை இணைத்துக்கொண்டான் ராஜேஷ்.இதுதான் ஓவியச்சித்தனின் பூர்வீகம்.

வருகை தந்திருந்த வெளிநாட்டு தூதர் ஒருவரிடம் உரையாடிவிட்டு திரும்பிய ஓவியசித்தரின்முன் ஒலிவாங்கியைப்பிடித்தபடி,ஒலியைப் பதிவுசெய்ய தயாராகிக்கொண்டு ஒரு கேள்வியை கேட்டார் இத்தாலிநாட்டு நிருபர்:
''நீங்கள் எந்த நாட்டவர்?..இதுபற்றி பலதரப்பட்ட விவாதங்கள் நடைபெறுகின்றனவே....!ஐரோப்பிய நாட்டவர் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறீர்களா?''
–வாய்விட்டுச்சிரித்தபடி சித்தர் சொல்லத்தொடங்கினார்:
இஸ்ரேல் என்ற நாட்டுக்கு எல்லைக்கோடுகள் போட்டபோது உலகில் எதிர்ப்புக்கள் இருந்தன...பாலஸ்தீனம் என்றநாட்டை நியாயப்படி மீட்டுக்கொடுக்க உலக நியாயஸ்தர்களால் இன்றுவரை முடியாமல் இருக்கிறது.எத்தனையோ நாடுகள் தங்கள் எல்லைகளை நிலை நிறுத்திக்கொள்ள மனித உயிர்களைப்பலிகொடுத்தவண்ணம் இருக்கின்றன.எல்லைகளை அகற்றிவிட்டு சந்தோஷப்படுகிறது ஜெர்மனி. எல்லைகளைப்போட்டுவிட்டு சுதந்திரமாய்ச்சிரிக்கின்றன சோவியத்நாட்டின் குட்டி அரசுகள்.கோடுகளை அகற்றிவிடுவதும் நியாயமாகப்படுகிறது,போட்டுக்கொள்வதும் நியாயமாகப்படுகிறது. இதுதான் அரசியல்.நான் அதற்கு அப்பாற்பட்ட கலைஞன். நாடுகள் என்ற கோடுகளுக்குள் என்னை சிறைவைக்காதீர்கள். என் ஞானத்தைக் கூறுபோட நான் விரும்பவில்லை.''
பேசிக்கொண்டே கூட்டம் அதிகமாக நின்ற ஒரு ஓவியத்தைநோக்கி நடந்தார் ஓவியர்.

''வறுமை'' என்ற அந்த ஓவியத்தை ஆடம்பரமான வயோதிபக்கூட்டம் ஒன்று பார்த்து ரசித்தபடி நின்றது.ஆளுக்கொரு கருத்தை அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.
''இந்தப்படத்தை உங்களால் ரசிக்கமட்டுமே முடியும்.ஆனால் உணர முடியாது.'' என்றார் ஓவிய சித்தன்.
அவர்கள் அவரை வியப்போடு பார்த்தார்கள். அவர் தொடர்ந்தார்:
''இந்த ஓவியத்தை வரைவதற்காகவேதான் எத்தியோப்பியா சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தேன்.நீரற்று இறுகிவெடித்துப்போன மணற் திட்டிகள்..ஆகாரமற்று மரித்து எலும்புக்கூடுகளாகிப்போன மிருகங்களும், மனிதர்களும்,பிறந்தநாளில் இருந்து பச்சை இலைகளை காணாமலே இறந்துகொண்டிருக்கும் குழந்தைகள். நிர்வாணத்தைக்கூட அலட்சியம் செய்துவிட்ட அந்த வறுமையை கண்டபின் நான் வரைந்த ஓவியம் இது.'' என்றார்.
அந்தக்கூட்டத்தை விலக்கியபடி நுழைந்து நிமிர்ந்தாள் ஒருத்தி. பளபளவென்று பளிங்குபோல் குறுகுறுத்த அந்தக் கண்கள் அவளுக்கு பதினேழு வயதிருக்கும் என்றுகூறிற்று.
கூர்க்கமாக ஓவியரை ஊடுருவிப்பார்த்தபடி –
''மொத்தத்தில் பல ஆயிரம் டாலர்களை செலவு செய்து வறுமையை வரைந்திருக்கிறீர்கள்!'' என்றாள் அவள். அவளுடைய பார்வையில் ஏதோ ஒரு பிரமாண்டமான செய்தி இருப்பதை ஓவியரின் உள்ளுணர்வு உறுத்திற்று.இமைவெட்டாத அந்தப் பார்வையில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ளவே அவர் அடுத்த ஓவியத்தை நோக்கி நடக்கலானார்.
இவளை எங்கேயோ பார்த்திருக்கிறேன்..இன்றல்ல,நேற்றல்ல...பல வருடங்களுக்குமுன்.
சிந்தனையில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு அடுத்த ஓவியத்தின்முன் நிமிர்ந்தார் ஓவிய சித்தன்.
இளைஞர் குழாம் ஒன்று அதனை விமர்சித்துக்கொண்டிருந்தது.
பக்கவாட்டுக் கோணத்தில் ஒரு அரைவட்ட பெண்முகம் குனிந்து மார்பைப் பார்க்கிறது.நெற்றியில் இருந்து ஒரு துளி வியர்வை பூமியைநோக்கி....
''தாய்மை'' என்று தலைப்பிட்டிருந்தது.
''கவர்ச்சிக்கோ,ஆபாசத்துக்கோ இடம்கொடுக்காத ஒரு மார்பை எங்கள்முன் கொண்டுவந்திருக்கிறீர்கள்.'' என்றான் ஒரு இளைஞன்.
சிரித்தபடி திரும்பினார் சித்தன்–
அங்கும் அவள்!!
''வறுமையை வரைவதற்காக எத்தியோப்பியா சென்ற நீங்கள் தாய்மையை வரைய எங்கெல்லாம் சென்றீர்கள்?'' பளிச்சென்று கேட்டாள் அவள்.
விவாதத்துக்கு வேண்டுமானால் ஏதாவது சொல்லிவைக்கலாம்..ஆனால்– அவளுக்கு கட்டுப்படுவதே சுகம்போல அவருக்குத்தோன்றிற்று.
வியர்ப்பதுபோல் ஒரு புழுக்கம்.டையைக் கொஞ்சம் தளர்த்திக்கொண்டார்.
அவளை நெருங்கி தன் வலதுகையால் ஆதரவாக அணைக்கமுற்பட்டார்.
விறைப்பாக தன்னை விடுவித்துக்கொண்டாள் அவள்.
''உங்களோடு கொஞ்சம் தனியாக பேசவேண்டுமே!'' என்றாள் .

வேறு யாராக இருந்தாலும் என்வீட்டில் என்னை நீங்கள் சந்திக்கலாம் என்று கூறி, நேரத்தையும் நாளையும் குறிப்பெடுத்துக்கொண்டு விலகிக் கொள்வார் சித்தர். ஆனால் இன்று.. அவளுடைய பார்வைக்குள், ஓவியரின் கண்கள் எதையோ தேடியது. அவர் தொலைத்துவிட்ட ஏதோ ஒன்றை அவள் கொண்டுவந்திருப்பதுபோல் இருந்தது.
''வா மகளே!'' என்றபடி பிரத்தியேக அறைக்கு அவர் நடக்கத்தொடங்கினார்.

பிரமாண்டமான அந்த மேசையின் ஒருபக்கம் சித்தரும் மறுபக்கம் அந்தப் பெண்ணும் அமர்ந்துகொண்டார்கள்.
சுங்கானை எடுத்து புகையிலையை திணித்தபடி அவளைப்பார்த்தார் சித்தர்.
''நீங்கள் ஏன் திருமணம் செய்யவில்லை'?''-இது அவள்.
''தேவை என்று தோன்றவில்லை!''-சுருக்காக சொன்னார் சித்தர்.
அவருடைய பல் இடைகளுக்குள் சுங்கான் குடியேறிற்று.
''திருமணம் மட்டும்தானா'? அல்லது சுகங்களும் தேவைப்படாமல்போயிற்றா'?''
''சின்னப்பெண்ணே! இவற்றையெல்லாம் கேட்டு அலட்டிக்கொள்ளவா என்னை அழைத்தாய்'?''
அவருடைய கைகள் தீப்பெட்டியை சுழற்றிக்கொண்டிருந்தன.
''பதிலைமட்டுமே எதிர்பார்க்கிறேன்!'' விறைப்பாக வந்த அந்த வார்த்தைகளால் அதிர்ந்துபோனார் சித்தர்.
வாழ்க்கையைப்பற்றிய தன் கருத்தை அவர் சொன்னார்:
''உடலின்தேவை ஒருபோதும் உள்ளத்தின் பாவம் ஆகாது. தேவைகளைவாங்க அங்காடிகள் இருக்கின்றபோது ..!''என்றபடி அவர் நிறுத்திக்கொண்டார்.
''உங்களுக்கும் ஐரோப்பிய நடிகைகளுக்கும் இடையிலான தொடர்புகள்பற்றி பத்திரிகைகள் எழுதியதெல்லாம்...'?''
''நான் பிரபல்யமான நாளில் இருந்து இப்படிப் பல செய்திகள் வந்த வண்ணமே இருக்கின்றன. நான் ஒரு முனிவன் அல்ல. பலர் என்னோடு பலமாதங்கள் வாழ்ந்திருக்கிறார்கள். சிலர் என் தொடர்பை சிலநாட்களோடு முடித்துக்கொண்டிருக்கிறார்கள். யாரும் என்னோடு தொடர்ந்து வாழவேண்டும் என்று நான் விரும்பியதுமில்லை. யாரையும் ஓடிவிடு என்று நான் விரட்டியதுமில்லை. என் ஓவியங்களைப்பார். அதோடு என்னை விட்டுவிடு. என் வாழ்க்கையைப் பார்க்காதே. சிலவேளை என் கொள்கை தவறாகக்கூட இருக்கலாம்.''என்றபடி தீப்பெட்டியைத்தட்டி சுங்கானை உறிஞ்சத் தொடங்கினார் சித்தர்.
''பதினெட்டு வருடங்களுக்குமுன் நீங்கள் ஓவியசித்தன் என்றபெயரை முதன்முதலாக பயன்படுத்திய அந்த ஓவியம்-ஐரோப்பிய கலை ஒன்றியத்தின் முதற்பரிசைத்தட்டிக்கொண்ட அந்த ஓவியம்....''
அவள் கேள்வியைமுடிக்கவில்லை.
ஓவியசித்தருக்கு புரைக்கேறிற்று. அவளை எங்கேயோ பார்த்திருக்கிறேன் என்று காலத்திரையை விலக்கித்தேடிக்கொண்டிருந்த அவருடைய அடிமனத்துக்கு துப்புக்கிடைத்துவிட்ட அதிர்ச்சியாகத்தான் அது இருக்கவேண்டும்.

பதினேழுவயதான அவளை பதினெட்டு ஆண்டுகளுக்குமுன் அவர் தேடுகிறார்.
அது ஒரு துடிப்பான இளமைக்காலம்.பணமும் புகழும் ஐரோப்பிய இளம் கலைஞர்களின் தொடர்புகளும் கிடைத்திருந்த நாட்கள்.
புதுமையாக ஏதாவது செய்துவிடவேண்டும் என்று பாபாத்தகோம் அது. இளம் இரத்தத்தின் ஆதிக்கமே கூரிய சிந்தனைக்கும்மேலாக நின்றிருந்தது.கன்னிகழிந்தது என்ற சொல்லை ஐரோப்பிய இளைஞர்கள் கவர்ச்சிக்காக அடிக்கடி பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள்.
இளைஞர்களுக்குள் பிரபல்யமாகிப்போன அந்தச்சொற்பதத்தை ஓவியமாக்க விரும்பினான் ராஜேஷ்.
தன் ஐரோப்பிய நண்பர்களிடம் அவன் அதைச்சொன்னபோது புதுமை என்று அவர்கள் அதை வரவேற்றார்கள்.ஓவியம் வரைவதற்கான அனுபவத்தை அவன்பெறுவதற்கும் அவர்களே வழிசெய்தார்கள்.
அழகான அந்த விடுதியின் ஆடம்பரமான படுக்கை அறைக்குள் மிரண்டு மிரண்டு நுழைந்தாள் ஒருத்தி. பிரம்மாண்டமான மின்விளக்குகள் ஒளியை உமிழ்ந்தபோதெல்லாம் அவள் கண்களைமூடிக்கொண்டாள்.
ஒருவார்த்தைகூடப்பேசாமல் சில மணித்துளிகள்மட்டுமே அவனோடு உறவாடிப் பிரிந்துவிட்ட அந்தமுகம் இங்கே...அவர் எதிரில்...
பதினெட்டுவருடங்களின் பின்.
அவள்கொண்டுவந்த செய்தியை அவர் புரிந்துகொண்டார்.
இதயத்துக்குள் கொஞ்சம் அதிகமாகவே அழுத்தம் ஏற்படுவதுபோல் இருந்தது.
''நீ...நீ...என்மகள்!''
-அவளை வாரி அணைக்கவேண்டும்போல் இருந்தது. எழுந்தார்.
''உட்காருங்கள்!..என்னை மகள் என்று உரிமைகொண்டாட உங்களுக்கு எந்தத் தகுதியும் கிடையாது.தாய்மையைப் படமாகவரைந்து பணமும் புகழும் சம்பாதித்துவிட்டீர்கள். தந்தைமை என்று ஒரு சொற்பதம் இருக்குமானால் அதற்கு உங்கள் அகராதியில் என்ன அர்த்தம்?
வெள்ளைக்காகிதத்தில் பூசிவைத்திருக்கிறீர்களே வர்ணங்கள்..
அவற்றிற்குப்பெயர்தான் தந்தை-மையா?''
-வெற்றுச்சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு அவரை வெறித்துப்பார்த்துக்கொண்டே தொடர்ந்தாள்.
''என் தாய் என்ன சந்தர்ப்பத்தில் எப்படியான சூழ்நிலையில் உங்களிடம் தன்னைச்சிதைத்துக்கொண்டாள் என்பது இன்றுவரை எனக்குத்தெரியாது.
ஒரு அசிங்கத்தை, இளமைவேகத்தோடு நீங்கள் வரைவதற்கு என்தாய் கருவியாகிப்போனாள்.நான் கருவில் ஆகிப்போனேன்.''
அவள் கலங்கினாள்.
கொஞ்சநேரம் ஒன்றுமேயில்லாத சூனியத்தை வெறித்துப்பார்த்தபடி இருந்தாள்.
ஓவியசித்தரின் நெற்றி சுருங்கியது.
அந்த மௌன இடைவெளி,ஆயிரம் சம்மட்டியால் அடித்து ஒலியெழுப்பும் கணங்களாகி அவரைச் சித்திரவதைசெய்தது.ஏதாவதுபேசி மௌனத்தைக்கலைக்க எண்ணி எண்ணி அவர் தோற்றுப்போனார்.

கைக்குட்டையால் மூக்கை உறிஞ்சியபடி அவள் தொடர்ந்தாள்...
''என் தாயின் புனிதத்துக்கு நீங்கள்தான் சாட்சி...அவளைக் கறைபடுத்திவிட்டுத்தானே நீங்கள் படம் வரைந்திருக்கிறீர்கள்!
....மணித்துளிகள் வாழ்ந்துவிட்ட காரணத்துக்காகவே,வருடக் கணக்கில் அந்த மணித்துளிகளின் நினைவிலேயே தன்னை அழித்துக் கொண்டாளே என்தாய்...அவளுடைய காதலைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?...
ஐரோப்பிய பைத்தியங்கள் சில கைதட்டி ரசிப்பதற்காக நீங்கள் அந்த ஓவியத்தை வரைந்தநாளில்,பக்கவிளைவாக உருவாகிப்போன சதைப்பிண்டத்தை கிள்ளி எறிந்துவிடாமல் அதன்மேல் கருணைகாட்டி, பதினேழுவருடங்கள் காப்பாற்றினாளே...அந்தக்கருணையை எப்படி மதிப்பிடுகிறீர்கள்....தான் சாப்பிடாமலே எனக்குப் பாலூட்டினாளே அந்தத்தாய்மையை,வறுமையை என்னசொல்கிறீர்கள்?''
கலையைமட்டுமே எண்ணி வாழ்ந்துவிட்ட சித்தனுக்கு வாழ்க்கையின் மறுபக்கம் புரியலாயிற்று.கலாச்சாரம் என்ற பாரம்பரியத்தை அவர் இதுவரை எண்ணிப்பார்த்ததில்லை.கலை உடல் என்றால் கலாச்சாரம் உயிர் என்பதை அவர் உணரத்தொடங்கினார்.
''நான் பிணமாக வாழ்ந்துவிட்டேன்!''
—வார்த்தைகள் வெளிவாராமல் உதட்டுக்குள் அமுங்கிப்போயின.
பெயரே தெரியாத மனைவியைப்பார்க்கவேண்டும்போல் தவித்தது மனம்.
அவள் விம்மிவிம்மி அழுதுகொண்டே சொன்னாள்...
''இன்னும் சில நிமிடங்களில் இறந்துபோவாள் என்று டாக்டர்கள் எல்லாம் சொன்னபோது,என்தாய் தலையணைக்கு அடியிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து கைகளுக்குள்பொத்தியபடி தியானம்செய்து மாணித்துப்போனாள். இறுகிப்போன அவளுடையகைகளை பிரித்துப்பார்த்தேன்...பதினெட்டு வருடங்களுக்குமுன் நீங்கள்வரைந்த படத்தைப்பற்றிய விமர்சனத்துடன் உங்களுடைய புகைப்படத்தை தாங்கிவந்த ஒரு பத்திரிகையின் துண்டுதான் அது.உங்களையே கடவுளாக எண்ணிய அந்த ஆத்மா.... அந்த ஆத்மாவின் இறுத்தித்தியானம்...இவற்றின் பெறுமதியை நீங்கள் அறிவீர்களா?....வெள்ளைக்காகிதத்தில் வர்ணங்களைப்பூசிவிட்டு காதல்,கருணை,தியானம்....இன்னும் என்னவோ எல்லாம் தலைப்புக் கொடுத்திருக்கிறீர்கள்! உங்கள் அத்தனை தலைப்புக்களுக்கும் நிஜமாக ஒருத்தி வாழ்ந்து செத்துப்போனாளே அது தெரியுமா உங்களுக்கு? ...ஓவியசித்தன் என்ற பெயரையே உங்களுக்குப் பெற்றுத்தந்த அந்தத் தாயை....?''
—அவளால் தொடர்ந்து பேசமுடியவில்லை.
அவள் எழுந்துநின்றாள்.புறப்படத்தயாரான அவளைத் தடுத்து நிறுத்தவேண்டும்போல் இருந்தது ஓவியருக்கு.
''நில் மகளே!'' தழுதழுத்த குரலில் அவர் சொன்னார்.
கண்களைத்துடைத்துவிட்டு அவள் அழுத்தமாய் உரத்துக்கத்தினாள்:
''என் தாய் வேண்டுமானால் உங்களைக் கடவுளாக எண்ணியிருக்கலாம்.ஆனால், நான் கடவுளைமட்டும்தான் என்தந்தையாக எண்ணுவேன்.''
பெயரே தெரியாத மனைவி இறந்துபோனாள் உரிமை சொல்லமுடியாத மகள் அவரைவிட்டுப் பிரிந்துகொண்டிருந்தாள்.

ஒருமணித்தியாலமாக ஓவியர் பிரத்தியேக அறையில் தனித்தே இருந்தார்.பயன்படாமலே சுங்கான் புகைந்துகொண்டிருந்தது.
ஒருமுடிவுக்கு வந்தவராக எழுந்தார் ஓவியர்.
ஆவேசமாக காட்சிமண்டபத்துக்குவந்து,தனது ஓவியங்களையெல்லாம் ஒவ்வொன்றாகக்கிழிக்கத்தொடங்கினார்.
காட்சி மண்டபமே ஸ்தம்பித்துநின்றது.கலை அழிவதாக சிலர் கவலையோடு முணுமுணுத்தனர்.
ஓவியர் உரத்தகுரலில் சொன்னார்:
''இதைக்கலை என்று நீங்கள் சொல்வீர்கள்.அப்படித்தான் நானும் இதுவரை எண்ணி இருந்தேன்.தூய்மையான வெள்ளைக் காகிதங்களை வர்ணக் கலவைகளால் கறைப்படுத்திருக்கிறேன்.இதுதான் உண்மை.''
அந்த மண்டபத்தில் இருபத்தி ஐந்து வருடங்களுக்குமுன் ராஜேஷ் வரைந்த ''ஏக்கம்'' என்ற ஓவியம்மட்டும் கிழியாமல் இருந்தது.
ஓவியரிடம் இப்போது மிஞ்சி இருப்பது அது ஒன்றுதான்.

***
***

எனது அறியாமை!
அன்றையபொழுதில்
அவளோடு என்னை
இணைத்துக்கொண்டதால்
இன்றையபொழுதில்
சுமைகளையும்
வேதனைகளையும்
காதலிப்பவன் நான்-

பாசத்தைத்தள்ளி
பற்றை மறந்து
உணர்வை அடக்கி
உள்ளத்தை மறைத்து-
இன்று
வேதாந்தம் சொல்லுகிறாள்
கேட்பவர்களில்
நானும் ஒருவன்
வாழ்பவர்களில்
இவளும் ஒருத்தி.

இன்பத்தில்
பங்கேற்றவளுக்கு
துன்பத்தில்
பங்கேற்கத்தெரியவில்லை
பாவம்...
கோழை இவள்-

கறைகளைக்கண்டிடாத
என்பார்வைகளும்
பறிகொடுத்த
என் நினைவுகளும்
கற்பனையாயிற்று....

பிரிவு
என்ற பள்ளத்தில்
நின்றாலும்
அதிலும்
ஒரு சுகம்.
தேயாத
இந்த
நினைவுகளுக்கு
உயிர்கொடுத்து
பார்க்கும்போது........

*-ராஜன்'ஸ் ஆட்டோஸப்ட்-*
*புங்குடுதீவு-10.*
*சுவிற்சர்லாந்த்.*



# நினைவுகள்

# பகவத்கீதையும் - பரிசுத்த வேதாகமமும்.

- மானிடர்கள் தமக்கு அதுவேண்டும் இதுவேண்டும் என்ற ஆசையினால் அறிவை இழந்து தம்முடைய சுபாவத்துக்குக் கட்டுப்பட்டு அந்த அந்த தேவதைகளுக்காக ஏற்பட்ட விரதங்களுடன் இதர தேவதைகளைச்சரணடைகிறார்கள்.
- அப்படியிருந்தபோதும் அந்த பக்தன் எந்த எந்த தேவதைகளின் சரீரத்தை பூஜிக்க விரும்புகிறானோ அவனுக்கு அத்தகைய சிரத்தையை நான் நிலைபெறச்செய்கிறேன்.
-அவன் அந்தச் சிரத்தையுடன் அந்தத் தேவதைக்குப் பூஜைசெய்கிறான்.தவிர,நானே அமைத்துத் தந்த பலனை அந்தத்தேவதை மூலமாக அவன் பெறுகிறான்.
-ஆனால் அத்தகைய சிற்றறிவுபடைத்தவர்கள் சம்பாதித்த அந்தப்பலன் அழியக்கூடியது.
தேவர்களை வழிபடுபவர்கள் தேவனை அடைகிறார்கள் ..என்னுடைய பக்தனோவெனில் என்னையே அடைகிறான்.
-அழிவற்றதும் ஈடில்லாததுமான என்னுடைய பரமாத்மசொரூபத்தை அறியாத அறிவிலிகள் பிறப்பில்லாத என்னைப் பிறந்தவன் என்று நினைக்கிறார்கள்.
-யோகமாயையில் மறைக்கப்பட்ட நான் எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரிவதில்லை....ஆகவே அறிவில்லாத இவ்வுலகம் என்னைப் பிறப்பற்றவனென்றும் அழிவற்றவனென்றும் அறிவதில்லை...
-கழிந்துபோனவைகளும் இருப்பவைகளும் வரப்போகிறவைகளுமான சகலபூதங்களையும் நான் அறிவேன்...ஆனால் என்னையோவெனில் எவனும் அறியான்.

(பகவத்கீதையில் கிருஸ்ணபரமாத்மா.
அத்:7. சுலோகம்:21-27)

...நீங்கள் என்னைத்தெரிந்துகொள்ளவில்லை.
நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்.நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்.
நீங்கள் ஒருவரையொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்.
உலகம் உங்களைப்பகைத்தால் அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்பே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்.
நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்.நீங்கள் உலகத்தாராய் இராதபடியினாலும் நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும் உலகம் உங்களைப்பகைக்கிறது.
ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச்சொன்ன வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள்.
அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால் உங்களையும் துன்பப்படுத்துவார்கள்.
அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால் உங்கள் வசனத்தையும்கைக்கொள்ளுவார்கள்.
அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தின் நிமித்தம் இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்..நான் வந்து அவர்களிடத்தில் பேசாது இருந்தேனானால் அவர்களுக்குப் பாவம் இருந்திராது.
இப்பொழுதோ தங்கள் பாவத்தைக்குறித்துப் போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை..
என்னைப்பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான்.

(பரிசுத்தவேதாகமத்தில் ஏசுபிரான்
யோவான்15: 16-23)



## சோதனையும் சாதனையும்.

மானிடராய்ப் பிறந்திட்டால்
வாழ்க்கையே பெருந்துன்பம்
இடையினிலே சிலபொழுது
இன்பமாய் இருந்தாலும்
தொடர்வதெது....? துன்பம்தான்!
அதை உணர்வோம் ஆயினும்நாம்
வாழ்வுக்காய்ப் போராடி மாள்கின்றோம்
வாழ்க்கை எது?
எப்போதும் துன்பம்தான்
வாழ்க்கை என்பேன்
இந்த உடல்-
வாழ்கின்ற நாள்வரையில்
வளர்கின்ற துன்பங்கள்
சொன்னாலும் தீராது...
சொல்லினிலே மாளாது
என்னைத்தன் கருவறையில்
சுமந்திட்ட என் அன்னை
என்றோ ஒருநாள் இந்த
உலகைவிட்டுப்போகின்றாள்...
மறுபொழுது என்பிள்ளைதனைவிட்டு
நானும் அந்த
வழியினிலேபோய்மறைவேன்..
வாழ்க்கைமுடிந்துவிடும்.
இந்த உலகினிலே-
வருவதற்கும் நேரமில்லை..
போவதற்கும் நேரமில்லை
இடையினிலே சிலகாலம்
எல்லோரும் இருக்கின்றோம்..

இருக்கின்ற எல்லோரும்
ஒன்றாகவாழ்வதில்லை
ஒன்றாக வாழ்பவர்கள்
ஒன்றாகப்போவதில்லை
ஒவ்வொருவர் தனிவழியே
ஒவ்வொருநாள் வந்ததுபோல்
ஒவ்வொருவர் தனிவழியே
ஒவ்வொருநாள் போய்மறைவோம்.
இறந்தவரைப் பிறந்தவர்கள்
மறக்கின்ற காலமிது
பிறந்தவரை மறந்தொருநாள்
பேசிடும் இப்பூமியிது
இதில் வாழ்க்கை என்பதெது.....?
இந்த உலகு ஒருநாள்
மறந்துவிடும். ஆயினும் நம்
இறைவனவன் எப்போதும் நமைமறவான்
ஏனெனில் நாம்
வந்ததெங்கே அறிவோம் நாம்
ஆயினும்நாம் ஓர்பொழுதும்
செல்கின்ற பாதையினைத் தெளியோமே
ஆதலினால்...
வாழ்கின்றவரையில் இந்த
மண்ணுலகம்தனைப்படைத்து
ஆள்கின்ற இறைவனுக்கோ இயற்கைக்கோ
ஏதேனுமொன்றைச்
சாதித்துவிட்டுநாம்
சாவதுதான் சாதனைகள்.

-இளந்தீவகன்.



# தமிழ்நாட்டைச் சார்ந்தினோம்.

*என்று தணியும் இந்தச்சுதந்திரதாகம்*
*என்று மடியும் எங்கள் அடிமையின்மோகம்*
*என்றெமதன்னைகை விலங்குகள்போகும்*
*என்றெமதின்னல்கள் தீர்ந்துபொய்யாகும்,*

—மகாகவிபாரதியார்.

(முன் இதழ்கள் சுருக்கம்: முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுண்டதை அடுத்து ஒன்றரைமாதங்களின்பின் தமிழ்நாட்டிற்குச்சென்றிருந்தோம். ஒருவருடமாகிறது என்றாலும் பிரயாண அனுபவங்கள் மனதைவிட்டகலவில்லை. விமானநிலைய பிரச்சனைகளைக்கடந்து சென்னைநகருக்குள் சென்றோம். அங்கு ஏற்பட்ட நிகழ்வுகளை இந்த இதழில் வாசியுங்கள்.)

''தமிழீழவிடுதலைப்புலிகள்தான் ராஜீவ்காந்தியைக்கொன்றார்கள் என்பதற்கு ஏதாவது ஆதாரம் கிடைத்துள்ளதா?''
—தகவல்களை அள்ளிக்கொட்டிக்கொண்டிருந்த நண்பர் வைரவனை இடைமறித்தேன்.
அவர் சிலசமயம் கதைப்பதற்கே பயந்தார்.
புலிகள் என்று உச்சரிக்கும்போது அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டார்.
குளிரூட்டப்பட்ட அறை.ஓரளவு இந்திய வெப்பத்தின் எரிச்சலைத்தணித்தது.
ஆனாலும், பிள்ளைகள் இருவரும் காற்றாடிகளையும் பறக்கவிட்டனர்.
நண்பர் அடிக்கடி சுற்றுமுற்றும் பார்த்தபடி கதைத்தார்.அதனால்,
அறைக்கதவு,ஜன்னல்கள் யாவற்றையும் மூடிவிட்டேன்.பின்பு—
''இப்போது பயமின்றி விசயத்தைக்கூறும்'' என்றேன்.
அன்றுவரை வெளியான பத்திரிகைச்செய்திகளை ஆதாரமாகவைத்துக்கொண்டு நண்பர் மளமளவென்று சொல்லத்தொடங்கினார்.
''ராஜீவ்காந்திக்கு மாலையணிவிக்கபெண் உடம்பில் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு வெடிக்கவைத்ததினால் ராஜீவ் கொலைசெய்யப்பட்டார்.

— வீ.ஆர்.வரதராஜா

அந்தப்பெண் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த தமிழ்ப்பெண்.பெயர் தாணு.
அவளின் உருவம் வீடியோவில் பதிந்துள்ளது.தனியாக அப்பெண்
இக்கொலையைச்செய்யவில்லை.ஒற்றைக்கண் சிவராசன்,சுபா,நளினி,முருகன்
இப்படி ஒருகூட்டமேசேர்ந்து இதைச்செய்துள்ளனர்.
தாணு தமிழீழவிடுதலைப்புலிகளின் தற்கொலைப்படையைச்சேர்ந்தவள்.
அந்த இயக்கத்தில் மாத்திரமே வெடிகுண்டுகளோடுவெடித்து தற்கொலைசெய்து
கொள்பவர்கள் உள்ளார்கள்.அதிலும் குறிப்பாக தற்கொலைப்படையில்
பெண்களும் உள்ள இயக்கம் அதுமாத்திரமே.
அத்துடன் தமிழ்நாடு தி.மு.க.சட்டசபை ராஜீவ்காந்தியின்
ஆலோசனையின்பேரிலேயே கலைக்கப்பட்டது.கூறப்பட்ட காரணம் விடுதலைப்
புலிகளின் நடமாட்டத்தைக்கட்டுப்படுத்தத் தி.மு.க அரசு தவறிவிட்டது
என்பதுதான்.
எனவே தி.மு.க வின் ஆலோசனையின்பேரில் தமிழீழவிடுதலைப்புலிகள்
இக்கொலையைச்செய்துள்ளனர்.கொலை நடந்தநேரம் இரவு மணி பத்து.
ஆனால்,தி.மு.க வின் தேர்தல்கூட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் அன்று இரவு
ஒன்பது மணியுடன் நிறுத்தப்பட்டன.சென்னையில்நடந்த கூட்டத்தின்போது
கலைஞர் கருணாநிதியின்மகன் இறுதியாகப்பேசினார்:
இன்னும் சிறிதுநேரத்தில் ஒருமுக்கியசம்பவம் நடைபெறவிருக்கின்றது.
எனவே கூட்டத்தை நாம் இத்துடன் முடிக்கின்றோம்.
அவர் அப்படிப்பேசும்போது மற்றொரு தி.மு.க.பிரமுகரான வை.கோபால்சாமியும்
அவர் அருகில் இருந்துள்ளார்.அதனால்தான் கொலை நடந்ததையடுத்து
தி.மு.க.பிரமுகர்கள் ஆதரவாளர்களின் உடமைகள் தாக்குதலுக்கு
இலக்காகின.ராஜீவ்காந்தி கொலைசெய்யப்படுவது முன்கூட்டியே தி.மு.க.வுக்குத்
தெரிந்துள்ளது.
கொலையில் தி.மு.க வை சம்பந்தப்படுத்த பொலிசார் பகீரதமுயற்சி
எடுக்கின்றனர்..ஆனால்,அவர்களுக்கெதிராக எந்தத்தகவலும் கிடைக்கவில்லை.
இலங்கைத்தமிழருக்கெதிராக தமிழ்நாடு அரசும் மத்திய அரசும்
செயற்பட ஆரம்பித்துள்ளது.தமிழ்நாடுமுழுவதும் மத்திய புலனாய்வுத்
துறை அதிகாரிகள் சுழன்றுகொண்டிருக்கின்றனர்.
புலிகளைவேட்டையாடுகிறோம் என்றுகூறிக்கொண்டு இலங்கைத்தமிழருக்கு
எதிராக புலன்விசாரணைகளைச்செய்கின்றனர்.''
—நண்பர் சிறிது மூச்சுவாங்கினார்.
''தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இதுபற்றி மிகத்
தெளிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளாரே.இந்தக்கொலையைத்தாங்கள்
செய்யவில்லையென அவர் அறுதியிட்டுக்கூறியுள்ளார்''
நான் இப்படிச்சொன்னதும் நண்பர் பலமாகத்தலையை ஆட்டினார்.
''இந்திய அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை....''
''புலிகள்தான் குற்றவாளிகள் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை..ஆனால்,
அவர்களை குற்றவாளிகளாக்குவதில் முனைகிறார்கள்.ஏன்? மாலைதீவில்
தமிழ்வாலிபர்களின் உதவியுடன் புரட்சிநடக்க முற்பட்டதென்ற
செய்திவந்ததும் இப்படித்தான் சொன்னார்கள்.தமிழீழ விடுதலைப்புலிகள்
மாலைதீவைப் பிடிக்க முயன்றார்கள் என்றும் செய்திகள் வந்தன.ஆனால்
உண்மை அதுவல்ல என்பது தாமதமாகத்தான் தெரியவந்தது.''

''தமிழீழவிடுதலைப்புலிகள் இக்கொலையைச் செய்யவில்லை என்பது எனக்கும் தெரியும் .ஆனால் தேர்தல்நேரம் கொலை நடந்ததனால் அது அரசியல் பிரச்சனையாகிவிட்டது.''
''ஏன் தமிழ்நாடு வாக்காளர்கள் அனைவரும் அ.தி.மு.க வுக்கும்,காங்கிரசிற்கும் வாக்களித்தனர்'?''
''இங்குள்ள மக்களின் உணர்வுகளை அரசியல்வாதிகள் குழப்பிவிட்டார்கள்... ராஜீவ்காந்திமீது தமிழகமக்களுக்கு ஓரளவு அனுதாபம் உண்டு.அதனை இந்தத்தேர்தலில் பயன்படுத்திக்கொண்டுவிட்டார்கள்.தமிழ்நாட்டில் அவர் கொலைசெய்யப்பட்டதனால்தான் இவ்வளவு பரபரப்பு.வேறுமாநிலங்களில் இச்சம்பவம் நடைபெற்றிருந்தால் இவ்வளவு பரபரப்பு தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்காது என நினைக்கிறேன்.''
''தமிழ்நாடு தேர்தல்வெற்றியிலிருந்து தமிழகமக்கள் அனைவரும் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும் தமிழீழத்தமிழ்மக்களுக்கும் எதிரானவர்கள் என்று சொல்லலாமா'?''
''இல்லை...புலிகளுக்கு இங்கு ஆதரவு இல்லை என்று குறிப்பிடமுடியாது. ஆனால் அரசாங்க அளவில் கடும் எதிர்ப்பு என்பது உண்மைதான்.முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு தொலைபேசியில் புலிகள் மிரட்டியதாக ஒருசெய்தி. அதனையடுத்து அவரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசே இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்கின்றது.புலிகளை அடக்குவதில் முதலமைச்சர் மிகவும் தீவிரமாக உள்ளார்...''
''சரி..இப்போது எங்கள் பிரச்சனைக்கு வருவோம்.என்னென்ன ஏற்பாடுகளைச் செய்துள்ளீர்'?''
-நான் நண்பரை இடைமறித்தேன்.
''உங்கள் புரோக்கிராம் என்ன'?...அதை முதலில் சொல்லும்.''
''தமிழ்நாட்டிலுள்ள சகல இந்து ஆலயங்களுக்கும் செல்லவேண்டும்... இது என் மனைவியின் விருப்பம்.கொடைக்கானல்,ஊட்டி,ஆகியவற்றுடன் பிரபலமான இடங்களுக்கும் போகவேண்டும்..''
''முதலில் நீங்கள் அவதானமாக இருக்கவேண்டும்.யாழ்ப்பாணத்துப்பேச்சைக் குறைக்கவேண்டும்...இலங்கையர் என்றால் ஹோட்டல்களில் ரூம் கொடுக்கமாட்டார்கள்...ராஜீவ் கொலையில் சந்தேகப்படும் சுபா பல இடங்களில் நாகரீக உடையணிந்து திரிவதாகச்செய்திவந்துள்ளது. எனவே உமது மனைவி இங்கே இருக்கும்வரை புடவை அணிந்து இருப்பது நல்லது.நீரும் இந்த சன்கிளாஸுடன் நடமாடாதேயும்.''
''போக்குவரத்து ஒழுங்குகள் எப்படி'?''
''உல்லாசப்பிரயாணிகளுக்கு வழங்கும் மினிபஸ் ஒன்று ஏற்பாடு செய்துள்ளேன். வாடகை அதிகம்தான் என்றாலும் வசதியாக இருக்கும்.எல்லா ஏற்பாடுகளையும் டிரைவரே கவனிப்பார். தமிழ்நாடுமுழுவதும் சுற்றும் அனுபவமிக்க டிரைவர்.''
மகன் அகிலன் சினிமாத்தியேட்டர் ஒன்றில் படம் பார்க்கவேண்டும் என்றார். அதனை நண்பரிடம் தெரிவித்தார்.
''இங்கு அருகில் உள்ளதொரு தியேட்டரில் மாநகரக்காவல் என்ற புதுப்படம் ஓடிக்கொண்டிருக்கிறது.விஜயகாந்த் கதாநாயகன்.அதிலும் ஒரு விசேடம்

இருக்கின்றது.நடிகர் விஜயகாந்த் தி.மு.க.ஆதரவாளர்.ராஜீவ்காந்தி கொலையையடுத்து நடந்த கலவரத்தில் இவரின் வீடும்தாக்கப்பட்டது. பொலிஸாரை உதவிக்குவருமாறு இவர் அழைத்தும் பொலிஸார் வரவில்லையாம்.அதனால் பொலிஸ் பாத்திரமேற்று இனி தாம் நடிக்கப்போவதில்லையென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.அவர் பொலிஸ் அதிகாரியாக நடித்த இறுதிப்படம்தான் மாநகரக்காவல்.''

சாப்பாடும் தண்ணீரும்தான் எமக்குத்தமிழ்நாட்டில் பிரச்சனை.
சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைக்கடையில்வாங்கினோம்.
மருந்துவிற்கும் கடைகளில் மாத்திரமே இத்தண்ணீர் கிடைக்கும்.
நாங்கள் சாப்பிட்டு சிறிது ஓய்வெடுத்துக்கொண்டோம்.
சிறிதுநேரத்தில் வருவதாகக்கூறி நண்பர் விடைபெற்றுக்கொண்டார்.
எக்மோர் புகையிரதநிலையத்தைப்பார்த்தேன்.மக்கள்வெள்ளம் அங்குமிங்கும் கரைபுரண்டுகொண்டிருந்தது.
புகையிரதநிலையத்திற்கு எதிரேபிரதானபாதை.
வாகனங்கள் ஓடிக்கொண்டுதானிருந்தன.ஆனால்–
மக்கள் பாதைமுழுவதையும் ஆக்கிரமித்துக்கொண்டிருந்தனர்.
வாகனங்கள் வரும்போது ஒதுங்குவதும்,மீண்டும் பாதைக்குவருவதுமாக இருந்தனர்.
பாதையோரங்களில் இருந்த அங்காடி வியாபாரிகளில் சிறுவர்களும் காணப்பட்டனர்.மாம்பழங்கள் கண்ணைக்கவர்ந்தன.
மாம்பழம் சாப்பிட்டு எத்தனைவருடங்களாகின்றன.
மாம்பழத்தின்மீது பிள்ளைகளுக்குத் தீராத ஆசை.அதனைநிவர்த்தி செய்வதும் அவசியமல்லவா!
மாம்பழங்கள் வாங்கினேன்.மாம்பழங்களைவெட்டுவதற்கு ஒரு கத்தி வாங்கினேன்.
கத்தி மாம்பழத்தைவிட விலை அதிகம்.மாம்பழத்தின் சுவையே தனி.
ஆனால்,அன்னாசிப்பழம்,பப்பாளிப்பழம் ஆகியன அங்கு சுவையே இல்லை என்று நண்பர் கூறினார்.
ஆயிற்று.
இரவு இரண்டாவது காட்சி சினிமாவுக்குப் புறப்பட்டோம்.
நண்பர் வந்து எல்லா ஏற்பாடுகளையும்செய்தார்.எக்மோரில் உள்ள அல்பர்ட் என்ற தியேட்டருக்குச்சென்றோம்.அது–
ஒரு மாடிக்கட்டிடம்.மூன்று தியேட்டர்களை ஒன்றாகக்கொண்டது.
பேபி அல்பர்ட்,மினி அல்பர்ட்,அல்பர்ட் ஆகியவையே அவற்றின் பெயர்கள்.
கூட்டம் அங்கே முண்டியடித்துக்கொண்டு நின்றது.
சினிமாவிலிருந்து தமிழகமக்களை எந்தச்சக்தியாலும் பிரிக்கவே முடியாது.
தமிழகமக்கள் உணவின்றிக்கூட இருந்துவிடுவார்கள்.ஆனால்,
சினிமா பார்க்காமல் அவர்களால் இருக்கவே முடியாது. சென்னையிலுள்ள சகல சினிமாச்சாலைகளிலும் காட்சிநேரங்களின்போது கூட்டம் நிரம்பி வழியும்.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர்,காலஞ்சென்ற எம்.ஜி.ஆர் ஒரு புதியபாதையைக்காட்டிச்சென்றார்.அது-
ஒரு நடிகனும் முதலமைச்சராகலாம் என்பதுதான்.
அதனால்,இப்போதுள்ள எல்லா முன்னணி நடிகர்களுமே முதலமைச்சர் ஆவதற்குத் தம்மைத் தயார்செய்துகொள்கின்றனராம்.
உங்களுக்கொரு தகவல் சொல்கிறேன்.இரகசியமாகவைத்துக்கொள்ளுங்கள்..
நடிகர் விஜயகாந்த்கூட அந்தவரிசையில் ஒருவராம்.
நண்பர்வைரவன் கூட்டத்தினுள்புகுந்து டிக்கட் வாங்கிக்கொடுத்தார்.
அவரே குறிப்பிட்ட படம் ஓடும் இடத்துக்கும் அழைத்துச்சென்றார்.
ஆசனங்களின் இலக்கங்கள் டிக்கட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தன.
ஆனால்,நாங்கள் பிழையான இலக்க ஆசனங்களில் அமர்ந்ததினால் சிறிது சிக்கல் ஏற்பட்டுவிட்டது.
படத்தின் ஆரம்பத்தில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயராம் ஜெயலலிதா பதவியேற்பு வைபவம் காட்டப்பட்டது.
அவரும் சினிமாவின்மூலம் பிரபலமானவர்.
ஜெயலலிதா கழுத்தைச்சுற்றி ஒரு கறுப்புநிற அங்கி அணிந்திருந்தார்.
முகம் தலை ஆகியவற்றைத்தவிர உடம்புமுழுவதையும் அந்த அங்கி மறைத்திருந்தது.
புளட் புரூவ் எனப்படுகின்ற குண்டுதுளைக்காத ஆடை அணிந்திருந்தார்.
அதனைமறைப்பதற்காகவே அந்தக் கறுப்புநிற அங்கி.
அவருக்குப்பலத்த பாதுகாவல் வழங்கப்பட்டிருந்தது.
ஏ.கே.47 எனப்படுகின்ற சக்திவாய்ந்த இயந்திரத் துப்பாக்கிகளுடன் இரண்டுவீரர்கள் அவருடனேயே வந்தனர்.
கம்பீரமாக மேடைக்குவந்த அவர் தமிழகக்கவர்னர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.
தமிழக முதலமைச்சர் எவருக்குமே இல்லாத பாதுகாப்பு இவருக்கு மட்டும் ஏன்?

---

## சமையல் குறிப்பு:



குளிர்பானம்(சர்பத்)

தேவையான பொருட்கள்:
சீனி -1கிலோ
தண்ணீர் -1லீட்டர்
வனிலா சீனி -6 தேக்கரண்டி
உணவுச்சாயம் (விரும்பியநிறத்தில்)-போதிய அளவு.

செய்முறை:

ஒருபாத்திரத்தை அடுப்பில்வைத்து நீரை ஊற்றி மரக்கரண்டி ஒன்றின் பின்பக்கத்தை நீருள் நிறுத்தி நீர்மட்ட அளவை தடயம்வைத்துக் கொள்ளவும்.பின் நீரை சூடாக்கி சீனியைக்கொட்டி கரையும்வரை கலக்கவும்.
கிட்டத்தட்ட 15 நிமிடங்களுக்கு கொதிக்கவிடவும். (இடையிடையே கலக்கிவிடவும்) பின்னர் கலவையினுள் உணவுச்சாயத்தையும் வனிலாச் சீனியையும் கொட்டிக் கலக்கவும். (மறுபக்கம்)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் அவருடைய உயிருக்கு ஆபத்தாம்.
ராஜீவ்காந்தியைப்போல் அவரும் வெடிகுண்டுத்தாக்குதலுக்கு இலக்காகலாம் என்ற அச்சம்.
முதலமைச்சருக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தையும் மத்திய அரசே செய்கிறது..ஆனால்,
இந்தக்கொலைப்பயமுறுத்தலுக்கான காரணம் என்ன'? முதலமைச்சரின் சார்பில் இதுபற்றி விளங்கப்படுத்தப்படவில்லை.
ராஜீவ்காந்தியை ஆதரித்ததினால்தான் அவருக்கும் ஆபத்து என்றுமட்டுமே சொல்லப்படுகிறது.
செல்வி ஜெயலலிதா சத்தியப்பிரமாணத்தையடுத்து படம் துவங்கியது.
சிலவருடங்களின்பின் விசிலடிக்கும் சத்தமும் கைதட்டலும் கேட்டன.
நடிகர் விஜயகாந்தின் சப்பாத்துக்காலைக்கண்டதுமே விசிலடிக்கத் துவங்கிவிட்டார்கள்.
அந்தப்படத்தில் நடிகை லட்சுமியின் நடிப்பு ரசிக்கக்கூடியதாக இருந்தது.
படம் முடிந்ததும் கூட்டத்தோடுகூட்டமாக ஹோட்டலுக்கு வந்துசேர்ந்தோம்.
இரண்டாவது சினிமா காட்சிமுடிந்து எல்லோரும் வீடுசென்றதின்பின் சென்னைவீதிகளில் நடமாடுவது ஆபத்து.
சில இடங்களில் அவ்வாறு நடமாடினால் ''நீ புலியா?'' எனக்கேட்டு பொலிஸாரினால் தாக்கப்படுவார்கள்.
பின்னிரவுக்குப் பின்பு தமிழகத்தில் புலிகள் நடமாடும் கோமாம்.
தமிழ் ஈழத்தில் நடப்பது ஒரு தர்மயுத்தம்..ஆனால்,
தமிழக அரசியலில் அதை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்பதை நினைக்கும்போது வேதனையாக இருக்கின்றது.
அடுத்தநாள் காலை தினத்தந்தி பத்திரிகை அறைக்குவந்தது.
அதில்,பரபரப்பான தலையங்கச்செய்தி இடம்பெற்றிருந்தது.
அது.....?
(அடுத்த இதழில் தொடரும்)

---

## முன்பக்கத் தொடர்ச்சி:

தடயம்வைத்த மர அகப்பையை கொதிக்கும் கலவையிலுள் நிறுத்தி,முன்னர் தடயம் இட்ட இடம்வரை வற்றவிட்டு இறக்கி ஆறவிடவும்.ஒரு லீற்றர் தடித்த குளிர்பானம் தயாராகிவிடும்.இதனை போத்தல்களில் ஊற்றி பத்திரப்படுத்தலாம்.

பரிமாறும் முறை:
தடிப்பான குளிர்பானம் -4 மேசைக்கரண்டி.
நீரில் ஊறவைத்த கசகசா -1 மேசைக்கரண்டி.
சிறிதாக நறுக்கிய பழத்துண்டுகள் -2 மேசைக்கரண்டி.
கட்டிப்பால் -2 மேசைக்கரண்டி.
தண்ணீர் -1 கிளாஸ்.
என்ற விகிதத்தில் கலந்து ஐஸ்கட்டிபோட்டுப் பரிமாறலாம்.

-கடேஸ் மாமி.

# பூவரசு
## வாசகர் கருத்து.

இனிய தமிழ் ஏடு.

1.வெளிநாடுகளில் தமிழ்ச்சஞ்சிகைகள் வெளியிடப்படுவதை நீங்கள் வரவேற்கிறீர்களா?
ஆம்.... இல்லை....

2.வெளிவரும் சஞ்சிகைகளில் அனேகமானவை தமிழ்க்கலை,கலாச்சாரப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?
ஆம்.... இல்லை....

3.உங்களைக்கவர்ந்த ஒரு சஞ்சிகையை நீங்கள் தொடர்ந்து வாசிக்கவிரும்புவதன் காரணம் -
(அ) அது உங்கள் கருத்துக்களைப்பிரதிபலிக்கிறது என்பதால்.
(ஆ) அந்தச்சஞ்சிகையின் கருத்துக்கள் உங்களுக்குப் பிடித்திருக்கிறது என்பதால்.

4.வெளிநாடுகளில் தமிழ்ச்சஞ்சிகைகள் வெளியிடப்படுவதன் காரணம் எதுவாக இருக்குமென்று நீங்கள் உணர்கிறீர்கள்?
(அ) சஞ்சிகையாளரின் தமிழார்வம்
(ஆ) சஞ்சிகையாளரின் தாயகத்தாகம்
(இ) சஞ்சிகையாளரின் சுயநலப்போக்கு
(ஈ) சஞ்சிகையாளரின் பொழுதுபோக்கு

5.ஒரு சஞ்சிகையின் போக்கு எத்தகையதாக இருக்கவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்?
(அ) நடுநிலைக்கொள்கை.
(ஆ) ஒருபக்கச்சார்பு
(இ) எந்தக்கொள்கையுமின்றி எல்லாவற்றையும் அங்கீகரித்தல்.

6.தற்போது புலம்பெயர்ந்து வாழும் பிரபல படைப்பாளிகளைப்பற்றிய உங்கள் பொதுவான கருத்து என்ன?
(அ) தரமான ஆக்கங்களைத்தருகிறார்கள்.
(ஆ) கருத்தின்றி கலாபூர்வமாக எழுதுகிறார்கள்.
(இ) கலையுணர்வின்றி கருத்துக்களைமட்டும் வெளிப்படுத்துகிறார்கள்.
(ஈ) ஏனோதானோவென்று எழுதுகிறார்கள்.
(உ) எழுதுவதாய்த்தெரியவில்லை.

7.வளர்ந்துவரும் புதிய தலைமுறைப் படைப்பாளிகளைப்பற்றி உங்கள் கருத்து.

(அ) நன்றாக எழுதுகிறார்கள்.
(ஆ) கருத்துக்களின்றி கலாபூர்வமாக எழுதுகிறார்கள்.
(இ) கலையுணர்வின்றி கருத்துக்களைமட்டும் விதைக்கிறார்கள்.
(ஈ) ஏனோதானோவென்று எழுதுகிறார்கள்.
(உ) முன்னேற்றம் தெரியவில்லை.

8. பின்வரும் சஞ்சிகைகளில் உங்களைக்கவர்ந்த சஞ்சிகைகளை வரிசைப்படுத்தி இலக்கமிடுங்கள்.

(எங்களுக்கு இதுவரைகிடைத்துள்ள சில சஞ்சிகைகளின் பெயர்களையே இங்கு குறிப்பிட்டுள்ளோம். இவற்றில் உங்களுக்குக்கிடைக்காதசஞ்சிகைகளும் இருக்கலாம்.அதேசமயம் உங்களுக்குக்கிடைத்து எங்களுக்குக்கிடைக்காத சஞ்சிகைகளும் இருக்கலாம். இந்தக்கேள்விக்கான பதிலில் உங்களுக்குக் கிடைக்கின்ற சஞ்சிகைகளின் பெயர்களையும் நீங்கள் சேர்த்து அவற்றில் பத்து சஞ்சிகைகளுக்குள்ளாக வரிசைப்படுத்தி எழுதுங்கள்)

(அ) கலைவிளக்கு.
(ஆ) எலையா.
(இ) தூண்டில்.
(ஈ) பிரவாகம்.
(உ) தமிழ்நாதம்.
(ஊ) மண்.
(எ) சிறுவர் அமுதம்.
(ஏ) கடல்.
(ஐ) வண்ணத்துப்பூச்சி.
(ஒ) பனி.
(ஓ) பண்பாடு.
(ஔ) ஓசை (பிரான்ஸ்)

9.நீங்கள் அதிகமாய் விரும்பும் ஒரு சஞ்சிகையை நீங்கள் வாசிப்பது-

(அ) தரமான ஆக்கங்களைத்தருவதால்.
(ஆ) சஞ்சிகையாளர் உங்கள் நண்பர்கள் என்பதால்.
(இ) உங்களுக்கு வேண்டப்பட்டவர்கள் எழுதுவதால்.
(ஈ) உங்கள் கருத்துக்களைப்பிரதிபலிப்பதாய் அமைந்திருப்பதால்.
(உ) உங்களுக்கு விருப்பமான ஒரு அமைப்பைச்சார்ந்திருப்பதால்.

10.நீங்கள் சஞ்சிகைகளை வாசிப்பது

(அ) பொழுதுபோக.
(ஆ) உலக விசயங்களைத்தெரிந்துகொள்ள.
(இ) இலக்கிய ஆர்வத்தினால்.

11.இந்திய தமிழ்ச்சஞ்சிகைகளில் நீங்கள் விரும்பி வாசிக்கும் ஐந்து சஞ்சிகைகளை வரிசைப்படுத்திக்கூறுங்கள்

(அ)......................
(ஆ)......................
(இ)......................
(ஈ)......................
(உ)......................

12.பூவரசு இனிய தமிழ் ஏட்டை நீங்கள் தொடர்ந்து வாசிக்கிறீர்களா?
ஆம்........ இல்லை........ எப்போதாவது.✓........

13.பூவரசு உங்களைக்கவர்ந்திருக்கிறதா?
ஆம்✓........ இல்லை........ ஓரளவு............

14.பூவரசு இனியதமிழ் ஏட்டில் உங்களைக்கவர்ந்துள்ள அம்சங்கள் (உங்கள் விருப்பத்தை வரிசைப்படுத்தி இலக்கமிடுங்கள்)

(அ) சிறுகதைகள்.
(ஆ) கவிதைகள்.
(இ) கட்டுரைகள்
(ஈ) நெடுங்கதைகள்.
(உ) தொடர்கதைகள்.
(ஊ) மாதர்பகுதி.
(எ) சிறுவர்பகுதி.
(ஏ) செய்திகள்.
(ஐ) சந்திப்போம் சிந்திப்போம்.
(ஒ) நாங்கள் ஒரு நாலுபேர்.

15.பூவரசு இனியதமிழ் ஏடு வாசகர் வட்டம் என்னும் ஒரு அணியின்கீழ் கலை இலக்கியவாதிகளை அணிதிரட்டும் முயற்சிபற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

தேவையானது............ தேவையில்லை........... ஓரளவு அவசியம்........

16.பூவரசு வாசகவட்டத்தில் நீங்கள் அங்கத்துவம் பெற்றுள்ளீர்களா?
ஆம்.......... இல்லை✓..........

17.பூவரசு வாசகர்வட்டத்தில் இடம்பெற நீங்கள் விரும்புகிறீர்களா?
ஆம்.......... இல்லை✓..........

18.பூவரசு இனியதமிழ் ஏட்டில் ஏதேனும் மாற்றங்கள்செய்யப்படவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா?
ஆம்✓........ இல்லை............

19.பூவரசு இனியதமிழ் ஏட்டுக்கு நீங்கள் மேலும் ஏதாவது கருத்துக்களைக் கூறவிரும்பினால் அவைகளைக்குறிப்பிடுங்கள்.

வாசகர் பெயர்:.............................................

முகவரி:.............................................

.............................................

.............................................

.............................................

.............................................

(திகதி) (வாசகர் கையொப்பம்)

---

இந்தக் கருத்துக் கோவையை பூர்த்திசெய்து நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

"Poovarasu"
Sinniah Maheswaran,
Neuwieder Str-32,
2800 Bremen-41,
Germany.

# வாசகநெஞ்சங்கள்......

பூவரசு ஆசிரியர்க்கு!

தமிழீழமக்களின் உடலோடும் உயிரோடும் கலந்துவிட்ட தமிழீழவிடுதலை என்னும் இலட்சியப்போர் பல்வேறு இடையூறுகளுக்குமத்தியிலும் உறுதிதளராது முன்னெடுத்துச்செல்லப்படுகிறது.

மூவாயிரத்து ஐநூற்றுக்கும் மேற்பட்ட போராளிகளையும்,பல்லாயிரம் மக்களையும் இழந்தநிலையிலும் போராட்டம் வீறாப்புடன் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.மனம்சோர்ந்துவிடவில்லை;போராட்டம்கைவிடப்படவுமில்லை.

வீரமாணம் அடைந்து மாவீரர்களாகிவிட்ட போராளிகளின் கால்தடம் பதிந்தமண்ணிலிருந்து பல்லாயிரம்போராளிகள் இன்று உருவாகிவருகிறார்கள். பள்ளிக்கு புத்தகம் தூக்கிச்செல்லவேண்டிய இளம் பாம்பரையினரின் கைகள் இன்று துவக்கு ஏந்தியுள்ளன.இளம்பாம்பரை தன்னை முழுமையாக விடுதலைப்போரில் இணைக்கத்தொடங்கியுள்ளனர்.இளம்பரம்பரை தம்முன் இன்றுள்ள கடமையை உணர்ந்து செயற்படத்தொடங்கியுள்ளனர்.

எனவே இடம்பெயர்ந்து வாழும் தமிழீழத்தின் எழுத்தாளர்கள் அனைவரும் தங்கள் எழுத்தாற்றலால் வெளிநாடுவாழ் தமிழீழமக்களிடையே தமிழ் தேசிய உணர்வை வளர்ப்பதில் தங்கள் பங்களிப்பை நல்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாளை எமதுநாடு விடுதலையடையும்போது இவர்களை இவர்களதுபங்களிப்பை தமிழினம் மறக்கமாட்டாது.

— யோகரட்ணம்
(பிறேமகாவலன்)

---

*ஒரு எழுத்தாளனாய் இருந்து*
*எழுதிப்பார்ப்பதில்..*
*சுகமும் துக்கமும்*
*எழுத்தோடு இருக்கும் என்பது*
*உண்மைதான்!*
*ஆனால்*
*தமிழுக்கென்று*
*அந்த நிலத்துக்கென்று*
*எழுதும்போது.....*
*வலிமை*
*தோட்டாக்களுக்கல்ல*
*வார்த்தைகளுக்குத்தான்*
*என்பதனால்*
*துப்பாக்கிப் புரட்சிகளைவிட*
*இந்த பேனா புரட்சி*
*கொஞ்சம் பொறுப்புள்ளதுதான்...*
*அதனால்தான்*
*எழுதுங்கள்*
*எங்கள் நிலங்களைப்பற்றி*
*எங்கள்*
*நிஜங்களைப்பற்றி!*

*—நிலானி சீ விநோ.*

# இலக்கிய இன்பம்

*(பூவரசு வாசகர்களுக்கு சிலேடை புதிதல்ல.
சிலேடை தமிழ்க்கவிதையில் ஓர் அலங்காரம்.
கவாரசனை என்பது கவிதையில் ஓர் அம்சம்
என்ற பார்வையோடு பார்க்கையில் சிலேடை என்ற
சிங்காரத்தை அணுவணுவாக அனுபவிக்கலாம்.
பழைய தமிழ் இலக்கியத்தைப் புதிய
தலைமுறைக்கு அறிவார்ந்தமுறையில் அறிமுகப்
படுத்தியுள்ளார் ரவிவர்மா.
அவரின் ''சிலேடைப்பூக்கள்'' நூலிலிருந்து
மற்றொருமலர் உங்கள் முன்...)*

புராணக்குறும்பு.

கட்டளை
இட்டதுபோல
அந்தக்
கல்யாண வீடு
கலகலப்பாய் இருந்தது.

திண்ணை
விளிம்புகள்
நிரம்பி வழிந்தன.

காலணிகளின்
கண்காட்சி
கீழ்வாசலில்
நடந்தது.

ஜோடிச்செருப்பு
அதிகரித்தபோது–
சிவப்பிரகாசர்
உள்ளே நுழைந்தார்.

புலவரைக்கூப்பிட்டுப்
புதிய நாற்காலியில்
பொருத்திவைத்தார்கள்.

அருகில் இருந்து
ஒரு
அழுகை சப்தம்–
அவரதுசெவிகளில்
சென்று இறங்கியது.

எட்டிப்பார்த்தார்
எதுகைப்புலவர்.

ஒரு
சின்னஞ்சிறுமி–
அண்ணன் அடித்ததாய்
அழுது கொண்டிருந்தாள்.

விழி திருப்பி
விசாரிப்பதற்குள்–
அன்னை ஒருத்தி
அருகே வந்தாள்.

மகனைப்பிடித்து
மார்பில் அடித்தாள்
பெண்ணைச்சுமந்து
பின்னால் போனாள்.

அடிபட்ட சிறுவன்
அப்பாவிடம்போனான்.
தண்டிப்பேன் என்று
தகப்பன் எழுந்தான்.

மனைவியிடம் இருந்த
மகளை–
மயிர்பிடித்து இழுத்தான்.

முதுகில் அறைந்தான்.

தடுக்கவந்த மனைவியைத்
தாடையில் அறைந்தான்.

புலவரால்
பொறுக்கமுடியவில்லை

இடம் மாற்றி
உட்கார்ந்து
இதயத்தை உயர்த்தினார்.

கெட்டிமேளம் கொட்டியது.

அட்சதை அனுப்பினார்.

புலவரின் பாதங்களைப்
புது மக்கள்
தொழுதார்கள்.

சட்டென்று வாழ்த்தாமல்
சிறுவிளக்கம் ஒன்று
சொன்னார் சிவப்பிரகாசர்.

''சிவனும் பார்வதியும்
சிரித்துப்பேசுகையில்
கணபதிக்கடவுள்
வந்தான்.

முருகனின் குறும்பு
முன்னிலும் அதிகம்.
இப்போது என்
காதுகளைக்கிள்ளிவான்
–என்று சிணுங்கினான்.

சிவபெருமான்
முருகனைக்கூப்பிட்டு
''என்னடா?'' என்றான்.

அன்னன்தான்
என்னை
அன்றாடம் பரிகாசம்
செய்கிறான்.
எனது
ஆறுமுகங்களில்
எத்தனை கண்களென்று
எண்ணிப்பார்த்தான்,
பின்னர் சிரித்தான்.
என்றுகுறைசொன்னான்.

பிள்ளையாரைப்பார்த்துச்
செய்தாயா?
என்றான் பரமசிவன்.

இல்லை
வம்புக்கு இழுத்தவன்
அவன்தான்
எனது துதிக்கையின் நீளத்தை
முழம்போட்டு அளந்தான்
அதனால்தான்—
நான் அவனது
கண்களை எண்ணினேன்
என்றான் கணபதி.

பார்த்தாயா
உன் பிள்ளைகளை
என்றான் பரமன்.

இருவரையும் இழுத்து
மார்பிரண்டில்
அணைத்தாள் பார்வதி.
உலகங்களை
உண்டாக்கிவைத்த
அந்த
உமாதேவி
உங்களையும் காக்கட்டும்.

குழந்தைகளை
மன்னிக்கும் மாண்பு
உங்களுக்கும்
உண்டாகட்டும்.

குறும்புகளை
ரசிக்கும் நெஞ்சம்
இருவருக்கும்
உருவாகட்டும்— என்றார்.

பாடல் இது ;-

அரனவன் இடத்திலே ஐங்கரன் வந்துதான்.
ஐயஎன் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினான் என்றே சிணுங்கிடவும்
அத்தன்வே லவனை நோக்கி
விரைவுடன் வினவவே அண்ணன்என் சென்னியில்
விளங்கு கண் எண்ணினன் என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ அப்படி
விகடம் ஏன் செய்தாய் என
மருவும் என் கைந்நீள முழம் அளந்தான்
என்ன மயிலவன் நகைத்து நிற்க
மலையரையன் உதவவரும் உமையவள் நோக்கிநின்
மைந்தரைப் பாராய் எனக்
கருதரிய கடலாடை உலகுபல அண்டம்
கருப்பமாய்ப் பெற்ற கன்னி
கணபதியை அருகழைத்(து) அகமகிழ்வு
கொண்டனள் களிப்புடன் உமைக் காக்கவே.

திரட்டித் தருபவர் : ஸ்ரீ. இரா. இரத்நராஜா

---

கற்பனை எனப்படுகிற அந்த அற்புதமான சக்தி
மனிதனிடத்தில் இல்லை என்றால் கலை என்று ஒன்று
வாழ்க்கையில் இடம் பெற்றிருக்க முடியாது. —கார்த்தி

# மௌனத்தில் அழுகின்ற மனங்கள்




(1986 காலங்களில் கையெழுத்துப்பிரதியாக வெளிவந்த, இந்துமகேஷ் எழுதிய 'மௌனத்தில் அழுகின்ற மனங்கள்' என்னும் இந்நவீனம் பூவாக வாசகர்களை மகிழ்விக்க- தொடராக பிரசுரிக்கப்படுகிறது.)

''மன்னிக்கவேண்டும்'' என்று டொச்சில் ஆரம்பித்த அந்தக் கறுப்பின அழகியை,
''என்னவேண்டும் உனக்கு?'' என்று ஆங்கிலத்தில் முந்திக்கொண்டான் விமல்.
அவள் இவனை அதிசயமாகப் பார்த்தாள்.....
''நான் உள்ளே வரலாமா?'' என்றாள் கெஞ்சும் பாவனையில்.
அவள் நின்ற தோரணை இவனுக்குப்பிடிக்காவிட்டாலும் அவளது முகபாவம் இரக்கப்படவைத்தது.
''வா!'' என்றான்.
அவள் அறைக்குள் நுழைந்ததும் கதவைச்சாத்தினான்...
இவள் சொல்லாமலே அவள் கிறிஸ்தோபரின் கட்டிலில்போய் உட்கார்ந்தாள்.
''ஒரு சிகரட் கொடேன்.'' என்று கையை நீட்டினாள்...
அப்போதுதான் அவளைச்சரியாகக்கவனித்தான் விமல்.
அவளது அகன்றவிழிகளில் ஒருபோதை தெரிந்தது...குடித்திருக்கிறாள்.
...அவளது கனத்த மார்பகங்கள் அவள் அணிந்திருந்த மெல்லிய வெண்ணிறக் கவுனுக்குமேலாகத்திமிறிக்கொண்டிருந்தன....
சில்லறைக்காகக்கையேந்தும் பிச்சைக்காரியைப்போல் இவள் சிகரட்டுக்காகக் கையேந்துகிறாள்...
''நான் புகைப்பதில்லை'' என்றான் விமல்...அவள் ஆச்சரியமாகப்பார்த்தாள்.
இவன் உண்மையிலேயே சிகரட் புகைப்பதில்லையா அல்லது பொய்சொல்கிறானா என்று ஆராயமுனைகிற பார்வை...
''உன்னிடம் ஒரு பத்து மார்க் இருக்குமா?''
''இல்லையே என்?''
அவள் இவனை ஒருவித வெறுமையாகப்பார்த்தாள்.
''நீ எனக்கு இனாமாகத்தரவேண்டாம்...தனியாக இருக்கிறாய்...நாங்கள் ரெண்டுபேரும் கொஞ்சம் சந்தோசமாக இருக்கலாம்...'' என்றாள் அவள் கொச்சையாக-கொஞ்சம் பச்சையாக.
விமலுக்குச்சட்டெனக் கோபம்வந்தது...அவளை அறைந்து கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளிவிடலாம் என்று மனம் துடித்தது.
நிதானித்தான்...
ஆத்திரப்படுவதில் அர்த்தம் இல்லை என்று தோன்றிற்று...
அவளுடைய இயல்பு அதுவாக இருக்கலாம்....அதைமாற்ற நான் யார்?
''மன்னித்துக்கொள்'' என்றான் விமல்.
கதவருகேபோய்நின்றுகொண்டான்...
''தயவுசெய்து வெளியே போ''
அவள் கட்டிலைவிட்டு இறங்காமல் அவனைப்பார்த்துச்சிரித்தாள்.
விமலைக்கேலிசெய்கின்ற சிரிப்பு...
விமல் கதவைத் திறந்துவைத்துக்கொண்டிருந்தான்.
''போ வெளியே!''
அவள் மெதுவாக அவனருகே வந்தாள்...அவன்மீது ஒரு அருவருப்பான பார்வையை வீசினாள்...
''நீ ஒரு அழுக்குப் பேர்வழி'' என்று இகழ்ச்சியாகச்சொல்லிவிட்டு அடுத்த அறையைநோக்கி நடந்தாள் அவள்.

விமல் மறுபடி கதவைச் சாத்திவிட்டுப் படுக்கைக்கு வந்தான்...
போர்வையை இழுத்துமூடிக்கொண்டபோது மீண்டும் கதவு தட்டப்பட்டது...
மறுபடியும் அந்தக்கானாக்காரிதானோ'?

கதவைத்திறந்துகொண்டு கிறிஸ்தோபர் உள்ளே வந்தான்...
''என்ன கிறிஸ்டி இண்டைக்கு இவ்வளவுநேரம்'?''
கிறிஸ்தோபர் அதற்குப்பதில் சொல்லவில்லை....
''இன்னும் நீ தூங்கவில்லையா விமல்'?''என்று திருப்பிக்கேட்டான் அவன்...
''தூக்கத்தையும் மறந்து வாழ்க்கையை இரசிக்கிற அளவுக்கு நீயும்
மாறிக்கொண்டிருக்கிறை என்ன'?''
-கிறிஸ்தோபர்கேட்டது விமலுக்கு விளங்கவில்லை.
''கானாக்காரி கனநேரமாய் இங்கை இருந்தாளா'?''
-கிறிஸ்தோபரின் கேள்வியில் கிண்டல் தொனித்தது...
விமல் சட்டென எழுந்து உட்கார்ந்தான்...
''கிறிஸ்டி...நீ என்ன கதைக்கிறை'?''
''பொறு...பொறு....இப்ப நீ ஏன் பதட்டப்படுகிறை...விமல் இதிலை ஒரு
தப்பும் இல்லை...உடல் உணர்ச்சிகளைக்கட்டுப்படுத்திக்கொள்ளமுடியாட்டில்
இப்பிடி ஒரு வடிகால் கட்டாயம்தேவை...அது கானாக்காரியாய் இருந்தால்
என்ன....ஜெர்மன்காரியாய் இருந்தால் என்ன...ஒரு பெண்ணாக இருந்தால் சரி.''
''ஸ்ரொப் இற் ஐசே..''என்று கத்தினான் விமல்.அவனுடைய அதட்டலில்
கிறிஸ்தோபரே ஒருகணம் அதிர்ந்துபோனான்.
''கிறிஸ்டி...நீ எதை நினைச்சுக்கொண்டு இப்பிடி எல்லாம் கதைக்கிறை...'?
என்ரை மனத்தை என்னாலை எப்பவும் கட்டுப்படுத்திக்கொள்ளமுடியும்...
நீ நினைக்கிற அளவுக்கு நான் சபலபுத்திக்காரனோ அல்லது காமாந்தகாரனோ
இல்லை..''
''சரிவிடு ...இதுக்கு ஏன் இப்பிடிக்கூச்சல்போடுகிறை...'?''என்று சமாதானப்
படுத்தினான் கிறிஸ்தோபர்.
''விமல் உன்னை எனக்குத்தெரியும்....சும்மா பகிடிக்குத்தான் அப்பிடிக்கேட்டன்..
உன்ரை அறைக்குள்ளை கனநேரமாய் ஒரு கானாக்காரி இருந்திட்டுப்போறாள்
எண்டு வெளியிலை சிலபேர் கதைச்சாங்கள்... நீ அப்பிடி இல்லை எண்டு
அவங்களுக்கு விளங்கப்படுத்திப்போட்டுத்தான் வந்திருக்கிறன்...''என்றான்
கிறிஸ்தோபர்.
சப்பாத்துக்களைக்கழற்றி ஒருபுறமாகத்தள்ளிவிட்டு-
ஐரோப்பிய ஆடைகளிலிருந்து தேசிய உடைக்கு மாறினான் அவன்.
''உனக்குத்தெரியாது விமல்...முந்தாநாள் இரவு இதே கறுப்பிக்கு
நான் பத்துமார்க் கொடுத்தன்.''என்ற கிறிஸ்தோபரை நம்பிக்கையற்ற
விழிகளால்நோக்கினான் விமல்.
''அவளிலை இரக்கப்பட்டுத்தான் அதை நான் கொடுத்தன்...ஆனா.அதுக்குப்
பிரதிபலனா ஏதாவது தராமல் அதைவாங்கமுடியாதெண்டு அவள்
சொல்லிட்டாள்...அதாலை அவளைக் கொஞ்சநேரத்துக்கு நான் வாங்கிட்டன்.''
''இது உனக்கு அவசியம்தானா கிறிஸ்டி'?''என்று தணிந்தகுரலில் கேட்டான்
விமல்.
''நாம் நமக்காக வாழாட்டிலும் மற்றவங்களுக்காகவாவது வாழத்தான்
வேணும்...அந்தக்கறுப்பி பாவம்..அவளும் எங்களைப்போல அகதியாக வந்தவள்

...அவளுக்கு நம்மாலான உதவியைச்செய்யவேணாமா?''
''இதை உதவியெண்டா சொல்கிறை?''
''அப்பிடித்தான் அவள் நினைக்கிறாள்.''
''இதேமாதிரி ஒரு உதவியை ஒரு தமிழ்ப்பெண்கேட்டால் உன்னாலை செய்யமுடியுமா கிறிஸ்டி..?''
விமலின் அந்தக்கேள்விக்கு கிறிஸ்தோபர் உடனே பதில் சொல்லவில்லை.
''என்ன கிறிஸ்டி பதிலையே காணோம்.?''
''விமல்... காலகாலமாக நாங்கள் கட்டிவளர்த்த பண்பாடுவேறை... இந்தநாட்டின் கலாச்சாரம் பண்பாடுவேறை...இங்கை ஒரு தமிழ்ப்பெண் இப்பிடி நடந்துகொள்ளமாட்டாள்...அப்பிடியே அபூர்வமாய் நடந்துகொண்டாலும் அதுக்காக அவளை நான்வெறுக்கமாட்டன்....இங்கை இருக்கிறவரைக்கும்.... ஆனா அவள் தமிழ்மண்ணிலை கால்பதிக்கிறதையும் நான் அனுமதிக்கமாட்டன்.''
''இதிலை உன்ரை சுயரூபம்தெரியுது கிறிஸ்டி...நீ மன உணர்வுகளுக்காக வாழ்கிறவனில்லை...கணநேர உடல் உணர்ச்சிகளுக்கு அடிமையானவன்.''
''அதிலென்ன தப்பு?''என்று சிரித்தான் கிறிஸ்தோபர்.
''வயிற்றுப்பசிக்காக நாங்கள் சாப்பிட்டாலும் அது வாய்க்கும்ருசியாக இருக்கவேணும் எண்டுதானை நாங்கள் விரும்பிறம்...இதிலை எது எங்களுக்கு அவசியம்?...என்னைப்பொறுத்தவரைக்கும் பசியைவிட ருசிதான் முக்கியமாய்த் தெரியுது.இல்லாட்டில் இந்தக் காம்ப்பிலை ஜெர்மன்காரன் தருகிற கூழையும் பன்றி இறைச்சியையும் விட எங்கடை அரிசிச் சோறும் மீன்குழம்பும்தானே எங்களுக்குப்பெரிசாய்த்தெரியுது.''
''சும்மா குழப்பாதை கிறிஸ்டி ..!''என்றான் விமல்...
''உண்மையிலை நீ அந்தக்கானாக்காரியிலை இரக்கப்படேல்லை...உன்ரை தேவைக்கு அவளைப்பயன்படுத்திப்போட்டு அதுக்கு விலைகொடுத்திருக்கிறை..''
''எப்பிடிவேணுமெண்டாலும் வைச்சுக்கொள்...என்னைப்பொறுத்தவரைக்கும் அவளோடை அனுபவிச்சதைவிட அவளுக்கு உதவிசெய்தன் எண்ட திருப்திதான் எனக்கு அதிகமா இருக்குது.''
''பொய்சொல்லாதை கிறிஸ்டி..உன்னட்டை உதவிகேட்டுவந்தவள் ஒரு வியாதிக்காரியாக இருந்தால் இதே உதவியை அவளுக்கு நீசெய்திருப்பையா...? அதிலை நீ திருப்திப்பட்டுக்கொள்ளத்தான் முடியுமா?''
''உன்னுடையகேள்வி நியாயமானதுதான்'' என்று சிரித்தான் கிறிஸ்தோபர். விமலின் அருகே படுக்கையில் வந்து அமர்ந்துகொண்டவன் விமலின் தோளில் மெள்ளத்தட்டிக்கொடுத்தான்...
''விமல் இன்னுமா என்னை உன்னாலைபுரிஞ்சுகொள்ளமுடியேல்லை..பிறந்த மண்ணைவிட்டு இத்தனை ஆயிரம் மைல்களைக்கடந்துவந்து இங்கையும் இன்னல்பட்டுக்கொண்டிருக்கிற நான் கேவலம் பெண் இன்பத்துக்காக அலைவன். இல்லைவிமல்...அவள் என்னட்டைவரவுமில்லை...நான் காசுகொடுக்கவுமில்லை.... சும்மா உன்னை அறிகிறதுக்காக இப்பிடிக்கதைச்சன்....ஆனா..என்னை நீ பிழையாய் விளங்கிக்கொண்டிட்டை.''
''இல்லை கிறிஸ்டி...உன்னை எனக்குத்தெரியும்...ஆனா எந்த நல்லபண்புள்ள மனிதனையும் வெளிநாடுபாழாக்கிப்போடுமோ எண்ட சந்தேகம் எனக்கு இருக்குது...ஏனெண்டால் இங்குள்ள சூழ்நிலைகள்...இந்தநாட்டுக் கலாச்சாரம்....!''

''தைரியமாக இரு விமல்..!''என்றான் கிறிஸ்டி..
''மேலோட்டமாகப் பார்த்துவிட்டு எதையும் சட்டெனமுடிவுசெய்யாதை....
இந்தநாட்டுக்கலாச்சாரம் நீ நினைக்கிற அளவுக்கு மோசமானதில்லை
என்டது போகப்போக உனக்கு விளங்கும்.''

அத்தியாயம்: நான்கு.

''அடுத்த ஸ்ரேஷனிலை இறங்குவம்!'' என்றான் கிறிஸ்தோபர்.
நிலக்கீழ் ரயில்வண்டி இன்னுமொரு நிலையத்தில் வந்து தரித்தது.
தன்னிச்சையாகக் கதவுகளைத் திறந்துகொண்டது.
கிறிஸ்தோபரைத்தொடர்ந்தான் விமல்.
படிக்கட்டுக்களில் ஏறி தெருவுக்குவந்தார்கள்...
பனிகொட்டிக்கொண்டிருந்தது...
வண்ணவிளக்குகள் கவர்ச்சிகாட்டத்தொடங்கியிருந்தன...
மாலை ஐந்துமணிதான் என்றாலும் இரவாகிவிட்டிருந்தது...
நடைபாதையில்செல்லும் பாதசாரிகளைவிட தெருக்களில் வெளிச்சத்தைப்
பாப்பிக்கொண்டுசெல்லும் கார்களின் எண்ணிக்கைதான் மிக அதிகமாக
இருந்தது.
''காம்புக்குப் போகாமல் இங்கை எங்கை?''என்று கேட்டான் விமல்.
''என்னுடைய ப்ரண்ட்ஸ் கொஞ்சப்பேர் இங்கை இருக்கிறாங்கள்...
பாத்திட்டுப்போவம்..''
சொல்லிக்கொண்டே நடந்தான் கிறிஸ்தோபர்.
வழியில் செக்ஸ் பார் ஒன்றின்முன்னால் நண்பன் ஒருவன் எதிர்ப்பட்டான்.
''ஹலோ கிறிஸ்டி...என்னடா இந்தப்பக்கம்?''
என்று கிறிஸ்தோபரின் கையைப்பற்றிக்கொண்டான்.
''உங்கடை ரூமுக்குத்தான் வாறம் மச்சான்..''என்றான் கிறிஸ்தோபர்...
''ஆனா...ரூமிலை நீங்கள் ஒருத்தரும் இல்லைப்போலை இருக்கே?''
என்று புன்னகைத்த கிறிஸ்தோபர் செக்ஸ்பாரின்பக்கம் பார்வையைச்
செலுத்தினான்...
''ரஞ்சித் எங்கை...உள்ளேயா?''
''நீயும் வாவன் மச்சான் ஒரு ஷோ பார்ப்பம்'' என்ற புதிய நண்பனை
அவசரமாகத்தடுத்தான் கிறிஸ்தோபர்...
''வேணாம் சுரேஷ்...அதெல்லாம் நமக்கு ஒத்துவாது..''
சுரேஷின் பார்வை இப்போது விமலின் பக்கம் திரும்பிற்று.
''இது யார்..நியூ அட்மிஷனா?''என்று கேட்டுக்கொண்டே தன்
கோர்ட்டினுள்ளிருந்து சிகரட் பாக்கெட்டை வெளியே எடுத்தான் சுரேஷ்...
விமலிடம் நீட்டினான்...
''நோ.. தாங்க்ஸ்!''என்று அமைதியாக மறுத்தான் விமல்.
''நோ ஸ்மோக்..நோ டிரிங்க்ஸ் ..''என்று ஜெர்மானிய ஸ்டைலில்
தோள்களைக்குலுக்கி,கண்களைச்சிமிட்டிக் கிண்டல்பண்ணிவிட்டு,
ஒரு சிகரட்டைப்பற்றவைத்து..புகையை ஊதியவன்
அலட்சியமாகச்சொன்னான்:
''நீங்களெல்லாம் ஜெர்மனிக்கு வந்திருக்கப்படாது...எங்காவது காசி

ராமேஸ்வரம் போயிருக்கலாம்....!''
''என்னைப்பொறுத்தவரை ரெண்டுமே ஒண்டுதான்!''என்றான் விமல்..
''ஆசாபாசங்களைத்துறந்து கோயில் குளங்களுக்குப் போறதுதான் பக்தி எண்டில்லை...இப்பிடி வெளிநாடுகளுக்குவந்தும் மனத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு நல்ல பண்புகளோடை வாழ்கிறதும்கூடப் பக்திதான்...''
''இதெல்லாம் மேடைப்பேச்சுக்குத்தான் சரி..நடைமுறைக்கு ஒத்துவாது'' என்றான் சுரேஷ்.
''சரி...உன்ரை விவாதத்தை விட்டுப்போட்டு நட...ரூமுக்குப்போவம்..'' என்றான் கிறிஸ்தோபர்.
''ரஞ்சித் வரவேணாமா'?''
''சரி... அவன் வாறவரைக்கும் இங்கை வெயிற்பண்ணுவம்''என்றான் சுரேஷ்.

செக்ஸ்பார் பக்கமாக விமல் பார்வையைச்செலுத்தினான்...
கண்ணாடிக்காட்சி அறைகளில் வைக்கப்பட்டிருந்த ஜெர்மானிய அழகிகளின் பற்றறுத்தகோலங்கள்....
இளமையின் வனப்பு பொங்கித்ததும்பும் எழில்மேனிகள்....
இந்த அழகுகள் வெறும் நிழல்கள்தான்...நிஜங்களை உள்ளேவந்து பாருங்கள் என்று அழைப்புவிடுக்கும் தோற்றங்களில்....
ஆதிமனிதனுக்கு அறிவுவந்தபோது அவன் இலை தழைகளால் தன் மானத்தை மறைத்துக்கொண்டான்...
இந்தக்காலத்தில் மானமாவது மண்ணாங்கட்டியாவது....
மறைக்க மறைக்கத்தானே மனிதமனங்களில் ஆசைகள் வளர்கின்றன..
ஆபாசம்வளர்கிறது....
எல்லாவற்றையும் வெட்டவெளிச்சமாக்கிவிட்டால்...எதுவுமே இல்லையென்று ஆகிவிடுமே என்று தத்துவம் சொல்கிறமாதிரி...இந்தப்பெண்கள்....
இதில் என்ன கலை....'?
இது எந்தவகை ரசனை...'?
இதெல்லாம் எதற்காக...ஆசைகளை வளர்ப்பதற்கா..ஆசைகளைத் துறப்பதற்கா....'?
–விமலின் சிந்தனைகள் எங்கோ அலைந்தன...
''என்ன இந்தப்போஸ்களில் அப்படியே மயங்கியாச்சுபோலிருக்கே'?''
என்று சுரேஷ் கிண்டலடித்ததும் கிறிஸ்தோபரின்பக்கம் திரும்பினான் விமல்...
''கிறிஸ்டி...இதிலை நிற்கவே எனக்குச்சங்கடமாயிருக்குது...
நாங்கள் அறைக்குப்போவம்.''
''பயப்படதீர்...உம்மை ஒருத்தியும்வந்து கையைப்பிடிச்சு இழுக்க மாட்டாள்..தைரியமாக நில்லும்....''என்று சிரித்தான் சுரேஷ்...
''வெளிநாட்டுக்கெண்டுவந்திட்டால் ஓரளவுக்காவது இந்நாட்டுக் கலாச்சாரத்தை நாங்கள்பின்பற்றவேணும்...இவன்கடை நடைமுறைக்குத் தக்கமாதிரி எங்களையும் மாற்றிக்கொள்ளவேணும்...இல்லாட்டில் எங்களுக்கு விசர்ப்பட்டம் கட்டிப்போடுவாங்கள்!''

''ஆனா..இவங்களின்ரை கலாச்சாரம் செக்ஸ்பாரும்.டிஸ்கோவும் மட்டுமில்லை வேறை எவ்வளவோ இருக்குது..!''என்று இடைமறித்தான் கிறிஸ்தோபர்.
''அதென்னவோ....ஆனா..எனக்குத்தெரிஞ்சதெல்லாம் இது ரெண்டும்தான்..''
என்று சிரித்தான் சுரேஷ்.

சுரேஷின் அறையிலிருந்து கிறிஸ்தோபரும் விமலும் திரும்பிக் கொண்டிருந்தபோது இரவு மணி பதினொன்றைத்தாண்டியிருந்தது...
அவ்வப்போது விரைந்துசெல்லும் ஒரு சில கார்களைத்தவிர மற்றப்படி தெரு அமைதியாக இருந்தது...
''சுரேஷும் ரஞ்சித்தும் ஜெர்மனிக்குவந்து எவ்வளவுகாலம் இருக்கும்'?''
என்றுகேட்டான் விமல்.
''நாலுவருஷத்துக்குமேலை இருக்கும்''என்றான் கிறிஸ்தோபர்.
''அதுதான் அவர்களுக்கு ஊரைப்பற்றின நினைப்பே இல்லையோ''
''இவர்கள் மட்டுமில்லை விமல்...இவர்களைப்போல முன்புவந்தபலபேர் இப்படித்தான் குடியும் கூத்துமாகக்காலத்தைக்கழிக்கிறார்கள்...''
''இவர்களைத்திருத்தவே முடியாதா'?''
''திருத்துவதா..ஏன்'? இவர்கள் என்ன குற்றம் செய்கிறார்கள்'?''
''வந்தகாரியத்தை மறந்துவாழ்கிறதுகுற்றமில்லையா...'?
இவர்களை நம்பி எத்தனையோ சீவன்கள் ஊரிலை வாடிக்கொண்டிருக்க இவர்கள் இங்கை கூத்தாடுகிறது சரியான காரியம்தானா'?''
''இந்தக்குடியிலும் கூத்திலும் இவர்கள் சந்தோஷப்படுகிறதாய் நான் நினைக்கேல்லை விமல்.இதுவும் ஒருவகை விரக்திதான்...இதெல்லாம் பொய்யான இன்பங்கள் எண்டு இவங்களுக்குத்தெரியும்...இருந்தாலும் இவங்கள் இதைப் பழக்கப்படுத்திக்கொண்டிட்டாங்கள்...இவங்களைமாத்திறது சரியான கஷ்டம்.''
இருவரும் கதைத்துக்கொண்டே சற்றுத்தூரம்வரை வந்துவிட்டார்கள்...
சில மீற்றர் தூரத்தில் ஒரு குழுவாகச்சிலர் நிற்பது தெரிந்தது...
''என்ன கிறிஸ்டி ..அதிலை கொஞ்சப்பேர் நிற்கிறாங்கள்''
''ஸ்ரேடியத்திலை இண்டைக்கு ஏதாவது மச் நடந்திருக்கும்..''
''எண்டாலும் இவங்கள் இப்பிடிச்சத்தம்போட்டுக் கதைக்கிறதை நான் ஒருநாளும் கண்டதில்லை..!''
''சரி நமக்கென்ன நாமபோவம்...''என்றான் கிறிஸ்தோபர்.

ஜெர்மன் இளைஞர்களில் ஒரு முப்பது நாற்பதுபேர்வரையில் அந்தக்குழுவில் இருந்தார்கள்...
மொட்டைத்தலைகளுடனும்...கைகளில் பியர்போத்தல்களுடனும்...
''இவர்கள் நாசிஸ்'' என்றான் கிறிஸ்தோபர் மெதுவாக.
இவர்கள் அவர்களைக்கடந்துபோக முயன்றபோது-
ஒருவன் கிறிஸ்தோபரை வழிமறித்தான்.
''எய்...கொஞ்சம் நில்லு''என்று அதிகாரதோரணையில் டொச்சில் ஆணையிட்டான்.
அதற்குள் இன்னும் நாலைந்துபேர்வரை விமலையும் கிறிஸ்தோபரையும் சூழ்ந்துகொண்டார்கள்.எல்லோரும் அளவுக்குமீறியபோதையில் இருப்பது

தெரிந்தது.
முதலில் வழிமறித்த மொட்டையன் கிறிஸ்தோபரின் முகத்தை உற்றுப்பார்த்தான்.
''நீ பாகிஸ்தானியனா?'' என்று விறைப்பாகக்கேட்டான்.
''இல்லை'' என்றான் கிறிஸ்தோபர்...
''பங்களாதேஷி?''
''இல்லை''
''லெபனான்?''
''இல்லை''
''எந்தநாடு?''
''ஸ்ரீலங்கன்''
''பன்றிகளே நீங்களெல்லாம் ஜெர்மனியில் என்ன செய்கிறீர்கள்?'' என்று ஆவேசமாகக்கூச்சலிட்ட மொட்டையன் திடீரென கிறிஸ்தோபரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்....
அதேசமயத்தில் விமலின் உடம்பிலும் தடதடவென ஏழெட்டுக்கைகள் வந்துவிழுந்தன.
தொலைவில் எங்கோ பொலிஸ்வானின் இரைச்சல்கேட்டது...அடுத்தவினாடி அத்தனைமொட்டையன்களும் எங்கோ ஓடிமறைந்தார்கள்....
எதிர்பாராத தாக்குதலினாலும் அதிர்ச்சியினாலும் நிலைகுலைந்து போனவனாய் நிலத்தில் சரிந்திருந்த விமலை இரண்டுகரங்கள் ஆதரவாக அணைத்து நிமிர்த்தின...
விமல் பார்வையைக்கூர்மையாக்கிக்கொண்டபோது அமைதிதவழும் ஒரு ஜெர்மானிய இளைஞனின் முகம் எதிரில் தெரிந்தது.
''இஹ் பின் அலெக்ஸாந்தா!''
என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான் அவன்.

(அடுத்த இதழில் தொடரும்)


பூவரசு

இனிய தமிழ் ஏடு.

பூவரசு இனியதமிழ் ஏடு

இரண்டாவது ஆண்டுநிறைவை ஒட்டி
பூவரசு வாசகர்வட்டத்தினூடாக
நடாத்தும்
சிறுகதை,கவிதை,கட்டுரைப்போட்டிகள்
சிறுவர்,சிறுமியர்க்கான அறிவுப்போட்டிகள்

பூவரசு அடுத்த இதழில் விபரங்கள்
வெளியாகின்றன.

# எங்கள்
# இளந்தளிர்கள்






அன்பான தம்பி தங்கைகளே!
பூவரசு இனிய தமிழ் ஏடு-
தனது இரண்டாவது நிறைவையொட்டி
உங்களுக்கிடையே
அறிவியல்போட்டிகளை நடாத்திப்
பரிசுகள் வழங்கப்போகிறது
நமது தாய்மொழியிலும்
பொது அறிவிலும்
உங்களுக்குள்ள திறமைகளை
வெளிக்காட்டும் சந்தர்ப்பத்தை
பூவரசு
உங்களுக்குத்தரப்போகிறது.
அடுத்த பூவரசு இதழில்-
இதுபற்றிய முழுவிபரங்களை-
ஷோபா அக்கா
உங்களுக்கு அறியத்தருகிறேன்.

அன்புடன்
ஷோபா அக்கா

# தன்வினை


ஒன்றாய்ப் பழகிய ஆடுகள் இரண்டு
ஒன்றையொன்று முட்டிக்கொண்டன.
இரத்தம் குடிக்க அலைந்த ஒருநரி
இந்தச் சண்டையைப் பார்த்து ரசித்தது.
ஆடுகள் இரண்டும் மோதும்போது
அவற்றிலிருந்து பாய்ந்த இரத்தம்
குடித்துநரியும் குதூகலித்தது
கொல்லு கொல்லென சண்டையை வளர்த்தது.



நரியின் தந்திரம் சடுதியாய் உணர்ந்து
ஆடுகள் இரண்டும் ஒற்றுமைப்பட்டன.

எங்கள் இரத்தம் குடித்த நரியை
எப்படியேனும் வெல்வோம் என்று
மோதுதல்போல் அவை மீண்டும் முட்டின



மத்தியில் இரத்தம் குடிக்கவந்த
நரியார் இடையே மாட்டிக்கொண்டார்
சித்தம் கலங்கி இரத்தம்சிந்தி
சீக்கிரமாய் அவர் இறந்துபோனார்.

ஓரினம்தன்னைக் கோபம் மூட்டி
ஒன்றினை அழிக்க முயல்வோர் எல்லாம்
தாம் அதற்கங்கே பலியாவாரே.
தம்பி தங்கைகளே அறிவீர் நீரே!



கருத்து: ஷோபா அக்கா
கவிதை: இளந்தீவகன்.

சித்திரம்: அருண்.

அன்னை திரேசா. — கே. ஸ்ரீதரன்.
(தொடர்ச்சி)

மீண்டும் மீண்டும் அவர்மனத்தில் ஏழைக்குழந்தைகளின் இன்னல்களே நிழலாடியது. ''இறைவா! உன் படைப்பில் ஏழைக்குடும்பங்களுக்கு விமோசனமே கிடையாதா? அவர்களுக்கு வாழ்வு கொடுத்திட எனக்கொரு வழியைக்காட்டமாட்டாயா?'' என இறைவனிடம் மனதுருகி வேண்டினார் அவரது பிரார்த்தனைகள் தொடர்ந்தன. தன் விடாமுயற்சியை அவர் ஒருபோதும் கைவிடவில்லை. இடைவிடாத சிந்தனை,சலியாத உழைப்பு, ஓயாத பிரார்த்தனை இவைகளை மேற்கொண்டும் அவர் மிகுந்த ஏமாற்றத்துக்குள்ளானார். சேரிக்குழந்தைகளைப்பற்றியகவலைகளும்,தன்னால் அவர்களுக்கு உதவிபுரியமுடியவில்லையே என்ற ஏமாற்றமும் அவரை உடல் நலம் குன்றச்செய்தது. அன்னை திரேசாவின் ஆற்றல்களைக்கண்டு மடத்தில் உள்ளவர்கள் வியந்துபோனாலும், அவருக்கு ஓய்வுதேவை என்பதையும் அவர்கள் உணர்ந்துகொண்டனர். பலரின் வற்புறுத்தலினால் அவர் ஓய்வெடுக்கச்சம்மதித்தார். டார்ஜீலிங்க் பயணமானார். ஓடும் ரெயிலிலும் கூட அவரது சிந்தனைகள் சேரிக் குழந்தைகளையே சுற்றி வட்டமிட்டது. அவர்களின் நல்வாழ்விற்காகத் தான் செய்யவேண்டிய காரியங்களை அவர் திட்டமிட்டார். எழுதிவைத்துக்கொண்டார். ஓய்வெடுக்கச்சென்ற பல இடங்களிலும் அவர் புதிய திட்டங்களை உருவாக்கினார்.

தாய்நாட்டிற்காகத்தங்கள் உயிர்களை அர்ப்பணித்துக்கொள்பவரை தியாகிகள் என்கின்றோம்.உயரிய கொள்கைகளுக்காக தன்னலம் மறந்து வாழ்பவர்களை உத்தமர்கள் என்கின்றோம்.மக்கள் நல்வாழ்வுக்காக அல்லும் பகலும் பாடுபட்டவர்களை மகான்கள் என்கின்றோம். எந்தவித பிரதிபலனையும் எதிர்பார்க்காது சேவைசெய்யும் நல்ல சிந்தனை கொண்டவர்கள் மக்களால்

புகழப்படுகிறார்கள். சரித்திரங்களில் இடம்பெறுகிறார்கள். இவர்களின் எண்ணரிய செயல்களையும்,சிந்தனைகளையும், உலகம் என்றென்றும் மறப்பதில்லை. மனித நேயம் கொண்டவர்களை எப்படி மறக்க முடியும்? இத்தகைய பண்புள்ள மனம்,பிறர்நலத்திற்காக சேவைசெய்ய வேண்டுமென்று நினைத்துவிட்டால் அவர்களை யாராலும் தடுத்துவிட முடியாது. அன்னை திரேசாவும் தன் வாழ்வில் பல சோதனைகளைச்சந்தித்தார். ஒவ்வொரு கட்டத்திலும் தான் செயற்பட எண்ணும்போது அவைகள் நிறைவேறாமற்போகவே அவர்மனம் வேதனையில் மூழ்கினாலும் பொதுநலம் என்று இறங்கிவிட்டால் சோதனைகளையும் எதிர்ப்புக்களையும் தாங்கிக்கொள்ளவேண்டுமென்று தன்மனத்தைச் சாந்திப்படுத்திக்கொள்வார். உயரிய எண்ணங்களோடு மீண்டும் கல்கத்தா திரும்பினார். வழக்கம்போல் தன் பள்ளி அலுவல்களைத்தொடர அவரால் முடியவில்லை. (தொடரும்)


---

சூரியன்.



இருளை ஓட்டவருகிறான்
எங்கள் நல்ல சூரியன்
பகலை அளிக்கவருகிறான்
பளிங்குபோன்ற சூரியன்
கிழக்கிலிருந்து பிறக்கிறான்
பனியை விரட்டி மகிழ்கிறான்
மேற்கில்சென்று மறைகிறான்
மீண்டும்தோன்றி வருகிறான்.

*ஷோபா அக்கா*



குறுக்கெழுத்துப்போட்டி இல:2
விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ந | வ | ரா | க் | கி | ரி | | தி | பே |
| வெ | ஜி | க் | ட | க் | ஜி | | ரு | து |
| ள | | | | | | | வ | ரு |
| ஸ்ரீ | பா | க் | கு | ஸ்ரீ | ரி | ணை | ர் | தா |
| க் | | ஜெ | | | | | தி | ல |
| சு | | ஸ்ரீ | | | தி | | டு | கா |
| மு | | ல | | | னி | | த் | ல |
| கை | | தி | ஜா | மா | யு | ண | ம | ம |
| தி | க் | தீ | ணு | | ல் | | மா | கை |

சரியான விடைகளை எழுதி
பரிசுபெறுபவர்:


செல்வி: பிங்கலை இராஜேஸ்வரன்.
(எல்ஸ்டோர்ஸ்)

## குறுக்கெழுத்துப்போட்டி இல:3

அன்புத்தம்பி தங்கைகளே
உங்களுக்கெனத்தயாரிக்கப்பட்டிருக்கும் இந்தக் குறுக்கெழுத்துப்போட்டிக்குரிய சரியான விடைகளை எழுதி பூவரசு முகவரிக்கு யூலை 30ம் திகதிக்குமுன்பு அனுப்பிவையுங்கள்.
சரியானவிடைகளை எழுதியவர்களது பெயர்கள் அடுத்தபூவரசு இதழில் வெளிவரும்.
உங்கள் பெயர்களிலிருந்து குலுக்கல்முறையில் தெரிவுசெய்யப்படும் ஒருவருக்கு 10 டி.எம். பரிசாகக் கிடைக்கும்.

இடமிருந்து வலம்:

1-4 . உலகில் மிக நீளமான நதி.
6-10. உலகில் மிக உயர்ந்த மலை.
11-18. இறைச்சிகளில் இருக்கும் ஒருவகைச்சத்து.
31-33. தண்ணீர் எடுத்துச்செல்ல இது உதவும். (வ.இ.)
34-37. தாமரை மலரும் இடம்.
41-43. குதிரைக்கு இன்னொரு பெயர்.
61-67. இலங்கையில் உள்ள மிக நீளமான கங்கை.
71-72. மருத்துவமனையில் பணிபுரியும் பெண்கள்.
76-80. ஒரு பொதுமொழி.



மேலிருந்து கீழ்:

11-41. இலங்கையின் தலை நகரம்.
14-54. மாணவருக்குத்தேவையான முக்கியபொருட்களில் ஒன்று.
27-67. வாழ்க்கையில் மனிதனுக்கு முக்கியமானது.
29-59. வானில் தோன்றுவது.
30-80. எளிதில் கிடைக்கக்கூடிய பழம்.
38,68. சிறுவர்கள் செய்யும் சேஷ்டைகளை இப்படியும் சொல்வார்கள்.
55-85. நல்ல மரங்கள் கொடுக்கின்ற இது எப்போதும் நல்லதாகவே இருக்கும். (கீ.மே.)

# ஒரு பதில்!

அன்புள்ள பூவரசு ஆசிரியருக்கு!

ஆண்டுமலரில் வெளியான சந்திப்போம் சிந்திப்போம் பகுதியில்
எனது கடிதமும் தங்களின் பதிலும் இருக்கக்கண்டேன். அதனால்,
சிலவற்றை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.
பத்திரிகை உலகம் பற்றி என்னுள் தவறான அபிப்பிராயம் எதுவும்
கிடையாது.
நாம் நமது மண்ணையும்,நமது மக்களையும் மறக்காமல்
இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.
புலம் பெயர்ந்து வந்துவிட்டோம் என்பதற்காக நம் மொழி மறந்து,
பிறர்மொழிபேசுவதையே பெருமையெனக் கொண்டிருக்கும் நம்மவர்கள்மத்தியிலே
தாங்கள் ஆற்றும் தமிழ்ப்பணி பாராட்டக்கூடியதே.
பூவரசு அரசியலைக் கலக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை.
ஆனால்,அரசியல் வலைக்குள் கட்டுப்பட்டுவிடக்கூடாது என்றே விரும்புகிறேன்.
பூவரசு முதல் இதழில்—
எழுத்தாளன் என்பவன் யாருக்கும் கைதியில்லை என்றும் —
அவன் சுதந்திரமாய் எழுதவேண்டும் என்றும்—
அதேநேரம் மனிதநேயத்தோடு எழுதப்படும்
அனைத்து ஆக்கங்களையும் பூவரசு வரவேற்கும் என்றும் நீங்கள்
குறிப்பிட்டிருந்தீர்கள்.
அரசியலைக்கொச்சைப்படுத்தும் நோக்கத்தில் நீங்கள் அக்கருத்தைச்
சொல்லவில்லை.
ஏனெனில் எமது பிரச்சனையே அரசியலோடு பின்னிப்பிணைந்ததுதானே'?
நான் சுதந்திரத்துக்கு எதிரானவனும் அல்ல.
நல்ல கருத்துக்களை எவர் சொன்னாலும் எங்கிருந்து சொன்னாலும்
ஏற்றுக்கொள்ளவேண்டியது பூவாசுபோன்ற ஒரு பத்திரிகையின் கடமை.
அந்தவகையில்—
எல்லா விடயங்களையும் உள்ளடக்கியதாக பூவரசு இருக்கக்கண்டேன்.
நாம் மண்ணையும் மனிதர்களையும் நேசிக்கவேண்டும்.
மனிதசுதந்திரம் மிதிக்கப்படக்கூடாது:
மதிக்கப்படவேண்டும்.
எனவேதான்—
அரசியல் குறுக்கீடுகள் ஏதுமின்றி பூவரசு வளரவேண்டும்.
ஏதோ வெளிநாட்டுக்குவந்துவிட்டோம்...வசதியான வீடு,கார்,இப்படிப்பல....
இதைவிடச்செல்வங்கள் எமக்கு என்னவேண்டும்'.' என்று நினைப்பவர்கள் பலர்.
நல்ல கருத்துக்களும்,நல்ல இலக்கியங்களும் எமது செல்வங்களே என்பதை
அவர்கள் உணர்வதில்லை.
நாடுவிட்டு நாடு வந்தபோதும் —
நமது மொழியைப்பரப்பும் தங்கள் பணி தொடரவேண்டும்.

— கே. பஜீதாஸ்.



(சென்ற இதழ் தொடர்ச்சி)

# அவள்

நாட்டுநிலைமை மிகமோசமாகிக்கொண்டிருந்தது.
அரசு தமிழ்ப்பகுதிகளுக்கான உதவிகளைமட்டும் நிறுத்தவில்லை..
அரச ஊழியருக்கான ஊதியத்தைக்கூடத்தாமறுத்தது.
முடியவில்லையென்றுகூடச்சொல்லலாம். வயல் வாப்பு இவைகளை மிதித்தே அறியாதவர் விஸ்வபாரதி மாஸ்ரர்.
ஒருவேளைச்சாப்பாட்டுக்கே ஒருவர்முகத்தை ஒருவர்பார்க்கவேண்டியதாயிற்று.
இதற்குள் குமர்ப்பிள்ளைவேறு வீட்டில்.
விஷாலிக்கு பதினெட்டுவயது முடிந்துவிட்டது.
ராதாவுக்கு பசி பட்டினி எல்லாம் பழக்கப்பட்டதுதான்..ஆனால்
கணவனையும் மகளையும் பட்டினிபோட அவளால் முடியவில்லை.
கடன் கைமாற்று என்று எத்தனைநாட்களுக்குத்தான் அவளும் கையேந்துவது.
ராதா பரிதவித்துப்போனாள்.
வறுமை அவள்வீட்டிற்குள் வசதியாக வாழ்ந்துகொண்டிருந்தது.
விஸ்வபாரதியும் என்னதான் செய்வது?
அவருக்குத் தெரிந்ததெல்லாம் பள்ளிக்கூடம் ஒன்றுதான்..அதுவும்
மாதத்திற்கு ஒருநாள் நடந்தாலும் பாவாயில்லை. இந்தநிலைமையில்
அவர் யாரிடம் போவது?
முழங்கால்களுக்குள் முகத்தைப்புதைத்தவாறே மௌனமாக
அழுதுகொண்டிருந்தாள் ராதா.
அவளின் தலையை வருடியவாறே அருகில் வந்து அமர்ந்தார் விஸ்வபாரதி.
''ராதா...''
மிக அமைதியாக அழைத்தார்.
அவள் பார்க்கவில்லை.
விம்மல் சத்தம்மட்டும்கேட்டுக்கொண்டிருந்தது.

"தீவான்"

''நான் போகட்டுமா?''
கிணற்றினுள்ளிருந்து கேட்பதுபோலிருந்தது அவாது குரல்.
திடீரென்று தலையை நிமிர்த்தினாள் ராதா.
அவள் கண்கள் அழுது வீங்கியிருந்தன.
விஸ்வபாரதியின் கேள்வியில் இன்னும் வேதனையடைந்திருந்தாள்.
''எங்கை?''
''எங்கையாவது...வேறை நாட்டுக்கு''
ராதா அதிர்ந்தாள்....
''இல்லை..இல்லை....என்னாலை முடியாது....உங்களைப்பிரிஞ்சிருக்க என்னாலை முடியாது.''
அவாது மடியில் முகம்புதைத்து கதறினாள் அவள்.
விஸ்வபாரதியின் கண்களையும் கண்ணீர் நிறைத்துக்கொண்டது.
அவர் தனக்குள் அழ ஆரம்பித்திருந்தார்.
மனத்தைரியம் எங்கே போய்விட்டது.
''அழாதை....உன்னைவிட்டிட்டு நான் எங்கையும் போகமாட்டன்!''

எல்லாவற்றுக்கும் எப்போதும் ஒரு முடிவு காத்துக்கொண்டிருக்கிறது.
விஸ்வபாரதிக்கும் அப்படித்தான்.
வேறு தேசம் போகிறேன் என்று சொன்னபோது தாங்கிக்கொள்ளமுடியாத மனைவியைவிட்டு,வாழ்விக்கப்படவேண்டிய மகளைவிட்டு-
அவர் இப்போது வேறுலகம் போயிருந்தார்.
மாணம் சிலாதுபிரச்சனைகளிருந்து அவர்களைச் சுலபமாய் விடுவித்துவிடுகிறது.
விடுதலைக்காய்ப்போராடப்போனமகன் களத்தில் பலியாகிப்போனான் என்று செய்திவந்தவையோடு விஸ்வபாரதி மூச்சடங்கிப்போனார்.

விஸ்வபாரதி மாஸ்ரரை தெற்கு வடக்காகக் கிடத்தியிருந்தார்கள்.
கால்களின் இரண்டுபெருவிரல்களையும்சேர்த்துக் கட்டுப்போட்டிருந்தார்கள்.
இருபக்கங்களிலும்பச்சை வாழைமட்டைவைத்து நிறையக் கற்பூரம் கொழுத்தியிருந்தார்கள்.
தலைப்பக்கத்தில் நெல்... குத்துவிளக்கு..என தேவையான தளபாடங்கள்.
சக ஆசிரியர்கள்...மாணவர்கள் என வீடு தாங்காமல் வெளியில் பந்தல்வேறு போட்டிருந்தார்கள்.
இறுதிச்சடங்குகளை முடித்துவைக்க அவசரப்பட்டுக்கொண்டிருந்தார் குருக்கள்.
இவையொன்றையும் பார்க்க ராதா இல்லை.விஸ்வபாரதிக்குக் கீழே ஒரு பாயில் மயங்கிப்போயிருந்த அவளைக்கிடத்தியிருந்தார்கள்.
நினைவு வரும் நேரமெல்லாம் எழும்பி அந்த இரும்புக்கட்டிலில் தலையை மோதுவதும்...மயங்கிவிழுவதுமாக துவண்டுபோய்க்கிடந்தாள் அவள்..
அவளை எதிர்பார்க்காமலேயே ஊர்ப்பெரியவர்கள் இறுதிக்கடமைகளை நிறைவேற்றிக்கொண்டிருந்தார்கள்.
குருக்கள் சொல்லச்சொல்ல ஒவ்வொன்றாக நடந்துகொண்டிருந்தது.
விஸ்வபாரதியின் உடலை முழுக்காட்டி..அலங்கரித்து...மாலை அணிவித்து

தேவாரம் சுண்ணத்து பாடி.ஒவ்வொன்றாக முடிந்துகொண்டிருந்தது.
ராதாவின் கூறைப்புடவையை எடுத்து விஸ்வபாரதியைப் போர்த்தியிருந்தார்கள்.
அவளைக்கேட்காமலேயே அவளின் தாலியைக்கழற்றி அவருக்கு அணிவித்திருந்தார்கள்.
சகலதும் முடிந்தாயிற்று.
ராதாவுக்குக்கேட்காமலேயே சகலதும் முடிந்தாயிற்று.
ஒரு மனைவிக்குத்தெரியாமலேயே கணவனின் புறப்பாடு.
ராதா மெதுவாகக் கண்விழித்தாள்.
திடீரென எல்லோரையும் பார்த்தாள்.
அவள் அழவில்லை...கணவனுக்கு அருகில் வந்தாள்...
கட்டியணைத்து கண் மூக்கு உதடு நெற்றி எல்லா இடங்களிலும் முத்தமிட்டாள்.
அவளுக்குப்பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன'?
கணவரின் தலையைத் தன் இருகைகளாலும் தாங்கியவண்ணம் அவரின் முகத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் அவள்.
அவளது கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது.
அப்போதுதான் யாரோ கவனித்தார்கள்....
அவளின் நெற்றியில் இன்னும் குங்குமம். அது அழிக்கப்படவில்லை.
மறந்துவிட்டார்களா..'?
கவனித்தவர் மற்றவருக்குச்சொல்ல மற்றவர் மற்றவருக்கு...மற்றவர்...
இறுதியில் குருக்கள் சொன்னார்,
''ராதா...அந்தப்பொட்டு இனி இருக்கக்கூடாதம்மா...அதை நீயே கலைச்சிடு.''

பொட்டை அழிக்க கையை நெற்றிக்குக்கொண்டுசென்றவள் திடீரெனப் பின்னிட்டாள்.
ஏன்...எதற்காக...நான் அதை அழிக்கவேணும்...இது அவர் எனக்கு இட்ட பொட்டு...அவர் எனக்குத்தந்த குங்குமம்...அவருடைய நினைவு...
நான் வாழும் காலம் வரைக்கும் அது என்னுடனேயே இருக்கவேண்டும்....
அவர் நினைவு என்னுடனேயே இருக்கவேண்டும்....என்னைப்பொறுத்தவரைக்கும் இதுவெறும் குங்குமப்பொட்டல்ல....அவருடைய நினைவு.. அவரோடை நான் வாழ்ந்த வாழ்க்கைக்கு அடையாளம்.
திடீரென அவளின் சிந்தனை தடைப்பட்டது...
அன்றொருநாள் விஸ்வபாரதி வேடிக்கையாகச்சொன்னது காதில் மோதிற்று.

மேலதிக ஆசிரியப்பயிற்சிக்காக அவன் இரண்டு மூன்று நாட்கள் வெளியூர்போகவேண்டியதாயிற்று...இந்த மூன்று நாட்கள் ராதாவைப் பிரிந்துசெல்வது அவனுக்கும் மிகவும் சங்கடமாகத்தான் இருந்தது.
என்ன செய்வது..போய்த்தான் ஆகவேண்டும்.
முதலில் இதை ராதாவின் காதில் நாசூக்காகப்போடவேண்டும்.
மெதுவாக அவள் இருந்த கூடத்தைநோக்கி வந்தான்.
குளித்துவிட்டு ஈரம்தோய்ந்த தன் கூந்தலை முன்பக்கமாக எடுத்து உலர்த்திக்கொண்டிருந்தாள் அவள்.பின்னால்சென்று அவளை அப்படியே கட்டிக்கொண்டான் விஸ்வபாரதி.

கண்ணாடியில் அவன் உருவைக்கண்டவள் அப்படியே அவனுடன் சேர்ந்துகொண்டாள்.
செல்லமாக அவளின் சிறியவயிற்றை வருடியவாறே கடிதத்தை அவளின் கைக்குள் வைத்தான் அவன்.
வயிற்றினுள் விச்சு மூன்றுமாதம்.
கடிதத்தை வாசித்தவள் சிணுங்கினாள்.
''என்னங்க..என்னை தனியா விட்டிட்டு நீங்க கட்டாயம் போகத்தான் வேணுமா?...நானும் கூடவந்தா என்ன?''
''அதெப்பிடி ராதா...இந்த வயித்தோடை நீ பிரயாணம்செய்தா உனக்குத்தானே கூடாது...மூன்று நாள்தானே..கண்மூடிமுழிக்கமுதல் போயிடும்.''
''சாதாரணமா சொல்லிட்டீங்க நீங்க... ஆனா எனக்குத்தானே தெரியும் உங்களைப்பிரியிறவேதனை....''கண்கலங்கினாள் அவள்.
''என்ன ராதா சின்னப்பிள்ளை மாதிரி அழுகிற'' என்று சொன்னவன் கண்ணாடிக்குமுன்னாலிருந்த சிமிழில் இருந்து குங்குமத்தைத்தொட்டு அவள் நெற்றியில்வைத்தான்.
''என்னை நினைவு வாறநேரமெல்லாம் இந்தக்குங்குமப்பொட்டைக்கண்ணாடியில் பார்த்துக்கொள்..அப்போ என்னைப்பார்த்தமாதிரியே இருக்கும் ராதா'' வேடிக்கையாகச்சொன்னான் விஸ்வபாரதி.
''இந்தப்பொட்டை வைத்துத்தான் உங்களை நினைக்கவேணுமெண்டில்லை.. ஒருகணமாவது உங்களை மறந்தால்தானே நினைக்கிற அவசியமேற்படும்.'' ராதா சற்றுக் கோபமாகவே கேட்டாள்.
அதற்கு அவன் சொன்னான்..
''அப்படியென்றில்லை ராதா...ஒருவனுடைய நினைவென்பது நெஞ்சுக்குள்ளையே நிழலாய் ஆடிக்கொண்டிருப்பது..ஆனால் இது...இந்தச்சிவப்புப்பொட்டு... ஒவ்வொரு தடவையும் நீ இதை கண்ணாடியிலை பாக்கிறபோதெல்லாம் என்னையே பாக்கிறமாதிரி இருக்காதா? நான் பிரிந்துசென்றாலும் கூட இதைப்பார்க்கும்போது உனக்குமுன்னாலை நான் இருப்பதுபோல உணர்த்தாதா?...அந்த உணர்வு..ஒரு முழுமையாக இல்லாவிட்டாலும் சிறிய அளவிலாவது திருப்தி ஏற்படுத்தாதா?''

ராதா ஓ என்று அழுதாள். அவனுடையநினைவு அவளுக்குள் ஒரு பூகம்பத்தை..ஒரு பிரளயத்தை ஏற்படுத்தியது.
தன் இரு கைகளாலும் தலைமயிரை பிய்த்தவண்ணம் கதறினாள்...
''மாட்டன்...அழிக்கமாட்டன்...இந்தப்பொட்டை நான் அழிக்கவே மாட்டன்...''
அவள் கதறும் ஒலி அடங்கும் முன்னரே விஸ்வபாரதியின் உடல் அந்தத்தெருவின் சந்தியைத்தாண்டி..சுடுகாட்டைநோக்கி சென்றுவிட்டிருந்தது.

---

பூவரசு அடுத்த இதழ்
செப்டம்பர் 1ம் திகதி வெளிவருகிறது.
பூவரசு தனி இதழ் 4 டொச்ச மார்க்.
ஆண்டுச்சந்தா 30 டொச்ச மார்க்
(தபாற்செலவுடன்)

ராதாவின் கண்ணீர் கிணற்றுநீரினுள் சங்கமமாயிற்று.
புடவையால் கண்களைத்துடைத்தவாறே..கிணற்றினுள் இருந்து பார்வையை வெளியில் எடுத்தாள்.
தூரத்தில் ஓரிருவர் கிணற்றைநோக்கி வந்துகொண்டிருந்தார்கள்..
அவசர அவசரமாக வாளியைக்கிணற்றினுள் இறக்கி குடத்தை தண்ணீரால் நிரப்பினாள்.
சூரியன் மதியத்தை தாண்டி மேற்குநோக்கி நகர்ந்துகொண்டிருந்தான்.
மனம் நிறைந்த சுமைகளுடன் குடத்தையும் சுமந்துகொண்டு வீடுநோக்கி நடக்க ஆரம்பித்தாள் அவள்.
அவளை எதிர்பார்த்தபடி இன்னும் இரு ஜீவன்கள் வீட்டில் தவம் கிடந்தன.

மனம்நிறைய துயரத்தைச்சுமந்ததாலோ என்னவோ..
மீன்கொத்திப்பறவை ஒன்று மிக ஆழப்பறந்து தன் குஞ்சுகளுக்கு இரைதேடச்செல்லலாயிற்று.

(முற்றும்)

## ஆண்மகன்.

சமைஞ்சதனால் விளைஞ்சாளோ
விளைஞ்சதனால் சமைஞ்சாளோ
என என் சஞ்சலப்பட்டமனம்
தவிக்கிறதே உனை எண்ணி.
உன்னைக் கண்டு
விழிமூடமறந்திருக்கும்
விழி இமையும்
புல்லரித்துநிற்கும் என்மேனி மயிரிழையும்
உன்னில் உயிர்க் காதல்கொண்டு
உன் காதல் வரம்கேட்க
புரியாதவள்போல் நீயும்
புயலாகப்போவதுமேன்
பூந்தென்றல்பட்டாலே
புண்ணாகும் பூப்போன்றமேனிக்குள்
எந்காதல் ஏற்காத
கல்மனசை
எப்படிநீ தாங்குகிறாய்
கண்ணில்லா குருடனுமோ
காலிருந்தால் நடந்திடுவான்
உனக்கோ
கவிபாடும் கண்ணிருக்கும்
கலைநடனக்காலிருக்கும்
கனியோடு தேனிருக்கும்
கவியுவமைக்கடிபணிய அழகிருக்கும்
மழலைச் சிரிப்பிருக்கும்
மழலைபெற வாய்ப்பிருக்கும்
மனிதயின ஓய்வுக்காய் வருமிரவை
மதித்தின்பப் பூசைசெய்ய மனசிருக்கும்
மறந்தென்னை (நீ) மறைவதுமேன்.
உயர்பதவி உத்தியோக
மாப்பிள்ளைவேணும் என்றோ
உன்னில் காதல்கொள்ளா உடம்பினிலே
உன்வாழ்வை ஒப்படைத்து
உள்பூசல் இருந்தாலும்
வெளிவேஷ மதிப்பொன்றே பெரிதென்று
கட்டுக்கட்டாய்க் காசோடு
கடலலைபோல் நீயலைந்து
கடைசிவிலைத்தகராறில்
கண்ணீரில் நீ அமிழ்ந்து
ஆண்மகன் என்றாலே
காசுகறக்கும் வர்க்கம் என்று
அடியோடு வெறுக்காதே..
ஏன் என்றால்
உன் காதலையே சீதனமாய்க்கொள்வதற்கு
கால் கடுக்கக்காத்து நிற்கும்
நானும் ஓர் ஆண்மகன்தான்

*செ.யோகநாதன்.*



ஹம் நகர் ஸ்ரீ காமாட்சி அம்மை திருக்கோயில்

# மகா கும்பாபிஷேகம்.

இந்து இளைஞர் சங்கத்தின் பெருமுயற்சியாலும், ஈழத்தமிழ்மக்களின் ஒற்றுமையாலும்,ஆலய பூசகர் சிவ.ஸ்ரீ வி.ஏ.எஸ்.பாஸ்கரன் அவர்களின் முழுமுயற்சியாலும் சிறப்பான முறையில் ஆலயம் ஒன்று ஜெர்மனியின் ஹம் நகரில் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு ஸ்ரீ விநாயகர்,வள்ளி-தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமணியர், ஸ்ரீ காமாட்சி அம்மை,ஸ்ரீ சோமாஸ்கந்தர்,ஸ்ரீ சண்டேசர்,ஸ்ரீ லட்சுமி நாராயணர் ஆகிய மூர்த்தங்களுக்கு கடந்த வைகாசித்திங்கள் 28ம் நாள்(10.06.92)புதன்கிழமை காலை 6 மணியளவில் மகா கும்பாபிஷேகம், திரு பத்மசோதி குழுவினரின் மங்களவாத்தியத்துடன் தமிழ்நாடு சிவஸ்ரீ அ.சோமசுந்தர சிவாச்சாரியார் அவர்களாலும், வி.எஸ்.பாஸ்கர்,கேதீஸ்வரன் அவர்களாலும் முறைப்படி நடாத்தப்பட்டது.

அருள்மிகு காமாட்சி அம்மையைத்தரிசிக்க ஜேர்மனியின் பல நகரங்களிலிருந்தும் பக்தர்கள் வருகை தந்திருந்தார்கள். சபா,சித்தி ஆகியோரின் மரவேலைப்பாட்டுடன், ஹம் நகர் வாழ் யோகநாதன் கஸ்ரோப் ரவுக்சல் நகர் வாழ் திருச்செல்வம் இவர்களின் சிற்பவேலை ஆலயத்துக்கு சிறப்பைத்தர,கும்பாபிஷேக தினத்தன்று இந்து இளைஞர் சங்கரர் மன்றத்தால் ''வர்ண கவாடம்'' எனப் பெயர்சூட்டப்பட்ட ஓவியர் கிருபாகரின் ஓவியம் மெருகூட்டியது. அத்துடன் அம்பாளின் அலங்காரபூர்வமான கோலத்தைக்கண்ட மக்கள் உள்ளம் பூரித்தனர்.

ஆலயம் நிறுவுவதற்கு பலர் உதவிபுரிந்துள்ளார்கள்.எனினும் ஆலயம் இன்னும் பூர்த்தியடையவில்லை.இவ்வாலய பூர்த்திக்கு சைவத் தமிழ்மக்கள்தான் முன்வந்து தங்களால் இயன்ற பொருளதார சரீர உதவிகள் புரியவேண்டும்.காமாட்சி அம்மன் ஆலயம் முழுமைபெற்று திருவிழாக் கோலம் பூணவேண்டும்.அம்மையின் அருள் அனைவர்க்கும் கிடைக்கவேண்டும்.

ஆலயவளர்ச்சிக்கு உதவிபுரிய விரும்பும் அன்பர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்:

V.S.BASKAR
LANGE STR 243
4700 HAMM 1
Tel: 02381/441957.

(தகவல்: பரம்.)

# இலட்சியநெஞ்சம்

'வண்ணத்துப்பூச்சியில்' வெளியான 'இலட்சியநெஞ்சம்' என்ற கதை புத்தக மாக அடிக்கப்பட்டு, : தாயகத்தில் இன்னலுறும் மக்களுக்கு நிதி சேர்க்கும் கருத் துடன் விநியோகிக்கப்படவுள்ளது. இப்புத்தகம் உயர்ந்ததோ, சிறந்ததோ அல்லது கவர்ச்சியானதோ என்று நாம் சொல்ல வரவில்லை. அன்னைபூமியில் வாழ, வறண்டு நிற்கும் எம்முறவுகளுக்கு ஒரு சிறு ஈரப்பசுமையாவது இதன் மூலம் ஏற்படுத்தலாம் என்ற பெரு நோக்குடன் இம்முயற்சியை மேற்கொண்டுள்ளோம். இதற்கு உங்கள் அனைவரின் ஆதர வையும், ஒத்தாசையையும் எதிர்பார்க்கிறோம்.

இப்புத்தகத்தைப் பெற விரும்புவோர், கீழுள்ள கணக்கிலக்கமொன்றுக்குப் பணத்தை அனுப்பியபின், அதன் பற்றுச்சீட்டை எமக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

*தமிழர் புனர்வாழ்வுக் கழகம்*

TAMILS REHABILITATION ORGANIZATION
(T.R.O)
DRESDNER BANK KÖLN
KONTO: 470108201
BLZ : 370 800 40

Frau.Analeese Markmann
Amnesty International.
Konto . 42815460
BLZ . 44010046
Post Giro
4600 Dortmund.1

அல்லது எம்மிடம் அனுப்பி வைக்கலாம்.
V.NAGALINGAM
STADT SPARKASSE
3538 MARSBERG
KONTO: 4509287
BLZ : 47451235

தொடர்புகளுக்கு:

V. NAGALINGAM
HOMBOURGER STR. 2
3538 MARSBERG. 9
GERMANY.
TEL:. 02991/879


பூவரசு அடுத்த இதழில் ஆரம்பம்:

"குட்டித்திரையருகே கொஞ்சநேரம்...."

நம்மவர்களால் தயாரிக்கப்படும் தொலைக்காட்சி வடிவங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம்.

குழந்தைப் பேற்றின் 8 வாரங்களின்பின் கீழே தரப்பட்டுள்ள பயிற்சிகளைச் செய்துவந்தால் உடலில் தேவையற்ற தசைகள் ஏற்படாமலும், பிரசவத்துக்குமுன் விரிவடைந்த பகுதிகள் பழையநிலை அடைவதற்கும் பிரசவத்தின்பின்செய்யும் உடற்பயிற்சி உதவிபுரியும்.

பயிற்சிகள்செய்யும்போது சிறிது இறுக்கமான அல்லது இப்பயிற்சிக்கெனப் பாவிக்கப்படும் உடைகளை அணிவது விரும்பத்தக்கது. வெளிச்சுவாசம் என்று கூறப்பட்டுள்ள இடங்களில் நன்கு வெளிச்சுவாசம்செய்வதால் வயிற்றுப்பகுதி நன்கு சுருங்குகிறது. இளந்தாய்மார்க்கென இங்கு நடைபெறும் பயிற்சி வகுப்புக்களிலிருந்து சில பயிற்சிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றைத்தொடர்ந்துசெய்துவரவும்.



பயிற்சி 1:-

கால்களை அகலவைத்து இரு கைகளையும் மேலே உயர்த்தி இலகுவாக நின்று தலையை இருபக்கமாகவும் வட்டமாகச்சுற்றவும்.

பயிற்சி 2:-

இடப்பக்கமாக குனிந்து கைகளை அரைவட்டமாகச்சுழற்றி நிலத்தைத்தொடவும்.இந்நிலையில் வெளிச்சுவாசம் செய்யவும்.பின், வலப்பக்கமாகக்கைகளைச்சுழற்றி பழையநிலைக்குவரவும்.

பயிற்சி 3:-

நேரேநின்றுகொண்டு வலதுகாலையும் இடதுகையையும் படத்தில் காட்டியநிலையில் வைத்துநிற்கவும்.மீண்டும் பழையநிலைக்கு வந்து,பின் இடதுகாலையும் வலதுகையையும் இந்நிலையில்வைத்து நிற்கவும்.

பயிற்சி 4:-

இரண்டுகால்களையும் அகலவைத்து இருகைகளையும் உயர்த்தி மேல் உடற்பகுதியை வலப்பக்கமாகச்சரித்துநின்றுகொண்டு பின்,மேல்பக்கமாக வட்டமாக இடப்புறம் இதேநிலையில் நிற்கவும்.

பயிற்சி 5:-

நேராகநின்று இடதுமுழங்காலை உயர்த்தி உடற்பக்கமாக இருகைகளாலும் இறுகப்பற்றிக்கொண்டு நிற்றல்.இதேபோல வலது முழங்காலையும் செய்யவும்.

பயிற்சி 6:-

இருகைகளையும் நிலத்திலே ஊன்றி நுனிப்பாதங்களில்(படத்தில் காட்டியவாறு) இருந்து இரு முழங்கால்களையும் சேர்த்துவிரித்து பயிற்சிசெய்யவும்.

பயிற்சி 7:-

இரு முழங்கால்களையும் ஒன்றாகச்சேர்த்து வலப்பக்கமாகவும் இடப்பக்கமாகவும் திருப்பவும்.

பயிற்சி 8:-

ஒரு தலையணையில் தலைவைத்து நிமிர்ந்து படுத்துக்கொண்டு படத்தில் உள்ளதுபோல் இருகால்களையும் 90 ல் உயர்த்தி, ஒரு பாதத்தை நேராகவும்,மற்றைய பாதத்தை சாதாரணமாகவும் வைத்து பின் இதேபோல இருபாதங்களையும் மாறிமாறிச்செய்து பின் கால்களை நிலத்திலே ஊன்றி தசைப்பகுதியை அசைக்கவும்.

பயிற்சி 9:-


தலையணையில் தலையைவைத்து நிமிர்ந்துபடுத்துக்கொண்டு, இரண்டு கைகளையும் நீட்டியவாறு நிலத்திலே ஊன்றி வலதுகாலை நிலத்திலிருந்து சிறிது உயரே தூக்கி நீட்டியவாறு வைத்துக்கொண்டு இடதுகாலால் துவிச்சக்கரவண்டி ஓட்டுவதுபோலச் செய்யவும்.
இதேபோல வலதுகாலாலும் செய்யவும்.
தொடர்ச்சியான சுவாசம் செய்யவும்.சுவாசம் இடைநிறுத்தம் செய்யவேண்டாம்.

பயிற்சி 10:-


கால்களைநீட்டியவாறு நிமிர்ந்து நிலத்தில் இருந்து வெளிச்சுவாசநிலையில் கைகளைமுன்னேநீட்டி மேல் உடற்பகுதியை முன்பக்கமாக வளைத்து நன்கு வெளிச்சுவாசம் பின் உட்சுவாசம் செய்யவும்.

(பயிற்சிகள் அடுத்த இதழிலும் தொடரும்)

(9)



10



"பூவரசு" இனியதமிழ் ஏட்டில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பாவர்.
கதைகளில் இடம்பெறும் பாத்திரங்கள் எவரையும் குறிப்பிடுவன அல்ல.

# கண்ணீர் அஞ்சலி!



நிகழ்காலத் துயரங்களில்
மாபெரும் துயரம் உங்கள் மறைவு.
பிறப்போடு இணைந்ததே மரணம் என்று
நாங்கள் உணர்ந்தாலும்–
உங்கள் மறைவை எங்கள் மனம்
ஒப்புக்கொள்ள மறுக்கிறது.
உங்கள் அன்பு முகம் காலத்தாலும்
எங்கள் நினைவுகளிலிருந்து
பிரிக்கப்பட முடியாதது.
உங்கள் ஆத்மசாந்திக்காக
இறைவனை மன்றாடுகிறோம்.

சாந்தி பெறுக!

(30.05.92 அன்று அகாலமரணமடைந்த
திரு ஆறுமுகம் நவரத்தினம் அவர்களின் நினைவாக
பிறேமன் வாழ் நண்பர்களின் இரங்கல்)

---

கண்ணீர் அஞ்சலி!

தாலாட்டும் தாய் இல்லையே
தனதென்று சொல்ல தமிழ் என நினைத்தாய்
தமிழைமட்டுமா சுமந்துசென்றாய்
தமிழா நீ ஏன் வாழுகிறாய் என
கேட்பதுபோல் போய்விட்டாயே!
பாவியர் வாழும் உலகைப்பிரிந்தாயா
பதில் சொல்ல முடியாமல் தவிக்கின்றோம்.
கன்றை இழந்த பசுப்போல
கண்ணில்நின்ற உனை இழந்து
தவிக்கிறோம்.

(3.5.92 அன்று அகால மரணமடைந்த
புங்குடுதீவு கண்ணன் அவர்களின் நினைவாக–
பிளீஸ்காஸ்ரல் நகர் நண்பர்கள்)
தகவல்: இரா. கமலநாதன்
(Blieskastal)

# என் வாசகர்களைத்தேடி...

இந்துமகேஷ் அவர்கட்கு!
பலவருட இடைவெளிக்குப்பிறகு தற்செயலாக தங்களின்
மறுபடியும் நாங்கள் என்ற பழையகள் புதியபாத்திரத்தில்
ஊற்றியபடி கிடைக்கப்பெற்றேன்.இதை வாசித்தபோது வேதனையால்
வெம்பினேன்.சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும் அன்றைய கால
கட்டத்தைப் படம்பிடித்துக் காட்டுவதற்காகவும் உழைக்கவேண்டிய
கலை இலக்கியவாதிகள் அதற்கு எதிர்த்திசையில் மக்களைத்
திசைதிருப்பும்நோக்கோடு குதிரையுமல்லாது கழுதையுமல்லாது
கோவேறு கழுதைகளாக நாவல்களை உருவாக்குகிறீர்கள்...
இப்போக்குத் தொடருமாயின் சிறிதுகால வரலாற்று ஓட்டத்தில்
நீங்கள் மக்கள்விரோத சக்திகளாகி சாக்கடையில் தூக்கி எறியப்படுவது
தவிர்க்கமுடியாமலே நடந்தேறும்....
உங்கள் எண்ணங்களும் எழுதுகோல்களும் இணைந்துவிடுவதால் எமதுமக்களின்
பிரச்சனைகள் தீர்ந்துவிடுமா? நீங்களும் எத்தனையோ வருடங்களாகப்
பலகதைகளை எழுதியுள்ளீர்...மக்களை ஆராட்டி,தாலாட்டி
பிற்போக்குச்சகதியில் தூங்கவைத்து நீங்களும் தூங்கியதைவிட
வேறு என்ன கண்டிருக்கிறீர்?
.....சமுதாயம் புரட்சிகரமாகச் சிந்திக்க ஆரம்பித்துவிட்டால்
உங்களைப்போன்ற எழுத்தாளர்கள் ரோட்டில் துண்டுவிரிக்கவேண்டியதுதான்
என்பதைத்தெளிவாகக் காட்டிவிட்டீர்கள் போங்கள்!.''

இந்துமகேஷ் எழுதிய மறுபடியும் நாங்கள் என்னும் குறுநவீனத்தைப்
பற்றி அவனது வாசகர்களில் ஒருவர் (1986ல்) எழுதிய கடிதத்தின்
ஒரு பகுதி இது.
இந்துமகேஷை வம்புக்கிழுத்துச்சாட இந்தக்கடிதமே போதுமானதாக
இருந்தது.
''இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறாய்?'' என்றேன்.
இந்துமகேஷ் சற்றுநேரம் மௌனமாய் இருந்துவிட்டு ஆரம்பித்தான்.
''ஒரு எழுத்தாளன் இன்னதைத்தான் எழுதவேண்டும் என்று அவனை யாரும்
நிர்ப்பந்திப்பதில்லை.அவனது மன உணர்வுகளுக்கு ஏற்ப,சிந்தனை
விருத்திக்கு ஏற்ப அவனால் படைக்கப்படும் ஆக்கங்கள் சமுதாயத்திடம்
எடுத்துச்செல்லப்படும்போது சமுதாயத்தால் அங்கீகரிக்கப்படுகிறது
அல்லது நிராகரிக்கப்படுகிறது. ஒருவனது படைப்புக்கள்
சமுதாயத்தில் இடம்பிடித்துக்கொள்ளும்போது சமுதாயத்தின் ஒரு
பகுதியினர் அவனைச்சுற்றி ஒரு வட்டம்போட்டுவிடுகிறார்கள்.

— இந்துமகேஷ்.

அந்தவட்டத்துக்குள் நிற்கும்வரையில் அவனுக்கு அந்தக்குறிப்பிட்ட வட்டத்துக்குள் அங்கீகாரம் கிடைக்கிறது.அவனிடமிருந்து பெருமளவில் எதிர்பார்க்கவும்படுகிறது....அந்த எதிர்பார்ப்பில் ஒரு தளர்வுநிலை தோன்றும்போது அல்லது அப்படித்தோன்றுவதாய் தோற்றம் அளிக்கும்போது அவனில் தங்களுக்கேற்ற மாற்றத்தைக்கொணர அவனது அபிமானிகள் முயல்கிறார்கள்....அதை ஏற்றுக்கொள்ளாதபட்சத்தில் அந்தப்படைப்பாளி அவர்களிலிருந்து அந்நியப்படநேர்கிறது.

நியூவேவ் என்கின்ற புதிய அலை எழுத்துலகில் மிகவேகமாகப் பரவிக்கொண்டிருந்த 70களில் ''ஒரு விலைமகளைக்காதலித்தேன்'' என்னும் நவீனத்தின்மூலம் வீரகேசரி,மித்திரன் வாசகர்களிடையே நான் அறிமுகமாகியபோது,இந்துமகேஷ் என்கின்ற எனது புனைபெயருக்கு முன்னால்' நியூவேவ் எழுத்தாளர்' என்று அடைமொழியிட்டு என்னை அறிமுகப்படுத்தியது வீரகேசரி.

வீரகேசரிப்பிரசுரமாக வெளிவந்த எனது மூன்றாவது நவீனமாகிய ''இங்கேயும் மனிதர்கள்'' நவீனத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில்–

''சமுதாயத்தின் பளபளப்பான பகுதிகளைமட்டுமின்றி இருண்டுகிடக்கும் பகுதிகளிலும் தனது தீட்சண்யமான பார்வையைச்செலுத்தி அதில் வாழும் கூட்டத்தை தனது காவிய நாயகர்–நாயகிகளாக்கும் எழுத்தாளர்களில் இந்துமகேஷ் முதன்மையானவர் ''என்று குறிப்பிட்டது வீரகேசரி.

எப்போதுமே மனித மன உணர்வுகளை மென்மையாகத் தொட்டுச்செல்லவே நான் விரும்பிவந்திருக்கிறேன்.எங்கேயும் எப்போதும் மனிதத்தைத்தேடியே பழக்கப்பட்டிருக்கிறேன்.இன,மத,மொழி,வர்க்கமுரண்பாடுகளைக்கடந்து என்றும் நிலைத்திருக்கக்கூடியதான மனிதம், அடிப்படையில் எல்லா மனிதர்களிடத்தும் உள்ளடங்கிக்கிடப்பதாகவே நான் கருதுகிறேன்.


என் ஆரம்பகால நவீனங்கள் 'வயதுவந்தவர்கள்மட்டுமே' வாசிக்கத்தக்கவை என்னும் ஒரு கருத்தும் ஒருசில வாசகர்களிடையே அப்போது நிலவிற்று. நவீனங்களை வாசிக்கும் வயது வந்தவர்கள் ஆவலாய் வாசிக்கத்தக்க நவீனங்களாகவே அவை அப்போது இருந்தன என்பதனால்தான் அவைகள் வாசகரிடையே பெரும் வரவேற்புப்பெற்றிருந்தன.

வீரகேசரிப்பிரசுரமாக வெளிவந்த எனது முதல் நவீனமான ''ஒரு விலைமகளைக்காதலித்தேன்'' இந்துமகேஷை வாசகரிடையே பேசவைத்தது. இன்னும் அந்த நவீனத்தைப் பாராட்டும் வாசகர்களை நான் சந்திக்கிறேன்.

நல்ல கருத்துக்களை இலக்கியமாக்கி வாசகர்களிடையே நடமாட விடுவதில் ஒரு படைப்பாளிக்கு திறமையுடன் கொஞ்சம் துணிச்சலும் தேவைப்படுகிறது.வாழ்வோடு இணைந்துவிட்ட சில விஷயங்களைத் தொடமறுப்பதால் தங்களைத்தூய்மையானவர்களாகக் காட்டிக்கொள்ள முனைகிற எந்தப் படைப்பாளியும் மனிதத்திலிருந்து விலகிப்போவதாகவே நான் எண்ணுகிறேன்.

இப்படி நான் எழுதுவது விரசங்களுக்கோ,நச்சுப்படைப்புக்களுக்கோ வக்காலத்து வாங்குவதாகாது.விரசங்களும் அவற்றின் வழி பிறக்கின்ற நச்சுப்படைப்புக்களும் இலக்கியமாகிவிடுவதுமில்லை.

ஜெர்மனியின்' மௌனத்தில் அழுகின்ற மனங்களைத்தொடர்ந்து,
'விடியலுக்கில்லைத்தூரம்',நிலவிழிப் பாவைகள்',மறுபடியும் நாங்கள்'
என்று சில குறுநவீனங்களை நான் 80களில் எழுதிவெளியிட்டேன்.
இந்தவரிசையில் கடைசியாக எழுதப்பட்டநவீனம்தான் –
மறுபடியும் நாங்கள்.
நமது தாயகச் சூழ்நிலைகளைவைத்து நான் எழுதிய
இந்தக்கதையைப் பாராட்டியும், வரவேற்றும் நூற்றுக்கணக்கான கடிதங்கள்
வந்திருக்கின்றன.அவைகளுக்கிடையே இந்துமகேஷைச் சாடுமுயலும்
கடிதங்களும் ஒன்றிரண்டு.
மண்ணின் மணம் கமழ நாம் ஒருநவீனத்தைப்படைக்கும்போது
இன்றுள்ள சூழ்நிலைக்கு அப்பாற்பட்ட உணர்வுகளோடு பாத்திரங்களைப்
படைத்துவிடமுடியாது.
பொதுவாக எனதுகதைகளின் பாத்திரங்கள் சிலவேளை எனது
சொற்களுக்குள் கட்டுப்பட்டுகிற்காமல் தங்கள் உணர்வுகளுக்கேற்ப
நடந்துகொள்வதுமுண்டு.
என் பாத்திரங்களைப்போலவே அவைகளைப்பேசுகின்ற என் வாசகர்களும்!
அனேகமான என்வாசகர்கள் என்னோடுநின்று என் பாத்திரங்களைப்
புரிந்துகொள்கிறார்கள்.ஒரு சிலர்மட்டும் தங்கள் கருத்துக்களுக்கு
என்பாத்திரங்கள் ஒத்துவர மறுப்பதால் அந்தப்பாத்திரங்களையும்
அந்தப்பாத்திரங்களை உருவாக்கிய என்னையும் வெறுக்கமுனைகிறார்கள்.
மறுபடியும் நாங்கள் நவீனத்தில் வருகின்ற பாத்திரங்கள் சில,
நிகழ்கால அரசியல் அவலங்களோடு சிக்குண்டு போய்விடுகிறார்கள்.
அதை மேற்குறிப்பிட்ட என் வாசகரால் ஒத்துக்கொள்ள இயலவில்லை.
என்மீது அவருக்கு ஏகப்பட்டகோபம்.



கன்விவெடி.

அவள்,-
கண்ணுக்கு மையிட்டுக்கொண்டிருந்தாள்
கண்டவுடன்
காளைதனை
கடைவிழியால்-கண்ணிவைக்க,அவள்
கண்ணுக்கு மையிட்டுக் கொண்டிருந்தாள்

அவன்,-
தலைவாரிக் கொண்டிருந்தான்
தண்ணீர் குடமெடுத்து,
தளர் நடைபோட்டு
மெள்ள நடந்துவந்து
விஷ இதழால் படம் வரைந்து
கண்ணியமாய் காலைவாரும்
கன்னிமனம் புரியாமல்;-அவ்
வஞ்சி வருகைக்காய்- அவன்
தலைவாரிக்கொண்டிருந்தான்.

காதல் இன்று
காலாவதியாகிப்போயிற்றே!

*தீவான்*

ஆயினும் கடிதத்தை முடிக்கும்போது அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.
''...இந்தக்கடிதத்தை உங்கள் வாசகரின் கடிதமாக ஏற்று
எனது விமர்சனத்தில் ஏதேனும் குற்றமிருப்பின் அதையும் குறிப்பிட்டு
பதில்வரைவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.''
-இந்த வரிகளே அவர் என்னை எந்தளவு புரிந்துகொண்டிருக்கிறார்
என்பதற்குச் சாட்சியங்களாகிவிடுகின்றன.
அவர் என்னிடம் கோரியிருந்த முக்கியமான விஷயம்-
சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காக கலை இலக்கியவாதிகள்
உழைக்கவேண்டும் என்பதும்,வாழ்கின்றகாலத்தைப்படம்பிடித்துக்
காட்டவேண்டும் என்பதும்.
- நியாயமான கோரிக்கைதானே?
இதில் நான் கோபப்பட எதுமில்லையே!''

-இந்துமகேஷ் சொல்லி நிறுத்தினான்.
''அப்படியானால் வாசகர்களுக்கேற்ப உன்கருத்துக்களையும் நீ
மாற்றிக்கொள்வாயா?'' என்றேன் நான் குத்தலாக.
இந்துமகேஷ் புன்னகைத்தான்-
''எழுதுவது என் உரிமை...விமர்சிப்பது,ஏற்றுக்கொள்வது அல்லது
நிராகரிப்பது என் வாசகர்களின் உரிமை.''என்றான்.
எனது கையில் இன்னுமொரு கடிதம் சிக்கிக்கொண்டது.
மேலைநாடுகளிலுள்ள தமிழ்வாசகர்களைப்பற்றி ஒரு வாசகர்
இந்துமகேஷுக்கு எழுதியிருந்த கடிதம் அது.
அந்தக்கடிதமும் அதற்கு இந்துமகேஷ் சொன்ன பதிலும்-
அடுத்த இதழில்!

இக்கொடுமை.

தாய்நாட்டுப்பூமியிலே
தமிழ்த்தாயொருத்தி
பெற்றெடுத்து
தங்கமென வளர்த்திட்ட
நங்கை இவள்
விழிகளும்தான்
நாணிச்சிவந்தனவோ
இல்லை..இல்லை
சீதனத்தின் கொடுமையினால்
சிதைத்துபோன
வாழ்வை எண்ணி

சிந்திய கண்ணீரில்
சிவந்தனவே இவ்விழிகள்
சீதனத்தின் கொடுமையினால்
சிதையுண்ட பெண்ணினமே
பாரினிலே நங்கையர்கள்
படுகின்றவேதனையை
கூறிடுவீர் பிரமனிடத்தில்
குறைத்திடுவான் பெண்படைப்பை
எனினும் குறைந்திடாது
இக்கொடுமை.

- *க.ரஞ்சனா.*

*உங்களை அன்புடன் வரவேற்கிறது -*

**M.MURUGAVEL Im. & Export GmbH**

* ஆசிய உப உணவுப்பொருட்கள்
* மீன் நண்டு றால் வகைகள்
* சமையல் உபகரணங்கள்
* தங்கநகைகள்
* பட்டுப்புடவை வகைகள்
* ஆடவர்,பெண்கள்,குழந்தைகளுக்கான நவீன உடைகள்
* திரைப்படப்பாடல்கள் அடங்கிய
 AUDIO CASSETTE & CD வகைகள்

* மரக்கறிவகைகள்
 (பிரதி சனிக்கிழமைகள்தோறும் இறக்குமதியாகின்றன.)

*என்பனவற்றை மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.*
*இவற்றுடன்-*


* பழைய,புதிய திரைப்படங்களின் VIDEO CASSETTE
* மங்கலவைபவங்களுக்கேற்ற மணவறை
 அலங்காரப்பொருட்கள்
 என்பன வாடகைக்குத்தரப்படும்.
* விழா அழைப்பிதழ்கள்
 வீடியோ படப்பிடிப்பு
 போக்குவரத்துக்கான வாகன ஒழுங்குகள்
 என்பனவும் செய்துதருகிறோம்.

*உங்கள் தேவை எதுவாயினும் இன்றே வருகை தாருங்கள்!*

**M.MURUGAVEL Im.& Export GmbH**
**FALKEN STR-12**
**2800 BREMEN 1**

நிர்வாகி: கே.என்.தர்மபாலன்.

Tel: 0421/1690955 Fax: 0421/1690956


92 6 19
சின்னையா மகேஸ்வரனின்
சிந்தனையில் உருவான -
MUKONA
நாடக அரங்கிலிருந்து சிலகாட்சிகள்.
EIN THEATERSPEKTAKEL MIT KINDERN
NACH EINER IDEE VON HERRN MAHESWARAN